# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்


36



கலை இலக்கிய மாத சஞ்சிகை

புரட்டாதி – 2011

60/=



# நதியினுள்ளே...


## கவிதைகள்
சித்ரா சின்னராஜன்
பெரிய ஐங்கரன்
தாட்சாயணி
வே.ஐ.வரதராஜன்
ஷெல்லிதாசன்
அகியோபி
க.நவம்
கல்வயல் வே.குமாரசாமி
இ.ஜீவகாருண்யன்
பேருவளை றபீக் மொஹிடீன்
யோ.கலைவாணி
மன்னர் எம்.ஷிபான்

## சிறுகதைகள்
சுதர்மமகாராஜன்
பிரமிளா பிரதீபன்
ஸ்ரீகந்தராஜா கிருஷாந்தி
ஆனந்தி
அ:விஷ்ணுவர்த்தினி

## கட்டுரைகள்
தம்பு சிவா
மன்னூரான் ஷிஹார்
து.துசியந்தன்
ச.முருகானந்தன்
தவராஜா வசந்தன்
தி.ஞானசேகரன்
அருட்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின்

## சினமா
கே.எஸ்.சிவகுமாரன்

## நேர்காணல்
கவிஞர் ஏ.இக்பால்

## நூல் அறிமுகக் குறிப்புகள்
அர்ச்சுனன்

## கலை இலக்கிய நிகழ்வு

## பேசும் இதயங்கள்


அட்டைப்படம் - நன்றி இணையம்

# ஜீவநதி

**2011 புரட்டாதி இதழ் - 36**

**பிரதம ஆசிரியர்**
கலாமணி பரணீதரன்

**துணை ஆசிரியர்**
வெற்றிவேல் துஷ்யந்தன்

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank
Nelliady
A/C - 8108021808
CCEYLKLY

**அச்சமைப்பு:**
மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்
நல்லூர்



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செம்மைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.

- ஆசிரியர்



# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!

- பாரதிதாசன்-

## புதிய உத்வேகம் பெறுவோம்!

"ஜீவநதி"யின் நான்காவது ஆண்டு நிறைவுமலர் வெளியீடு அல்வாயில் உள்ள கலைஅகத்தில் சிறப்பாக இடம்பெற்றது. அழைப்பிதழில் குறிப்பிட்ட நேரத்திற்கு விழாவைத் தொடக்கி வைத்து குறிப்பிட்ட நேரத்தில் முடித்து வைத்ததில் மனத்திருப்தியாக இருந்தது. இதனால், முப்பது கிலோமீற்றர் தூரத்துக்கும் அப்பாலிருந்து வந்தவர்களும் கூட விழா முடியும் வரை இருந்து நேரத்திற்கே வீடு போய் சேரமுடிந்தது. அத்தோடு, எங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தந்த இன்னுமொன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். நோன்பு காலம் என்பதையும் கூட பொருட்படுத்தாது, அநுராதபுரத்திலிருந்து நாச்சியாதீவு பர்வீன், "படிகள்" ஆசிரியர் எல்.வஸீம்அக்ரம், மன்னாரிலிருந்து மன்னூரான் ஷிஹார் ஆகியோர் கலந்து கொள்ள வந்திருந்தனர். இவர்களோடு கூட கவிஞர் வதிரி சி. ரவீந்திரன், பி.அமல்றாஜ் ஆகியோர் கொழும்பிலிருந்து வந்திருந்தனர். விழா நிறைவு நிகழ்வாக இடம்பெற்ற கவிஞரங்கு எல்லோரினதும் பாராட்டைப் பெற்றது.

விழா முடிந்த கையோடு, சந்தாதாரர்களுக்கான "ஜீவநதி" ஆண்டு மலரினை அனுப்பி வைத்து, "மலர் அவர்களுக்குக் கிடைத்திருக்குமா?" என்று எண்ணிக் கொண்டிருந்தபோதே, அவர்களிடமிருந்தும் வாசகர்களிடமிருந்தும் கடிதங்கள் வந்து சேரத் தொடங்கி விட்டன. அவை பாராட்டுக் கடிதங்களாக மட்டுமல்லாமல், எமது நெஞ்சின் நெருடல்களுக்கு ஆறுதல் சொல்லி உற்சாகமூட்டுவனவாகவும் இருந்தன. எமக்கு பிரமிப்பாக இருந்தது. "ஜீவநதி" குடும்பத்தில் இணைந்து இவ்வளவு தூரம் பிணைப்புள்ளவர்களாக இவர்கள் இருக்கிறார்களே என்பதை அறிகின்ற போதே உற்சாகம் பீறிடுகிறது. இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டும், சாதிக்க வேண்டும் என்று ஆர்வம் மேலெழுகிறது. இவர்களுக்கெல்லாம் எமது நன்றி. இந்நேரத்தில் ஜீவநதி ஆண்டுமலருக்கென ஆக்கங்களைத் தந்த படைப்பாளிகளையும் விளம்பரதாரர்களையும் நன்றியோடு மனங் கொள்கின்றோம்.

- பிரதம ஆசிரியர்
க.பரணீதரன்



தம்பு சிவா

# மானிட வாழ்வின் பண்பாட்டுப் பதிவுகள் : ஒரு பார்வை

ஒரு சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகள், அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றோடு மட்டுமல்லாது பண்பாட்டுடனும் பிணைந்திருப்பதனையும் அவதானிக்க முடிகிறது. அரசியலில் – ஏமாற்றுதல், பொருளாதாரத்தில் – சுரண்டுதல் போல பண்பாட்டு ரீதியாகவும் சாதாரண மனிதன் காலா காலமாகப் பாதிப்புக்கு உட்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இது மனிதனின் அறியாமையும், மூடநம்பிக்கையின் வெளிப்பாடும் என்றும் கூறலாம்.

சமூக அமைப்பில் அரசியல் ஆதிக்கம், பொருளாதார ஆதிக்கம், பண்பாட்டு ஆதிக்கம் ஆகியவை நிலைபெற்றுள்ளன. மூன்றாவதாக அமையும் பண்பாட்டு ஆதிக்கம் சாதி வேறுபாடுகளை ஆழமாகக் கொண்டுள்ள எமது சமூகத்தில், அதற்கெதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு சில துறைசார் வெற்றிகளைப் பெற்றிருந்தாலும், முழுமையான நிலை தோன்றாமல் இன்றுவரை சாபக்கேடாகவே இருந்துவருகின்றது. வெளி உலகத்திற்கு, அத்தகைய வேறுபாடுகள் இல்லை என்று கூறிக்கொண்டாலும், அடிமனத்தில் ஆழமாகப் பதிந்திருப்பதை அவர்களுடைய நடவடிக்கைகள் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

இந்தியாவில் சாதிகளுக்கான கட்சிகள் உருவாக்கப்பட்டு அம்மக்கள் மனதில் சாதி உணர்வைத் தூண்டி சாதிப்பிரிவினையைத் தொடர்ந்தும் வளர்த்து வருகின்றன. இலங்கையில் சாதியை அடிப்படையாகக் கொண்டு கட்சிகள் தோன்றாத போதும் இனத்துவ அடிப்படையில் கட்சிகள் தோற்றம் பெற்றுள்ளன. மதம், மொழி, கலாசாரம் என்ற பண்பாட்டு ரீதியான தனித்துவங்களையும் அடையாளங்களையும் கொண்டுள்ளன. இவை மேலெழுந்தவாரியாகக் காணப்படும் ஒரு தோற்றப்பாடாக அமைந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது.

"பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலியனவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும்" என்று எட்வேர்ட் பேர்னாட் ரெய்லர் (E.B.TYLOR) என்ற ஆங்கில நாட்டு மானிடவியல் அறிஞர் தமது 'தொன்மைப் பண்பாடு' (PRIMITIVE CULTURE) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

"பண்பாடு என்பது ஒரு சமூகத்தில் கற்றறியப்படும் நடவடிக்கை" என்ற கருத்தையே ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்த அடிப்படையில் தான் றொபர்ட் ஹேலூவி என்பவரின் வரையறையும் அமைந்திருப்பதை நோக்கலாம். அதாவது,

"பண்பாடு என்பது ஒரு தனிநபர், தனது சமூகத்தினிடமிருந்து கற்றறியும் நம்பிக்கைகள், வழக்கங்கள், கலைநெறிகள், உணவுப் பழக்க வழக்கங்கள், கைவினைகள் போன்றவற்றின் ஒட்டு மொத்தத் தொகுப்பாகும். இவற்றை அந்தத் தனிநபர் தனது சுய படைப்புத்திறன் மூலம் அறியாமல், கடந்த காலத்தின் மரபுத் தொடர்ச்சியாக முறைசார் மற்றும் முறைசாரா கல்விமுறைகளின் மூலம் அறிந்து கொள்கிறார்" என்று விளக்கியுள்ளார்.

பண்பாடு பற்றி தெரிவிக்க முனைந்த மானிடவியலாளர் 'குரோபர்', "உணர்வுகள், பழக்கங்கள், தொழில் நுட்பங்கள், கருத்துக்கள், விழுமியங்கள் மற்றும் தூண்டப்படும் நடத்தைகள் கற்றறிவதாலும் மரபுத் தொடர்ச்சியாலும் பெறும் ஒட்டுமொத்தத் தொகுப்பு" என்று கூறியுள்ளார்.

பண்பாடு என்பது 'சமூகப் பாரம்பரியம்' என்றும், 'மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கை' என்றும், 'கற்றலின் மூலம் பெறும் நடத்தை' என்றும், 'நாடு – புவிப்பரப்பு – மொழி – இனம் சார்ந்ததான பண்பாடு வெளிப்பாடு' என்றும் பல்வகை அறிஞர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். இக்கூற்றின் மொத்த வடிவமாக 'மக்களைக் குறித்து பண்பாடு நிற்கின்றது' என்ற உண்மை புலப்படுகின்றது.

புராதனச் சமுதாயம் – அடிமைச் சமுதாயம் – நிலவுடைமைச் சமுதாயம் – முதலாளித்துவ சமுதாயம் என நான்கு வகையான சமூக அமைப்புக்கள் வரலாற்றில் இடம்பெற்றுள்ளன. இச்சமூக அமைப்புகளின் தோற்றத்திற்கு, பொருளுற்பத்தி முறையும் அதையொட்டி உருவாகும் வர்க்கங்களும் முக்கிய காரணிகளாக அமைகின்றன. இச்சமூகங்களில் நிலவும் பண்பாடானது குறிப்பிட்ட சமூக அமைப்பில்

நிலவும் பொருள் உற்பத்திமுறை அங்கு உருவான வர்க்கங்கள் ஆகியவற்றின் தாக்கத்திற்கு உட்படுகிறது. இதன் அடிப்படையில் குறிப்பிட்ட சமூகத்தில் வாழும் வர்க்கங்களைச் சார்ந்தே பண்பாடு தன்னை வெளிப் படுத்தி நிற்கிறது என்ற உண்மை வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

சமூகத்தின் பல்வகைப்பட்ட நிலைகளிலும் ஊடுருவி நிற்கும் பண்பாடானது அதிகாரத்தின் வெளிப் பாடாகவும், அடிமைத்தனத்தின் வெளிப்பாடாகவும் அமையும். வர்க்க வேறுபாடுகளையும், ஏற்றத் தாழ்வு களையும் மிகுதியாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பில் 'ஆளுவோர் பண்பாடு' — ' ஆளப்படுவோர் பண்பாடு' என ஒன்றுக்கொன்று முரணான பண்பாடுகள் நிலை பெற்றி ருப்பது தவிர்க்க முடியாததாகும். மக்களுடன் பிணைந்து நிற்கும் பண்பாடானது பல்வேறு அடையாளங்கள் வாயி லாக வெளிப்பட்டு நிற்கும். அவை ஆடை – அணிகலன் போன்ற புழங்கு பொருளாகவோ கல்வி – தத்துவம் – மருத்துவம் போன்ற அறிவுத்துறையாகவோ மட்டுமன்றி பயன்படுத்தும் சொற்கள், சொற்களின் தொனி, முகபாவங்கள், சைகைகள் மூலமாகவும் கூட பண்பாட்டு அடையாளம் வெளிப்படும். இப்பண்பாட்டு அடையாளங் கள் வெறும் அடையாளங்களாக மட்டுமன்றி அதிகாரம் குறித்த கருத்துருவாக்கமாகவும் அமைகின்றன.

அதிகாரம் குறித்த வெளிப்பாட்டை அறிந்து கொள்ள உயர்ந்தோர் (ELITE), அடித்தள மக்கள் (SUBALTERNS), பண்பாட்டு மேலாண்மை (CULTURAL HEGEMONY) என்ற மூன்றையும் குறித்துத் தெரிந்து கொள்வது அவசியம். உயர்ந்தோர் என்ற நிலையை நோக்கும் போது தாகூர் கூறியதை அவதானிப்போம். "பெயர் அறியப்படாத மக்கள் கூட்டத்தை காலந்தோறும் நாகரிகச் சமுதாயங்கள் தம்மகத்தே கொண்டுள்ளன. எண்ணிக்கையில் அதிகமான இக்கூட்டமானது மனிதர்களாக விளங்க நேரமின்றி சுமைதாங்கும் மிருகங்களாகக் காட்சி தருகின்றது. சமூகத்தின் வளங்களிலிருந்து தமது பங்காகக் குறைந்த அளவிலான உணவு, உடை, கல்வி ஆகியவற்றைப் பெற்று ஏனையோரிற்கு ஊழியம் செய்து வருகின்றனர். மிகவும் கடுமையாக உழைத்து உழன்றாலும் அவர்களுக்குக் கிடைப்பதென்னவோ ஏளனமும் அவமதிப்புந்தான். விளக்குத் தண்டைப் போன்று நாகரிக விளக்கை தன் தலையில் சுமந்து கொண்டு இக்கூட்டம் இருக்கிறது. விளக்கிலிருந்து கசி கின்ற எண்ணெயானது விளக்கைத் தலையில் வைத்துச் சுமப்பவர் மீது கசிந்து கொண்டிருக்க, மேல்நிலை மக்கள் விளக்கின் ஒளியைப் பெறுகின்றனர்" என்கிறார்.

சமூகவியல் அகராதி ஒன்று மேட்டிமையோர் என்பது குறித்துப் பின்வருமாறு வரையறுக்கின்றது. 'ஒரு சமுதாயத்தின் தனிமனிதர்களைக் கொண்ட ஒரு சிறுபான்மைக்குழு அல்லது ஒருவகைப் பிரிவினர் மேலாதிக்கம் உடையதாகச் சமூகத்தால் அங்கீகரிக் கப்பட்டு சமுதாயத்தின் பல்வேறு பகுதியினர் மீதும் தன் செல்வாக்கையோ கட்டுப்பாட்டையோ செலுத்துபவர்.'

உற்பத்தியையும் மூலதனத்தையும் ஒரு சிலரது கையில் குவிக்கும் பொருளாதார விதிகளைப் பின்பற்றி இயங்கும் சமூக அமைப்பில் மேல்தட்டு வர்க்கத்தினர் உருவாகின்றனர் என்ற யதார்த்தத்தை மேற்கத்திய சமூகவியலாளர்கள் வசதியாக மறந்து விடுகின்றார்கள். இந்த இடத்தில் ஏங்கல்சின் கூற்றை மேற்கோளாகக் காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

"முழுமையாக உழைக்கும் மக்கள் கூட்ட மானது அவர்தம் இன்றியமையாத உழைப்பில் முழுக் கவனம் செலுத்தி வருங்கால் அவர்களுக்கு உழைப்பின் தன்மை, அரச விவகாரங்கள், சட்டப் பிரச்சினைகள், கலை அறிவியல் போன்ற சமூகத்தின் பொதுவான விவகாரங்களைக் கவனிக்க நேரமில்லாது போகிறது. இத்தகைய நிலையில் ஒரு தனி வர்க்கம் தன்னை உழைப்பிலிருந்து முழுமையாக விடுவித்துக் கொண்டு மேற்கண்ட விபரங்களை நிர்வகிக்கும் உரிமையைத் தனதாக்கிக் கொள்கிறது. அத்துடன் தன்னுடைய சொந்த நலனுக்காக, உழைக்கும் கூட்டத்தின் மீது மேலும் மேலும் உழைப்புச் சுமையைத் திணிக்கிறது." என்று தெளிவுபடுத்தியுள்ளார். ஏங்கல்சின் இக்கூற்றின் அடிப்படையில் நோக்கினால் உடல் உழைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட ஒரு கூட்டமே மேல்தட்டு வர்க்கமாக உருப் பெற்றுள்ளதை அவதானிக்கலாம்.

மேற்குடியினருக்கு நேர்மாறாக எண்ணிக் கையில் அதிகமானவர்களாகவும் சமுதாயத்தின் வளங்களில் உரிய பங்கு பெறமுடியாதவர்களாகவும், குறைந்த அளவு உணவு, குறைந்தளவு உடை, குறைந்தளவு கல்வியைப் பெற்று வாழும் மக்கள் பிரிவினரே அடித்தள மக்கள் என்பதற்கு செய்யும் தொழில், அரசியல் ஆதிக்கம், பாலியல் நிலை, பொரு ளாதார நிலை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றிலோ அல்லது அனைத்து நிலையிலும் தாழ்ந்திருக்கும் மக்களென வரையறை செய்யலாம்.

"ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பொருளுற்பத்தி முறை என்ற அடித்தளமானது (BASIS) அச்சமூகத்தின் மேல்தளத்தில் (SUPER STRUCTURE) இடம் பெற்றுள்ளது. கலை – இலக்கியம் – சமுதாயம் – சமயம் – நீதிமுறை போன்ற பண்பாட்டுக் கூறுகளைப் பாதிக்கும் என்ற உண்மையை மார்க்ஸியம் எடுத்துரைக்கிறது. அதேநேரத்தில் மேல்தளத்தில் இடம்பெற்றுள்ள பண்பாட்டுக் கூறுகளும் தம் பங்கிற்கு அடித்தளத்தைப் பாதிக்கின்றன என்பதை யும் மார்க்ஸியம் குறிப்பிடுகின்றது." என்று 1890 இல் ஜோசப் பிளாக் என்பவருக்கு ஏங்கல்ஸ் எழுதிய

கடிதத்தில் இதனைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

25 – 01 – 1894இல் போர்ஜியஸ்க்கு எழுதிய கடிதத்தில் "அரசியல் – நீதிமுறை – தத்துவம் – சமயம் – இலக்கியம் – கலை ஆகியவற்றின் வளர்ச்சியானது பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு உள்ளது. ஆனால் இவையனைத்தும் தங்களுக்குள் ஒன்றுக்கொன்று எதிர்வினை புரிவதுடன் பொருளாதார அடித்தளத்தின் மீதும் எதிர்வினை புரிகின்றன" என்று ஏங்கல்ஸ் எழுதியுள்ளார்.

"வரலாறு என்பது வர்க்கங்களுக்கிடையே நிகழும் போராட்டம்" என்ற மார்ஸின் கூற்றை அரசியல் பொருளாதாரத் தளத்தில் மட்டுமன்றிப் பண்பாட்டுத் தளத்திலும் பொருத்திப் பார்ப்பதன் அவசியத்தை ஏங்கல்ஸின் மேற்கூறிய கடிதங்கள் உணர்த்துகின்றன.

மேலாண்மையும் சாதியமும் இணைந்து காணப்படும் சமூகத்தில் பின்வரும் மூன்று வழிமுறைகளில் அவை நிலை நாட்டப்பட்டுள்ளன.

01)பண்பாட்டு அடையாளங்களை மறுத்தல்
02)இழிவான பண்பாட்டு அடையாளங்களை வழங்குதல்
03)வழக்கிலிருக்கும் பண்பாட்டு அடையாளங்களை இழிவுபடுத்தல் அல்லது மாற்றியமைத்தல்
என்பனவாகும்.

சமயம் – சடங்கு – சம்பிரதாயங்கள் வாயிலாக மக்கள் மனதில் மூடக்கொள்கைகளை வேரூன்ற வைத்து, ஒரு சிறுபகுதியினர் மேலாண்மை செலுத்துவது இன்றும் நடைமுறையில் இருக்கிறது. வர்க்கப் போராட்டம் அரசியல், பொருளாதார, பண்பாட்டு நிலைகளில் முன்னெடுக்கப்படும் போது தான் மனித சமுதாயத்திற்கு விடிவு கிட்டும். அப் பொழுது தான் மனிதன் சுதந்திரத்துடன் தனது சமூகத்தின் பண்பாட்டு விழுமியங் களைத் தெரிந்து கொண்டு வாழத் தலைப்படுவான்

# பூவையர் கனவுகள்...



பூப்பினில் மலர்ந்த பூவே!
உனக்கும்
ஒரு வாழ்க்கைப் பூங்கா
காத்துக் கிடக்கிறது.
பருவகாலம் கனியும் போது
திருமணப் பூக்கள் மலர்ந்து
செந்தாமரைப் பாதங்களுக்கு
செங்கம்பளம் விரிக்கும்.
அதற்கிடையில்
உன் கயல் விழிகளைக்
கொள்ளையடிக்க
தூண்டில் போடும்
துட்டர்களிடம்
சிக்கிச் சீரழியும்
அவலம் எதற்காக...?

பருவ வயதில்
உன் உணர்வுகள்
கடிவாளம் இல்லாத
வாலிபக் குதிரைகளாய்
துள்ளிக் குதிக்கும்...
மாயக் கனவுகளால்
நரக வாழ்க்கையைத் தேடி
சவாரி ஓடும்...
காதல் சிறகை விரித்து
இருண்ட வானம் நோக்கி
பறக்கத் துடிக்கும்...

சோதரியே!
சொர்க்கம் ஒருநாள்
உன் வாசல் வந்து
வரம் கேட்கும்
நீ ஏனோ
மோகினிப் பேய் மயக்கத்தில்
பட்டாம் பூச்சிகளுக்கு
மாலை சூடத் துடிக்கிறாய்...?

காதலும் காமமும்
ஓர் உள்ளத்தில் இருந்து
தான் ஊற்றெடுக்கின்றன...
காதல் என்பது
காலம் கடந்தும்
உயிரில் வாழ்கிறது.
காமம் எப்போதும்
அழிவின் பாதையில்
மானத்தை விற்று
உடலோடு உறவு கொண்டு
வாழ்வை அழிக்கிறது.
இதனால்
தன் சவக்குழியை
தானே வெட்டி
தலை விரிகோல வாழ்வைத்
தத்தெடுத்துக் கொள்வதை
நீ உணர்வாயா...?

சித்ரா.சின்னராஜன்



# தம்மி

சுதர்மமகாராஜன்

தம்மியின் அம்மாவை இன்று பகல் மார்கட்டில் கண்டதிலிருந்து, என் மனமும், அதனைச் சுற்றிய நினைவுகளும் என்னிடம் இல்லை. அவை பலவாறு பல பக்கமாய் சிதறியோடின. பேப்பர் கடையிலிருந்து பேப்பர் வாங்கிக்கொண்டு திரும்புகையிலேயே, சுமணா ஆண்டி (Aunty) படிகளில் ஏறிக்கொண்டிருந்தார். ஆரம்பத்தில் அவர் என்னை அடையாளம் கண்டு கொள்ள தடுமாறினாலும், பின் சுதாரித்துக் கொண்டார்.

எடுத்தவுடன் ஆண்டியிடம் தம்மியைப் பற்றித் தான் விசாரித்தேன். ஏனெனில் அவள் என் பால்ய சிநேகிதி, சிநேகிதி மட்டுமல்ல. ஒரு காலத்தில் என் மானசீக காதலியும் கூட. அதனால் தான், அவளைப் பற்றி விசாரிக்க என் மனம் ஆவல் கொண்டது.

திடுதிப்பென்று தம்மியைப் பற்றி விசாரித்தது அவள் அம்மாவை ஒரு கணம் தடுமாற வைத்துவிட்டது. அதை அவருடைய மிரண்ட கண்களே காட்டிக் கொடுத்து விட்டன. அந்த மிரட்சியின் மறுபுறம் பெரிய சோகம் இருக்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை. தம்மியின் நலமான, சந்தோஷமான வாழ்க்கையைப் பற்றிய செய்தியை எதிர்பார்த்த எனக்கு, அவள் அம்மா கூறிய ரணவார்த்தைகள் நிலை தடுமாற வைத்து விட்டது.

கண்டியிலிருந்து சென்ற பின், இறுதியாக இரண்டு வருடங்களுக்கு முன், தம்மியை அவள் வீட்டில் போய் பார்த்தேன். அப்போது அவள் தன் கணவரோடும், ஒன்றரை வயது மகனோடும் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருப்பதை வீட்டில் அம்மாவுடன் பலமுறை கூறி மகிழ்ந்திருக்கிறேன். தம்மியின் கணவர் ஒரு இராணுவ வீரர். அவள் விரும்பியபடியே தன் கணவனாக ஒரு இராணுவ வீரன் அமைந்ததில் அவளுக்குப் பெரு மகிழ்ச்சியோடு பெருமையும் கூட.

அவள் என்னிடம் அடிக்கடி கூறுவாள், தான் கல்யாணம் கட்டினால் ஒரு இராணுவ வீரனைத் தான் கட்டுவேனென்று. அந்தளவுக்கு தன் இனத்தின் மீதும், இராணுவ வீரர்கள் மீதும் பற்று வைத்திருந்தாள். ஒரு காலத்தில் அவளுடைய இந்த உள்மனம் அறியாத நான், தம்மியின் பால் சொல்லவியலாத மையல் கொண்டிருந்தேன். பக்கத்து வீட்டு சிநேகிதி என்ற வகையில், அவளது கள்ளங்கபடமில்லாத, என்னுடனான நெருக்கமும், சிநேகமும், எனக்குள் அவள் மீது ஒரு தீயை வளர்த்து விட்டிருந்தது. சிங்களப் பெண் என்ற இனவுணர்வையும் தாண்டி அவள் மீது நான் கொண்டிருந்த ஆர்வத்தை அம்மா உணர்ந்திருக்க வேண்டும். ஒரு நாள் கூறினாள்.

“தம்பி... அடுத்த வீட்டு தம்மியோடை அளவுக்கதிகமா.. கதை வச்சிக்காத... பார்க்கிறவங்க தப்பா பேசுவாங்க...”

அப்போதெல்லாம் அம்மாவின் எச்சரிக்கை எரிச்சலை கொடுக்கும். சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் அம்மாவின் எச்சரிக்கை மறந்து, அவளுடன் பேசி மகிழ்ந்து நேரம் கழித்திருக்கிறேன். அவளும் கள்ளம் கபடமில்லாது என்னோடு சிரித்து பேசுவதும், சீண்டுவதும், அவளுடைய சுக, துக்கங்களை என்னுடன் பகிர்ந்து கொள்வது, என் அவள் மீதான எதிர் பார்ப்பை அதிகமாக்கின.

என் அம்மா எச்சரிக்கை செய்யுமளவுக்கு அவள் வீட்டில் அம்மாவோ, அப்பாவோ எம்முடைய இந்த நெருக்கமான உறவை கண்டு கொண்டதில்லை. தம்மி சொல்வாள்.

“அபே அம்மய், தாத்தய் மங்கென கொடாக் விஷ்வாசய்” (என் அம்மாவும், அப்பாவும் எம்மேல

ரொம்ப நம்பிக்கை.)

அவளுடைய அந்த வார்த்தைகள் எனக்குள் ஏதோ செய்யும். அவர்களது நம்பிக்கை சிதற நான் காரணமாகிவிடுவேனோ என்கிற பயம் அடிக்கடி வரும்.

ஆனால், அவர்கள் நம்பிக்கை சிதறியதோ? இல்லையோ? என் நம்பிக்கை ஒரு நாள் அவள் கூறிய வார்த்தைகளில் சிதறி சுக்கு நூறாகியது.

அன்று, பூரண, பௌர்ணமி. அவர்களுக்கு ஒவ்வொரு பௌர்ணமியன்றும் விகாரைக்கு செல்லும் வழக்கமிருந்தது. சில நாட்களில் நானும் போவதுண்டு. அன்றைய பௌர்ணமியில் அவர்கள் விகாரைக்குச் செல்லும் போது தம்மி என்னையும் அவர்களோடு வரும் படி வற்புறுத்தினாள். அந்த வற்புறுத்தலில் இருந்த கெஞ்சல், எனக்குள் அவள் மீதிருந்த பற்று ஒருபடி மேல் சென்று நம்பிக்கையளிக்கும்.

அவளது ஒவ்வொரு செயலிலும், சொல்லிலும் என் மீது காட்டும் கரிசனம் அவளும் என்னை விரும்பு கிறாள் என்ற நம்பிக்கை வேகமெடுக்கும். இப்படித்தான் ஒரு நாள் காலையிலேயே எம் வீட்டுக்கு வந்தாள். அன்று அவள் முகத்தில் ஒரு வித்தியாசம். மேலதிகமாக ஒரு அழகு சேர்ந்திருந்தது. என்றைக்குமே இல்லாது அவள் நெற்றியில் கருப்புப் பொட்டு வைத்திருந்தாள். என் மனம் மகிழ்ச்சியால் பூரித்துப் போனது. அதற்கான காரணம் கேட்டபோது, தான் கொஞ்சம் கொஞ்சமாக தமிழர்களின் பழக்கவழக்கங்களைப் பழகுவதாகக் கூறினாள்.

அவள் கூறிய அந்த வார்த்தைகள் என் மனதின் பூரிப்பை இருமடங்காக்கியது. இந்த பூரிப்பு அம்மாவின் சந்தேகப் பார்வையைக் கூட அலட்சியம் செய்தது. இப்படி பல நிகழ்வுகள். அவளது ஒவ்வொரு செயலும், சொல்லும் எனக்குள் அவள் மீதுள்ள எதிர்பார்ப்பைக் கூட்டியது.

நாங்கள் அன்று விகாரையில் புத்தபகவானுக்கு விளக்கு பற்றவைத்து, மலர் பூஜை செய்து வணங்கி விட்டு, விகாரையின் முன் வாசலிலுள்ள படி கட்டின் ஓரமாக அமர்ந்து கொண்டோம். அவளுடைய அம்மா வும், தங்கையும் விகாரைக்குள் அமர்ந்து கொண்டனர்.

அன்றைய அந்த சந்தர்ப்பத்தை என் எண்ணங் களை அவளுடன் பகிர்ந்து கொள்ள நல்ல வாய்ப்பாக கருதினேன். அன்றைய முழு பௌர்ணமி நிலா வட்ட மாய், அழகாக ஒளிர்ந்து கொண்டிருந்தது, அவளைப் போலவே.

என் எண்ணமெல்லாம் அவளில் இருக்க, அவள் நிறைய பேசினாள். புத்த பகவானின் போதனை கள் பற்றியும், தம் இனத்தின் வரலாறு பற்றியும் பேசி னாள். இறுதியாக எம் இரு இனங்களுக்கிடையேயான அடிப்படை ஐக்கியத்தையும், அதன் விரிசலையும் பற்றி பேசி என்னை ஆச்சரியப்படுத்தினாள். இருந்தும் என் எண்ணமெல்லாம் அவள் மனமறிதலில் குறியாக



இருந்தது.

என் எண்ணத்தை வெளிப்படுத்த ஒரு ஆரம்பமாக அவளிடம் கேட்டேன்.

"தம்மி, உங்க கல்யாணம் எப்படி நடக்கனும்னு எதிர்பார்க்கிறீங்க..."


என் அந்தக் கேள்வியில், தம்மியை ஒரு சில நிமிடங்கள் மௌனம் கதையாடியது. அது என் இதயத்தின் வேகத்தை அதிகரிப்பதாய் இருந்தது.

சில நிமிடங்களில் அவள் மௌனத்தைப் புறம் தள்ளி, தான் கல்யாணம் கட்டினால் ஒரு இராணுவ வீரனைத் தான் கட்டுவதாக கூறி என் நம்பிக்கைகளுக்கு குண்டு வைத்தாள்.

அவள் கூறிய அந்த வார்த்தைகள் அவள் மீதிருந்த என் எதிர்பார்ப்புக்களையும், கனவுகளையும் சுக்குநூறாக சிதறடித்தது.

அன்றைய அந்த அதிர்வின் பின் அவள் நினைவுகளிலிருந்து மீண்டு வருவதற்கு எனக்கு சில நாட்கள் எடுத்தன.

அவள் விரும்பியபடியே தம்மிக்கு மாப் பிள்ளையாக ஒரு இராணுவ வீரரே அமைந்து விட்ட தில் அவளோடு நானும் மகிழ்ந்து பெருமிதம் அடைந்தேன்.



அவளது கணவரின் பெயர் ருவன். அவர் முல்லைத்தீவில் உயர் இராணுவ பதவியில் இருப்பவர். அவர்களிருவரது திருமணத்திற்கு நான், அம்மா, அப்பா குடும்பமாகச் சென்று வாழ்த்தி மகிழ்ந்தோம்.

நாங்கள் இருந்த வாடகை வீடு தம்மியின் பெரிய மாமாவுக்கு சொந்தமானது. 2000ஆம் ஆண்டு அந்த வீட்டுக்கு குடியமர்ந்து கிட்டத்தட்ட ஆறு வருடங்கள் குடியிருந்தோம். அந்த ஆறு வருட காலத்தில் தம்மியின் குடும்பத்தினரோடு எமக்கிருந்த உறவு, நினைக்கவே அவை பசுமையான நாட்கள்.

தம்மியின் திருமணம் முடிந்து, சரியாக ஆறு மாதங்களில் எங்களுக்கு வீட்டை உரிமையாளரிடம் ஒப்படைக்க வேண்டிய கட்டாயம் வந்தது. அதன் பின் நாங்கள் வேறு வீடு எதுவும் பார்க்காமல் நேரடியாக எங்கள் சொந்த ஊரான வவுனியாவுக்கே வந்து விட்டோம். நாங்கள் ஊருக்கு வரும் போது தம்மி மூன்று மாத கர்ப்பிணியாக இருந்தாள்.

வவுனியாவுக்கு இடம்பெயர்ந்ததன் பின், தம்மியின் குடும்பத்திற்கும், எமக்குமிடையிலான தொடர்பு சிறுகச்சிறுக தூர்ந்து பின் காலத்தால் துண்டித்துப் போனது.

வெகு நாட்களுக்குப் பின், இன்று சுமணா ஆண்டியை (Aunty) கண்டதிலிருந்து, இம்முறை ஊருக்கு போகும் முன், தம்மியை எப்படியாவது சந்திக்க வேண்டுமென்று மனம் துடித்தது.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை. காலை ஒன்பது மணியளவில், தம்மியை பார்ப்பதற்காக பிலிமதலாவை பஸ்சில் ஏறினேன். பிலிமதலாவையில் இறங்கும் வரை பஸ்சிற்குள் அமர்ந்திருந்த என் மனது ஒரு இடம் தங்காது, அவளது நிலை குறித்து அவதிப்பட்டுக்கொண்டே இருந்தது.

பிலிமதலாவை டவுனில் இறங்கி, தம்மிக்கும், அவள் மகனுக்குமாக சில பழங்கள் வாங்கிக் கொண்டேன்.

தம்மியின் வீட்டை நெருங்கிய போது கேற் மூடியிருந்தது. வெளியிலிருந்து வீட்டை நோட்டம் விட்டேன். வீட்டின் முன் கதவு பூட்டியிருந்தது. கேற்றை திறந்து கொண்டு உள் நுழைய முற்படும் போதே, பக்கத்து வீட்டிலிருந்து ஒரு பெண்மணி எட்டிப்பார்த்தாள்.

தம்மி, அவள் மகனை பக்கத்திலுள்ள விகாரைக்கு ஞாயிறு பாடசாலைக்கு அழைத்துச் சென்றிருப்பதாகக் கூறினாள்.

விகாரை என்றவுடன், அந்நாட்களில் தம்மியுடன் விகாரையில் கழித்த நாட்கள் கண்முன் விரிந்து நின்றன. எவ்வளவு சீக்கிரம் நாட்கள் உருண்டோடி விட்டன. எல்லாம் நேற்று நடந்தது போல் இருக்கிறது.

ஞாயிற்றுக்கிழமைகளில் பௌத்த மாணவ மாணவிகளுக்கு விகாரைகளில் "தஹாம் பாசல" எனும் ஞாயிறு பாடசாலை நடப்பது வழக்கம். ஒரு காலத்தில் தம்மியும் ஞாயிறு பாடசாலைகளில் கற்பிக்க செல்வதைப் பார்த்திருக்கிறேன். வெள்ளை சீலையுடுத்தி, நேர்த்தியாக அவள் செல்லும் அழகு அந்நாட்களில் என் கண்ணை கிறங்கடித்திருக்கிறது.

காலை ஒன்பது மணிக்கு ஆரம்பிக்கும் வகுப்புகள் பகல் பன்னிரண்டு மணி வரை நடக்கும். இப்போது நேரம் பத்தரை. இன்னும் ஒன்றரை மணிநேரம் காத்திருக்க வேண்டும்.

தம்மிக்காக ஒன்றரை மணிநேரம் காத்திருப்பதில் எனக்கு ஒன்றும் கஷ்டமாக இருக்கப் போவதில்லை. ஏனெனில், அவளை இன்று பார்த்தேயாக வேண்டும். ஓரிரு வார்த்தைகள் பேசி ஆறுதல் கூற வேண்டும்.

தம்மி எப்போதும் உறுதியான கொள்கையுடையவள். அவள் நம் நாட்டின் மீது வைத்திருக்கும் பற்று மிக திடமானது. அதை நான் அவளோடு பேசிய பல நாட்களில் உணர்ந்திருக்கிறேன். ஒருமுறை என்னிடம் கேட்டாள்.

"தர்மண்ணே என்னத்துக்காக இந்த யுத்தம்...? எதுக்காக இந்த நாட்டை பிரிக்க சொல்றாங்க...? நாங்க எல்லாம் எவ்வளவு ஒற்றுமையா வாழுறம்."

நான் அவளிடம் சொல்வேன், தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்படுவதால் தான் அவர்கள் தனிநாடு கேட்கிறார்களென்று. அதிலுள்ள நியாயங்களை எடுத்துச் சொல்வேன். அதை அவள் பலமாக மறுதலிப்பாள்.

"நீங்க எவ்வளவு சொல்லுங்க, இந்த அரசியல்வாதிங்க தான் இதற்கெல்லாம் பதில் சொல்லணும்"

நான் நமுட்டுச் சிரிப்பாய் சிரிக்கும் போதெல்லாம் சொல்வாள்,

"என்ன பிரச்சினை இருந்தாலும், எப்போதுமே இந்த நாட்டை பிரிக்கிறதுக்கு அனுமதிக்க மாட்டேன்"

அவள் அப்படி கூறும் போது, முழு சிங்கள

சமுதாயத்தின் பிரதிநிதித்துவம் அவள் முக இறுக்கத்தில் உணரக்கூடியதாக இருக்கும்.

நான் நினைப்பதுண்டு, தம்மி ஒரு இராணுவ வீரனை திருமணம் முடித்தது கூட தன் நாட்டின் மீதுள்ள பற்றுதலால் தானென்று.

நேரம் போனதே தெரியாமல் தம்மியின் நினைவுகளை அசைபோட்டபடி கேற்றினருகே இருந்த கல்லில் அமர்ந்து கொண்டிருந்தேன். பாதையில் சென்ற ஓரிருவர் திரும்பிப் பார்த்து விட்டுச் சென்றார்கள்.

மணி பன்னிரண்டரையைத் தாண்டி விட்டது. நிற்பதா, போவதா என்று சஞ்சலப்பட்டுக் கொண்டிருக் கையில், தூரத்தில் பாதையின் வளைவில் வெள்ளை சீலையணிந்து வெண்ணிற பூவாக, அன்று பார்த்த அதே மிடுக்குடன், அவளைப் போன்று அழகான சிறுவனுடன் தம்மி வந்துகொண்டிருந்தாள்.

அருகில் வரவர அவளின் பார்வை என்னை ஆச்சரியம் கொண்டு பார்ப்பதாய் இருந்தது. ஆரம்பத்தில் சற்று யோசித்தவள் பின் என்னை அடையாளம் கண்டு கொண்டு, பழைய உற்சாகத்துடன் முகம் முழுக்க சிரிப்புடன் "ஹலோ தர்மண்ணே" என்று சிங்களத்தில் குதூகலித்தது, என்னை தர்மசங்கடத்தில் ஆழ்த்தியது.

ஓர் உணர்வுபூர்வமான சந்திப்புக்கு தயாராகிக் கொண்டிருந்த எனக்கு அவளது குதூகல வரவேற்பு என் இறுக்கத்தை சற்று தளர்த்தியது.

கேற்றை திறந்து, வீட்டினுள் அன்போடு அழைத்தாள். அவளது மகன் என்னை மிரட்சியோடு பார்த்தான். தம்மியையும் ருவனையும் கலந்து மிக அழகாக இருந்தான். அவன் கன்னத்தை தடவிவிட்டு கையிலிருந்த பழங்களை கொடுத்தேன். முதலில் வாங்க தயங்கியவன், தம்மியின் அனுமதியின் பின், வாங்கிக்கொண்டு நன்றி கூறினான்.

வீட்டிற்குள் நுழைந்தவாறே என் குடும்பத்தின் நலன்களை விசாரித்தாள். நான் அவள் அம்மாவைக் கண்டதைக் கூறினேன். ருவனைப் பற்றி அவளிடம் கதைக்கும் போது என் மனம் தடுமாறியது. குரல் இறுகி தளதளத்தது.

அவள் எதுவுமே பேசாது, என்னை அமர்ந்திருக் குமாறு கூறி உள்ளே சென்றாள். அவள் மகனை அருகில் எடுத்து அணைத்து மடியில் இருத்திக் கொண்டேன்.

அவனது பெயர் கேட்க, கெமுனு என்றான். எனக்கு வரலாற்றில் படித்த துட்டகாமினியின் ஞாபகம் வந்தது. அவனை அணைத்து கன்னத்தில் முத்தமிட்டேன்.

அவன் என்னிடமிருந்து விடுபட்டு, சுவரில் மாட்டியிருந்த படங்களில் ருவனின் படத்தைக் காட்டி னான். யாரது என்று கேட்டேன். சிங்களத்தில் "அப்பச்சி" (அப்பா) என்றான். பின் பெருமிடுக்கோடு அவர் ஆமி என்றான். அப்போது விரிவடைந்திருந்த அவன் கண்களிலிருந்த பெருமிதம் என்னை ஏதோ செய்தது.

தம்மி, தேநீர்க் கோப்பையுடன் வந்தாள். தேநீரை எடுத்துக் கொண்டு சுவரில் மாட்டியிருந்த படங்களைப் பார்வையிட்டேன். எல்லாப் படங்களிலும் ருவன் இருந்தான். முதலாவதாக இருந்தது அவர்களது திருமணப்படம். அதில் ருவன் இராணுவ சீருடை யணிந்து மிக மிடுக்காகக் காணப்பட்டான். தம்மியும் பட்டத்து ராணியாக அழகாக இருந்தாள்.

நான் படங்களைப் பார்த்தபடி நிற்க, தம்மி பின்னாலிருந்து ஒவ்வொன்றுக்கும் விளக்கமளித்துக் கொண்டே வந்தாள்.

இது கல்யாண போட்டோ, இது சிறுவயது கெமுனு, இன்னொரு படத்தைக் காட்டி இது ருவன் ஆமியில் பதவி உயர்வின் போது எடுத்த படம் என ஒவ் வொரு படத்தையும் குதூகலத்தோடு விளக்கினாள். அதில் அநேகமான படங்களில் ருவன் இராணுவ சீருடையிலேயே காணப்பட்டான். அவற்றைப் பற்றி விளக்கும் போது அவளிடமிருந்த ஆர்வம், எனக்கு பழைய தம்மியை ஞாபகப்படுத்தியது. அதே அழகு, அதே சுறுசுறுப்பு, என சந்தோசமாக அவள் இருப்பதைப் பார்க்கும் போது, ருவனின் இழப்பில் துவண்டு போயிருப்பாள் என்று எண்ணி வந்த எனக்கு பெரும் நிம்மதியாக இருந்தது.

சற்று நேரம் பேசியிருந்து விட்டு, அவளிடம் விடைபெற்று வெளியேற எத்தனிக்கையில் கெமுனு ஒரு பொருளோடு ஓடி வந்தான். அவன் கைகளில் ஒரு பதக்கம் இருந்தது. கெமுனு அதை என்னிடம் காட்டி "மாமா இது என்னுடையது" என உற்சாகத்துடன் காட்டினான்.

நான் தம்மியை பார்த்தேன். அவள் சிரித்தவாறே அதைக் கையிலெடுத்து,

"தர்மண்ணே, இது அவர் யுத்தத்துல வீரச்சா வடைந்த பிறகு, இராணுவத்தில் கொடுத்த அதியுயர் பதவிக்கான பதக்கம், அதை இவன் தான் வாங்கினான்."


அப்படி அவள் கூறும் போது அவள் முகம் பெருமிதத்தால் மிளிறி, கண்களில் கண்ணீர் துளிர் விடத் தொடங்கியது. அது துக்கத்தினாலா அல்லது பெருமிதத்தினாலா என்று எனக்கு வேறு பிரித்தறிய முடியாமலிருந்தது.

**ஜீவநதி வளர்ச்சிக்கென சிறுதொகைப் பணத்தை நன்கொடையாக அளித்த கனடா வாழ் து.ரமேஸ் அவர்களுக்கு எமது நன்றிகள்.**

மன்னூரான் ஷிஹார்

# மலையேறிப் போகிறதோ கலையார்வம்?

## ஒரு ஆதங்கம் அரங்கேறுகிறது



கலையென்பது இறைவனின் வரம். அது அவ்வளவு எளிதில் எல்லோருக்கும் கிடைத்து விடுவதில்லை. யார் வேண்டுமானாலும் தன்னை ஒரு கலைஞன் என்று அடையாளப்படுத்திக்கொள்ளலாம் மார்தட்டிச் சொல்லலாம். ஆனால் சமூகம் அவனைக் கலைஞனாக அங்கீகரிக்குமா என்பதுதான் கேள்விக் குறி. நான் உங்களோடு இங்கே பகிர விரும்பும் கருத்துக் களோ கலைஞர்கள் பற்றியதல்ல கலையிலக்கிய ஆர்வலர்கள் பற்றியது. ஒரு கலைஞனின் வளர்ச்சியிலும் வீழ்ச்சியிலும் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணி களுள் கலையிலக்கிய ஆர்வலர்கள் என்போர் மிகப் பிரதானமானவர்கள்.

குறிப்பிட்ட ஒரு துறை சார்ந்த ஆற்றல் என்பதன்மீது ஒருவரது மரபணு (Gene) மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்றபோதிலுங்கூட அத்துறை சார்ந்த ஆர்வம் என்பதன்மீது அது அவ்வளவாகச் செல்வாக்குச் செலுத்துவதில்லை என்றே கூறலாம். ஏனெனில், குறித்தவொரு விடயம் தொடர்பில் ஒருவர் கொண்டுள்ள ஆர்வம் அவர் வாழுகின்ற சூழற்பின்னணி யின் (Environmental Background) மூலமே பெரும் பாலும் தீர்மானிக்கப்படுகின்றது. வேறுவிதமாகக் கூறுவ தாயின், ஆற்றல் என்பதை உள்வாரியான காரணிகளின் (Internal Factors) செல்வாக்குகளை அதிகம் கொண்டுள்ள ஒரு எண்ணக்கருவாகவும் ஆர்வம் என்பதை வெளிவாரியான காரணிகளின் (External Factors) செல்வாக்குகளை அதிகம் கொண்டுள்ள ஒரு எண்ணக்கருவாகவும் உற்று நோக்கலாம். அதே நேரம் இவ்விரண்டு எண்ணக்கருக்களிலும் பிறிதொரு பிரதான வேறுபாட்டையும் அவதானிக்கலாம். அதாவது, ஒருவர் கொண்டுள்ள ஆற்றலை எந்தவொரு புறக்காரணியும் இல்லாமற் செய்துவிட முடியாது. அவரது ஆற்றலை வெளிப்படுத்தமுடியாமற் செய்யலாமேயொழிய அவ்வாற்றலை அவரிடமிருந்து பறித்துவிட முடியாது. ஆனால் ஆர்வத்தைப் பொறுத்தவரையில் அதனை ஏதேனும் புறக்காரணிகள் இல்லாமற் செய்யக்கூடிய சாத்தியம் நிறையவே இருக்கிறது. ஏதேனுமொரு புறக்காரணியின் தாக்கம் தொடர்ச்சியாக இடம் பெறுகின்றபோது குறித்தவொரு துறைமீது ஒருவர் கொண்டுள்ள ஆர்வத்தை இழக்கச் செய்வதற்கு அது ஏதுவாக அமையலாம்.

இந்தவகையில், நான் உங்களோடு கருத்துப் பகிர விளைவது எனது பிரதேசமாகிய மன்னார் மண்ணில் மக்களின் கலையார்வம் தொடர்பிலான தற்போதைய கள நிலவரம் எப்படியிருக்கிறது என்பது பற்றியே. மன்னார் என்பது சுமார் மூன்று தசாப்தங் களுக்கு முன்புவரை இயல், இசை, நாடகம் என முத்தமி ழின் கலைகளும் ஒருங்கே சேர ஆங்காங்கே கலை விழாக்களென்றும் கவியரங்குகளென்றும் களைகட்டி யிருந்த பிரதேசம்தான். அக்காலப்பகுதிகளில் நாடறிந்த பல கவிஞர்கள், நாடகக் கலைஞர்கள், நாவலாசிரியர்கள் இங்கு காணப்பட்டமை இதற்கொரு தகுந்த சான்று. அக்காலப்பகுதியில் நாடகக் கலைஞர் களாய்ப் பிரகாசித்தவர்கள் ஒரு சிலர் தற்போதும்கூட தென்னிந்தியத் திரைப்படங்களில் வாய்ப்புக்களைப் பெற்று சிறந்த நடிகர்களாக வலம்வந்து கொண்டிருக் கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு உதாரண மாய் 'மூன்று முடிச்சு' நடராஜா, நகைச்சுவை நடிகர் போண்டாமணி போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

அதன் பின்னரான காலப்பகுதியில் நாட்டை, அதுவும் குறிப்பாக நம் வடக்கை ஆட்கொண்டிருந்த கொடூர யுத்தம் காரணமாக மக்களின் கலைமீதான ஈடுபாடு படிப்படியாகக் குறைய ஆரம்பித்தது. மக்கள் தமது இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்கே பெரும் பிரயத்தனம் மேற்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்த அக்காலப்பகுதியில் கலைமீதும் ஈடுபாடு கொண்டிருந்திருக்க வேண்டும் என எண்ணுவது நியாயமில்லாத ஒரு எதிர்பார்ப்புத்தான். ஆயினும்,

கலையென்பது தமிழர் நம் வாழ்வியலோடும் கலாசாரத்தோடும் பின்னிப் பிணைந்த ஒன்றென்பதால் அது எக்காரணங்களாலும் மழுங்கடிக்கப்படுவதை யார்தான் விரும்புவர்?

வடக்கில் தமது இருப்பிடங்களைத் துறந்து நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கும் பிற நாடுகளுக்கும் இடம்பெயர்ந்த கலைஞர்கள் பலரும் அவ்விடம் பெயர்வின் அவல அனுபவங்களைக்கூடத் தமது கலை யாற்றல்கள் மூலம் தமக்குப் பரிச்சயமான கலை வடிவங்களில் ஏனையோருக்கு அறியப்படுத்தினர். இடம்பெயர் மக்களுள் பெரும்பாலோர் மீண்டும் தத்தமது பிறந்தமண் திரும்பியபோதிலுங்கூட அவர்களது பாரம்பரியக் கலைகள்மீதான ஈடுபாடு முன்னரைப்போல் அவ்வளவு திருப்திகரமானதாக இருக்கவில்லை. காரணம், அவர்கள் இன்னும் முழுமையாக அவர்களது இயல்பு நிலைக்குத் திரும்பியிருக்கவில்லை என்பதே.

மன்னார்ப் பிரதேசத்தின் அண்மைக்காலக் கலையிலக்கிய நிலை பற்றிப் பேசுவதாயின், ஒருபுறம் கலைஞர்கள் அவ்வப்போது தமது பணிகளைச் செவ்வனே புரிந்துவருகின்றமை மன மகிழ்வைத் தருகின்ற அதேவேளை மறுபுறம் கலையிலக்கிய ஆர்வலர்களிடத்திலே அப்பணிகளுக்கும் படைப்புகளுக்குமான பிரதிபலிப்பு (Reaction) எவ்வாறு இருக்கின்றது என்பதைப் பரிசீலிக்கின்ற போது மிகுந்த மனவேதனையை அது வரவழைக்கிறது. கடந்த ஐந்து வருட காலப்பகுதிக்குள் பல குறிப்பிடத்தக்க இலக்கியப் படைப்புகளை இலக்கிய உலகுக்குத் தந்திருக்கின்றது மன்னார்ப் பிரதேசம். பல காத்திரமான நாவல்களும் கவிதைத் தொகுதிகளும் ஏனைய கட்டுரைக் கோவைகளும் வெளிவந்திருக்கின்றன. வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. ஏன், ஒரு தமிழ்ச் செம்மொழி மாநாடே மன்னாரில் ஏற்பாடு செய்யப்பட்டு திறம்பட நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. இந்தப் பெருமை இதன் பின்னணியில் நின்றுழைத்த தமிழை நேசிக்கும் பெருந்தகைகளையே சாரும். இவ்வாறு, கலையிலக்கியப் பணியில் குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சியும் முன்னேற்றமும் தெரிகின்ற அதேவேளை கலையிலக்கிய நிகழ்வுகளிலே, குறிப்பாக ஆக்க இலக்கியம் தொடர்பான நிகழ்வுகளினும் படைப்புக்களினும் குறிப்பிடத்தக்க ஈடுபாடு மக்களிடையே இல்லாமை மிகுந்த மன வேதனையைத் தருகிறது. ஒரு இசைமேடைக்கோ அல்லது சினிமாத் திரைப்படத்திற்கோ அளிக்கப் படுகின்ற முக்கியத்துவமும் இடமும் நாவல்கள், கவிதைகள், இலக்கியக் கட்டுரைகள் போன்ற எழுத்திலக்கியங்களுக்கு அளிக்கப்படுவதில்லை என்கின்ற உண்மையை யாவரும் ஒத்துக்கொண்டாக வேண்டும். மேலே நான் குறிப்பிட்டவாறு ஒரு இசைமேடைக்கோ அல்லது சினிமாத் திரைப்படத்திற்கோ ஒன்றுகூடுகின்ற மக்கள் திரளுக்கும் இலக்கிய விழாக்களுக்கென ஒன்று கூடுகின்ற மக்கள் திரளுக்கும் இடையே காணப்படுகின்ற மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசமே இதற்குச் சான்று.


தங்கள் பிள்ளைகள் வைத்தியக் கலாநிதிகளாகவும் பொறியியலாளர்களாகவும் சட்டத்தரணிகளாகவும் வரவேண்டும் என்ற பிரயாசையில் கல்வியை மட்டுமே அவர்களிடம் திணிக்கும் பெற்றோர்கள் எழுத்திலக்கியங்கள் மீதான ஆர்வத்தையும் அவர்களுக்கு அளிப்பதற்கு முனையவேண்டும். அவர்களது எழுத்தாற்றல்களை வெளிக் கொணர்வதற்கான தங்களது போதிய பங்களிப்புக்களைச் செய்ய வேண்டும். இது கல்விசார் நடவடிக்கைகளிலேயே அதிக நேரத்தைச் செலவிடும் பிள்ளைகளின் மனஅழுத்தத்தை இல்லாமற் செய்வதோடு வாசிப்புப் பழக்கத்திலும் ஒரு பிரியத்தை ஏற்படுத்தும். அது மாத்திரமல்லாது பிள்ளைக்குத் தமிழ்மீதான ஒரு பற்று ஏற்படவும் அது ஏதுவாக அமையும் என்பதில் ஐயமில்லை. 'தமிழ்', 'தமிழ்' என்று வாய்கிழியப் பேசுகின்ற நாம் தமிழுக்காய் அப்படி என்னதான் செய்து விட்டோம்? தமிழ் இலக்கியங்கள்மீது நாம் ஆர்வம் கொண்டுதான் தமிழ் வளர்ந்துவிடப்போகிறதா என்ன. தமிழ் என்றோ எட்டமுடியாத உயரத்திற்கு வளர்ந்துவிட்டது. தமிழைக் கையாளுகின்றபோது நமக்குத்தான் சிறப்பு வந்துசேரும் என்கின்ற உண்மையை நாம் முதலில் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்க் கலையிலக்கியங்களைச் சுவைக்காமல், நுகராமல் இருக்கும் தமிழர்களைப் பார்க்கின்ற போது வியப்பாகவும் வெறுப்பாகவும் இருக்கிறது. நயாகரா நீர்வீழ்ச்சியைப் பாராத அமெரிக்கர்களையும் தாஜ்மகால் பாராத இந்தியர்களையும் விழித்து கவிப் பேரரசு வைரமுத்து இப்படிச் சொல்கிறார்:

“தாஜ்மகால் பாராத இந்தியர்களும் உண்டு,
நயாகரா பாராத அமெரிக்கர்களும் உண்டு.
என்ன செய்வது, இந்த எந்திர வாழ்க்கையில்
சுவாசிக்காமல்கூட உயிர்வாழ முடிகிறது.”

இதையே நானும் தமிழ்க் கலையிலக்கியங்களைச் சுவைக்காமல், நுகராமல் இருக்கும் தமிழர்கள் விடயத்திலும் பிரதியிட்டுப் பார்க்கிறேன். இவர்களும் கூட ஒருவகையில் சுவாசிக்காமல் உயிர்வாழ்பவர்களே. அவர்கள், இந்தக் கட்டுரையை வாசித்தபின்னரேனும் தமிழ்க் கலையிலக்கியங்களுள் பொதிந்திருக்கும் ஆழ்ந்த அர்த்தங்களையும் அதன் சுவையையும் உணர முற்படமாட்டார்களா என்பதே எனது நப்பாசையும் ஆதங்கமும்.

“வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்!”



## எங்கோ போகும் விமானம்

வெடித்துச் சிதறிய புகைமண்டலத்தினூடே
அதோ பறக்கிறது
ஆயிரம் ஆயிரம் அடிகளுக்கு
அப்பால்
அது எங்கே கண்டு கொள்ளப் போகிறது
சிதைந்த பூமித் துண்டின் ஒரு மூலையில்
சிதறிக் கிடக்கும்
எனது கால்களையும் கதிர்களையும்

எங்கோ ஒரு ஓடு பாதையில்
இறங்குவதற்காக
இவ்வளவு வேகமாக விரையும்
அவ்விமானம் அறியுமா
என்முன்னே விரிந்து கிடக்கும்
என்னிய ஆசைகளையும் முட்களையும்

எனது மயானத்தில் அது
ஒரு நாள் தரையிறங்கலாம்
எனது எரியாத எலும்புகளோ
எரிந்த எனது சாம்பலோ
ஒரு வேளை அதில் ஒட்டிக் கொள்ளலாம்.

- பெரிய ஐங்கரன்

## ரசனை

வானம் துளித்துளியாய்
கீழிறங்கும்
வாய்ப்பான நாளொன்றில்
அதனைப் பற்றிப்பிடித்து
ஏறிப் போக வேண்டும்...
காலில் மிதிபடும்
அழுக்குகளினின்றும்
விடுபட்டு...!

காற்றிலிருக்கும்
சலனங்களை
வாரிக் கொண்டு போகும்
மணியொலியோடு,
மனம் விட்டுப்
பேச வேண்டும்!
தெய்வ ரகசியம்
குறித்து...!

வார்த்தைகளைக் கரைத்து
ஆற்றில் வீசி...
அவற்றைத் தேடிக் கவ்வும்
மீன்களின் விளையாட்டை
ரசித்துக் கொண்டேயிருக்க வேண்டும்!
நேரம் தொலைத்து...!

- தாட்சாயணி

## வேலியும் பயிரும்

நான், நானாக இல்லை
என் சுயமிழக்க
துரத்தப்படுகிறேன்;
கதிரையில் உறங்கும்
அதிகாரங்கள்
கண்மூடிய படியே
ஏவிக் கொண்டிருக்கும்;
மூச்சை ஒலியாக்கி
கற்பிக்கும் கணங்கள்
மாணவ எண்ணங்களினூடு
என்னை ஒன்றாக்கும்
உருவம் அழிந்து போக
உணர்வுகள் மேலோங்கி
கல்வியே உயிராகத்
தெரியும் - என்
சுவடுகள் பின்பற்றி
மாணவர்களும்,
பின்னே தொடர்வர்;
முளைக்கும் பயிரை
பிடுங்கி நடுதல் போல்
நிகழும் மாற்றங்கள்
அடிக்கடி;
எல்லை வேலிகள்
கறையான் அரித்தால்
மிருகங்கள் சுலபமாய்
வேலியால் நுழைந்து
பயிரையும் மேயும்

- வே.ஐ.வரதராஜன்

**பிரமிளா பிரதீபன்**

# அவளும் அவனும்



அவளுக்கு முதல் பிரசவம் அது. எத்தனையோ எதிர்பார்ப்பிற்குப் பின், பிஞ்சு பூவாய் கண் மூடி கிடந்தது அந்த சிசு.

மெதுவாய் அவள், அந்தக் குழந்தையின் சருமத்தை வருடிக் கொடுக்கின்றாள். கால் விரல்களை ஒவ்வொன்றாய் தொட்டு, நகக் கண்களை உற்று கவனிக் கிறாள். தனக்குத் தானே சிரித்தும் கொள்கிறாள்.

"அப்படியே அப்பனை உரித்து வைத்து பிறந்திருக்கிறாள்"

அவள் மனதிற்குள் ஒரு பெரிய வெளி உருவா கின்றது. அதற்குள் ஏதோ ஒரு சுகந்தம் வீசுவதாய்... ஆங்காங்கே பூக்கள் பூத்து பூத்து வெளியெங்கும் அந்த பூவிதழ்கள் பறந்து சுழல்வதாய்... அவள் சத்தமாக சிரிக்கிறாள்.

"எத்தனை அவஸ்தை தந்துவிட்டாய் மகளே..."

குழந்தை பெறும் ஒவ்வொரு பெண்ணுமே சாதனைப் பெண்ணாகத் தான் இருக்கவேண்டும்.

பிரசவ வலியுடன் தாய் கத்துவதும், சத்திர சிகிச்சை அறைக்குள் கொண்டு செல்வதும், ஐந்தே நிமிடத்தில் குழந்தை அழும் சத்தம் கேட்டு பின் டொக்டர் தன் மூக்குக் கண்ணாடியை கழட்டியபடி,

"கங்ராஜிலேசன்ஸ் மிஸ்டர்... உங்களுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கு"

என்று கூறுவதும்...

வாழ்க்கை ஒன்றும் தமிழ்த் திரைப்படம் அல்லவே... உண்மை அதற்குச் சற்று புறம்பாகத் தான் இருக்கிறது. பிரசவ வலி, ஒரு நாள்... இரு நாள்... ஏன் நாலைந்து நாட்களுக்குக் கூட தொடருகிறது. அந்த வலியை, அந்த அவஸ்தையை... எழுத்தினாலோ வார்த்தைகளாலோ விபரித்துவிட அறவுமே இயலாது.

தொண்டைக் குழியில் இருந்தே வலி பரவி... பரவி அடி வயிற்றை முட்டி மோதி, அந்த அவஸ்தையான வலி குதத்தின் வழியே வெளியேறிவிட எத்தனிப்பதாய்த் தோன்றும். நறுக் நறுக்கென்று இறுக்கிப் பிடித்து ஈட்டி யால் குத்துவது போல் வலி உயிரைப் பிடுங்கி எடுக்கும்.

உடலெல்லாம் அசாதாரணமாய் வியர்த்துக் கொட்டி... வெட்கமாவது மண்ணாங்கட்டியாவது, ஆடை கள் விலகியும் விலகாமலும்... உடல் சோர்ந்து, தளர்ந்து, நிற்க முடியாமல்... படுக்க முடியாமல்... அமர முடியா மல்... நடக்கவும் முடியாமல்... அந்தக் குழந்தை வெளியே வரும் வரை எதையுமே செய்ய இயலாமல்...

சிலருக்கு வலியை அதிகரிக்கச் செய்து குழந்தையை வெளியேற்ற, சின்ட்டோ என்றொரு மருந்தை சேலைன் மூலம் கொடுப்பது வழக்கம். அந்த மருந்து உடலுக்குள் செல்லச் செல்ல...

அப்படியே உருட்டி பிரட்டி வயிறு, உடல், தலை என்று சகல உடலுறுப்பும் ஒரு பிரளயத்திற்குள் உள் வாங்கப்பட்டு, ஒன்றுமே முடியாத பட்சத்தில் என்ன நடந்தாலும் பரவாயில்லை... இந்த வலியை தாங்கிக் கொள்ள முடியவில்லையே என்று மனது அங்கலாய்க் கும். இனியொரு முறை இந்த அவஸ்தை வேண்டவே வேண்டாமென ஆழ் மனம் சத்தியம் செய்து கொள்ளும்.

அவளும் அப்படித் தான்.

"எனக்கு முடியல்ல டொக்டர்... ஏதாவது பண்ணுங்களேன்..." என்று டொக்டரின் கையை இறுக பற்றிக் கொண்டு கதறியிறுக்கிறாள்.

"பயவென்ன எப்பா அம்மே..." என்று அவரும் தலையை தடவியிருக்கிறார்.

மெய்யாலுமே வைத்தியரும் ஒரு தெய்வ மாய் தெரிவது அதே அந்த சந்தர்ப்பத்தில் தான். அவர் களும் அந்த அவஸ்தையை உணர்ந்து, பரிவுடன் நடந்து கொள்வது பெருத்த ஆறுதலாய் இருக்கும்.

அந்த அத்தனை வலியும், அத்தனை ஆயிரம் ரண அனுபவமும் பிறந்த குழந்தையின் முகம் பார்த்த மறு நொடியிலேயே காற்றோடு கரைந்து மிதந்து காணா மலேயே போய் விடுகிறது. இத்தனை நேரம் இப்படி அவஸ்தைப்பட்டது நான் தான் என்பது கூட மறந்து போகிறது.

அது தான் தாய்மை.

ஆனால், அந்த தாய்மை, இந்தக் குழந்தையின் பிறப்பின் பின்னாவது அதன் வளர்ப்பில் தகப்பனுக்கு சரிபங்கு இருக்க வேண்டுமென நினைப்பது நியாயம் தானே...!

அவன் இன்னுமே வரவில்லையென்று அவள் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

சுற்றம், சூழல், உறவு, நண்பர் என்று எல்லோ ரும் வந்து போன பின் அவன் வந்தான். குழந்தையை

ஆசையோடு கையில் எடுத்து முத்தமிட்டான். அவனுக்குள் பெரியதொரு உவகை. உச்சியில் இருந்து உள்ளங் கால் வரை அவனுக்கு இனித்தது. அகமகிழ்ந்து போனான்.

தன்னை ஒரு ஆண் மகனென உலகுக்கு நிரூபித்த முதல் ஜீவன் இது. அவனுக்குள் ஆயிரமாயிரம் வெளிச்ச ரேகைகள்.

அவள் தலையையும் இதமாக வருடிக் கொடுத்தான்.

"சாப்பிட்டாயா...?"

அவள் அழுது விட்டாள்.

"ஏன் லேட்...?"

"ச்சூ..."வென சலித்துக் கொண்டான்.

அந்தப் பிஞ்சு முதன்முதலாய் தன் வீட்டுக்கு பிரவேசித்து வீட்டையே கலகலப்பாக்கியது.

அவள் சோர்ந்து களைத்து உறக்கமின்றி தவித் தாள். குழந்தை இரவை பகலாக்க முயற்சித்தது. தொடர்ச்சியாக அழுவதும், சிறுநீர் கழிப்பதும், பால் குடிப்பதுமாய்... அவள் சோர்வுடன் சோர்வாய் இயந்திரமாக சுழன்றாள்.

முடியாத பட்சத்தில் பால் கொடுத்தபடியே தூங்கிப் போய் விடுவாள். சிசு சிணுங்கத் தொடங்கியதும் படாரென விழித்து இயங்க முயற்சிப்பாள்.

மூன்று நாட்களுக்குப் பின்னும் இதுவே தொடர, பகல் நேரங்களில் மட்டும் கொஞ்சம் தூங்கினாள்.

அவன் வழமைக்குத் திரும்பியிருந்தான். வேலை ஓய்வு, பொழுதுபோக்கு... தூக்கம் என்று...

தன் குழந்தையின் அழுகைச் சத்தமோ, மனைவியின் தூக்கமின்மையோ அவனுக்குள் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தியிருக்கவில்லை. இரவுத் தூக்கம் அலாதி சுகம் தருவது. சிலர் படுத்தால் விடியும்போது தான் தூங்கி யிருக்கிறோம் என்றே தெரிய வரும்.

அவனுக்கும் அப்படித் தான்.

அவள் இரவின் நீளத்தையும் நிசப்தத்தையும் உணரத் தொடங்கியிருந்தாள்.

இயற்கை மீது மெலிதாய் ஒரு கோபமும். ஆண் பிறப்பின் மீது அதிகமான பொறாமையும் அவளுக்குள் ஊர்ந்து வளர்ந்து கொண்டிருந்தது.

ஆண்களுக்குத் தான் எத்தனை சுதந்திரம்...? வலியும் இல்லை. வருத்தமும் இல்லை. எதைப் பற்றிய சிந்தனையு மில்லை.

குழந்தை அழத் தொடங்கினாள்.

துணி ஈரமாகியிருந்தது. அதை மாற்றிவிட பிரயத்தனித்தவள் சற்றே தயங்கி படபடவென்று அவனை உலுக்கி எழுப்பினாள்.

அவன் ஆழ்ந்த நித்திரையில் இருந்து எழுந்தவனாய், பேந்த பேந்த விழித்தான்.

"புள்ளைக்கு துணிய மாத்துங்க... பசிச்சா மட்டும் எழுப்புங்க. நானும் கொஞ்சம் தூங்குறேன்..."

அவனது பதிலை எதிர்பாராமல், படுத்துத் தூங்கத் தொடங்கினாள்.

## அர்த்தசாமத்து முனிகள்!

குடித்து விட்டு ஆடி வரும் மனிசா - உன்
கும்மாளம் மிதமிஞ்சிப் போச்சு
அடிபட்டு நான் வாழும் வாழ்க்கை
அடிமையாம் அவரை விட மோசம்!

பசித்திருக்கும் பிள்ளைகளைப் பற்றி - அவர்
படிப்பு நல்ல எதிர்காலம் பற்றி
துளிகூட கரிசனைகளின்றி
துடியாட்டம் போடுவதை நிறுத்து!

தட்டியுன்னை நான் கேட்க வந்தால் - நீ
தரித்திரமே என்றென்னை ஏசி
வெட்டி விட வருகின்றாய் முனியாய்
வேணுமா இப்படியோர் வாழ்வு?

இரவு பகலர்த்தசாம மென்று - நீயும்
இடையீடு இன்றி நிதம் குடித்து
வருவதற்கா மணமுடித்துக் கொடுத்தார், ஏன்
என் வாழ்வினிலே மண்ணையள்ளிப் போட்டாய்!

உன் போல ஓரிரவு நானும் - மது
உள்ளுறுஞ்சி போதையிலே வந்தால்
என்னென்ன ஊர் பேசும், ஆனால்
எவருமே உனைக் கேட்கக் காணோம்!

ஏழைகளின் குடிசை வீடு தொட்டு - இங்கு
இருக்கின்ற மாடி மனையெல்லாம்
ஆளுகின்ற 'குடி'மன்னராலே
அவலமுறும் பெண்ணினமோ கோடி!

போக்கிடங்களேதுமின்றி என்போல் - தினம்
புழுங்கி மனம் வெந்துயரால் வாடும்
பாற்குடங்கள் விஷத்துளிகள் பட்டு
பலனின்றி 'திரி'யுதடா பாரில்!

ஆணென்றால் அவனுக்கொரு நீதி - அவன்
அடாவடிகளெல்லாமே நியாயம் என
காணுகின்ற சமுதாயம் மாறும், அன்று
கண்ணிரண்டும் சமநீதி காணும்!

- ஷெல்விதாசன்

**து.துசியந்தன்**
*ஆசிரிய ஆலோசகர் [சித்திரம்]*

# மனித நேயத்தைப் புகட்டிய புதுமைக் கலைஞர்கள்

மனிதன் ஒரு பொருளை உருவாக்கி அல்லது தயாரித்து, பயன்கருதி உலகிற்கு வழங்கும் போது, ஒரு பொருளை வழங்கிவிட்டோம் என்ற திருப்தி அடைகின்றான். ஆனால் கலைஞன் அப்படியல்ல. தனது படைப்பாற்றலை நடனமாகவோ, பாடலாகவோ, இசையாகவோ, ஓவியமாகவோ உலகிற்கு வழங்கும் போது, தன்னையே, தனது உடல் பொருள் ஆவியை உலகிற்கு வழங்கிவிட்டதாக உவகை கொள்கிறான்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் பழைமையான சமய எண்ணக்கருக்களையும் , பழைமையான ஓவிய மரபுகளையும் நிராகரித்துக்கொண்டு புதிய எண்ணக் கருக்களையும் புதிய ஓவியப்பாணிகளையும் தேட கலைஞர்கள் தூண்டப்பட்டனர். இவர்களில் சிலர் மனிதத்துவத்தை (மனித நேயத்தை) தமது படைப்பு களில் வெளிப்படுத்த முற்பட்டார்கள். அதே நேரம் சமூகத்தால் புறந்தள்ளப்பட்ட மனிதர்களோடு வாழ்ந்து அவர்களின் மனிதாபிமானத்தை தமது படைப்புகளில் வெளிப்படுத்தினர்.

வான்கோவின் வாலிபம் கருணையால் கரைந்தது. வறுமையுற்ற மனிதர்களைப் பார்த்து மனம் நெகிழ்ந்தார். அவர் கண்களில் பரிவு ஓர் ஒளியாகப் படர்ந்திருந்தது. அவர் இரக் கத்தின் உருவமானவர்.


கோகன் வரைந்த தாஹிதி தீவு பெண்கள்

வயல்களில் டச்சுப் பெண்கள் தங்கள் உடலை வருத்தி வேலை செய்துகொண்டிருந்தனர். மரவெட்டிகள். ஆடையெல்லாம் மரத்தூள்கள். எந் நேரமும் அவர்கள் மரங்களை வெட்டிப் பிழைத்தனர். சுரங்கத் தொழிலாளிகளோ வெடிகுண்டுகளால் பாறை களைத் தகர்த்தனர். பாறைத்துண்டுகள் இவர்கள் மீதும் சிதறின. அக்காயங்களால் அவர்கள் உருக்குலைந் திருந்தனர். சோர்வுடன் அவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். இவர்களில் சிலர் வெறுந் தரையில் அலங்கோலமாய்த் தூங்கிக் கொண்டி ருந்தனர். அருகே இவர்கள் கழற்றி வைத்த காலணிகள் கிடந்தன. இவை இவர்களின் துயரங்களைக் காட்டின.

வான்கோ இத்தொழிலாளர்களின் துயரங் களைத் தானும் ஏற்க ஆசைப்பட்டான். அவர்களைப் போல தானும் வெட்ட வெளியில் படுத்து உறங்கினான். கிடைத்த உணவை உண்டான். இவ்வுணவும் கிடைக்காதபோது பல நாட்கள் பட்டினி கிடந்தான். வறிய மக்களின் உண்மையான வாழ்க்கையைத் தானும் அநுபவித்து அதனை ஓவியமாகப் படைத்தார் வான்கோ.

வான்கோவின் அளவுகடந்த மனிதநேயம் சிறைச்சாலையில் உள்ள கைதிகளை நோக்கிச் சென்றது. கைதிகளும் மனிதர்கள் என்பதை வெளிக் காட்ட விரும்பினார். கி.பி 1890இல் சிறைச்சாலை முற்றம் என்ற ஓவியத்தில் வெளிக்காட்டினார். சிறைச் சாலையின் முற்றத்தில் கைதிகள் ஒருவர் பின் ஒருவராக தட்டை ஏந்தியவாறு காணப்படுகின்றனர். மிகவும் உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள இக்காட்சியின் பின்னணியில் சிறைச்சாலையின் உயர்ந்த விசாலமான சுவர் காட்டப்பட்டுள்ளது.

"தையல் கூலி எவ்வளவு ஐயா? "

" அஞ்சு பேண்டுக்கும் நூறு ரூபாய் சார்! "

" சரி இந்தா மூன்று படம்"

"என்ன சார்! பணத்திற்குப் பதிலாகப் படங்களா?"

ஆச்சரியமாகக் கேட்கிறார் தையற்காரர்.

"இதன் விலை ஒன்றரை லட்ச ரூபாய் பெறும் ஐயா"

"இவற்றை யாராவது இப்படித் தையற்கூலியாக கொடுப்பார்களா?"

ஓவியர் பிக்காசோவிற்கும் அவருடைய தையற் காரரிற்கும் இடையே நடைபெற்ற உரையாடல் தான் மேலே உள்ளது. இலட்ச ரூபாய் கொடுத் தாலும் வேண்டுகிறவர் களுக்கு வரைந்து கொடுக் காத பிக்காஸோ தனது அன்பிற்குப் பாத்திரமான யாருக்கும் தமது படைப்புக்களை கொடுத்து மகிழ்ச்சி அடைவார்.

வான்கோ போலவே ஏழை எளிய மக்களு டன் வசித்து அவர்களது துன்பங்களில் பங்கெடுத்து



பிக்காசோவின்
அவிக்னோவின் யுவதிகள்

மகிழ்ச்சியற்ற பகுதிகளை ஓவியமாக்கியவர்களில் பிக்காசோவும் மற்றொரு வராவார். கோமாளிகள், நாடோடிகள், விபச்சாரிகள், பிச்சைக்காரர் போன்றவர் களுடன் தானும் வசித்து அவர்களுடைய துன்பங் களில் தானும் பங்கேற்று அதைத் தனது ஓவியங் களின் கருப்பொருளாக மாற்றினார்.

சமுதாயத்தினால் ஒதுக்கி வைக்கப்பட்ட கைதிகளின் மனித நேயத்தை வான்கோ தனது ஓவியங்களில் காட்டியது போன்று விபச்சாரிகளின் மீது தனது மனித நேயத்தைக் காட்டி அவிக்னோவின் யுவதி என்ற ஓவியத்தை வரைந்தார் பிக்காஸோ.

இச்சித்திரத்தில் பார்சிலோனாவில் அவிக்நேரன் நகரில் நடமாடும் விபச்சாரிகளின் துக்கமான வாழ்க்கை வெளிப்படுத்தப்பட்டு உள்ளது. இவர்கள் ஆடை அணிகலன்கள் அணிந்து வாசனைத் திரவியம் பூசி வெளிப்பார்வைக்குத் தென்பட்டாலும் இவர்களின் வாழ்க்கையின் பின்னால் சோகம், துக்கம், வேதனை நிறைந்தது என்னும் கருத்தை வெளிப்படுத்த பிக்காஸோ முயற்சித்துள்ளார். பெண்களின் உண்மையான உருவைத்தவிர்த்து தனது உள்ளத்தில் உதித்த கேத்திர கணித வடிவமைப்புக்களை உபயோகித்து வரைந்துள்ளார். இதில் இடப்பக்கத்தில் உள்ள பெண்கள் வனப்புடன் உள்ளனர். வலப்பக்கத்தில் இவர்களது இரவுநேர சோகமான வாழ்க்கை சித்தரிக்கப்பட்டுள்ளது.

வான்கோ, பிக்காஸோ போன்றே சமகாலத்தில் வாழ்ந்த மற்றுமொரு ஓவியர் கோகன். இவர் அக்காலத்தில் பெரும் செல்வந்தர். செல்வந்தராக இருந்து கொண்டு வறுமையின் பக்கங்களை படைப் பாக்கம் செய்ய முடியாது என்பதை உணர்ந்ததால் தனது செல்வந்த வாழ்வைத் துறந்தார். ஏழ்மையின் விம்பங்களைக் காணப் புறப்பட்டார்.

1891ஆம் ஆண்டு கோகன் தாஹிதி தீவுக்குப் புறப்பட்டார். அங்கே மடேயா என்னும் பகுதியில் எந்தவித அடிப்படை வசதியுமின்றிப் பழங்குடிகளுடன் வாழ்ந்தார். டெஹாமனா என்ற பழங்குடிப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார்.

மிகவும் ஏழையான கோகன் வறுமையின் காரணமாக வேலை தேடி தங்கள் தீவுக்கு வந்துள்ளதாக நினைத்த தாஹிதி தீவு மக்கள் அவரை உபசரித்தனர். கோகன் இம்மக்களின் மனிதநேயத்தை ஓவியமாகப் படைப்பதற்கு தனது செல்வந்த வாழ்க்கையையே துறந்து வந்தவர் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. இவர்களுடன் வாழ்ந்து கொண்டு கோகன் அவர்களின் பழக்கவழக்கங்களை ஓவியமாக்கத் தொடங்கினார்.

படைப்பில் அளந்து காணமுடியாத அருமையுடையது இமயம் போன்ற மலைகளும் அல்ல : நயாகரா போன்ற அருவிகளும் அல்ல: மனிதனின் மனமே அளத்தற்கரிய விந்தை உடையது. உலகப் படைப்பின் அருஞ்சிறப்போடு ஒப்பிடக் கூடியது உள்ளம் படைக்கும் கலைகளே.

# அகியோபியின் சிறுகவிகள்

## தீர்வு எப்போ

**எவரெவர்க்கோ**
**துரும்புச் சீட்டாய்,**
**ஊன்றுகோலாய் - இருக்கும்**
**எமது பிரச்சினை!**
**எமக்காக எப்போ...?**
**யார் யாரோ குளிர்காய**
**விறகுகளாய் இன்னும்**
**எத்தனை காலம் இருப்போம்!**

## உண்மை சுடும்

**உண்மைகள்,**
**உஷ்ணமானவை!**
**எம்மவர்கள் யாவரும்**
**உண்மையானவர்கள்!**
**ஏனெனில்**
**ஒருவரையொருவர் சுடுகின்றனர்!**
**நாவினால், தீயினால்**
**இன்னும்...**

## தீப்பொறிகள் எங்கே?

**கண்ணீர்த் துளிகளின்**
**கனதியினால்**
**நெற்றிக் கண்ணில் கரகரப்பு**
**எங்கே?**
**தீப்பொறிகளை இன்னும்**
**காணோம்!**


## ஈகோ ~ இருள்

**இருளை விரட்ட**
**ஒளி பாய்சலாம்!**
**ஈகோவை விரட்ட,**
**என்ன பாயச்சலாம்?**
**சிக்மன் பிராய்டுகளுக்குக்**
**கருத்தடையோ?**

## முத்துக்கள்

**முத்துக்கள்**
**முத்துக்களாயிருந்தாலும்**
**அவை முதுக்களல்ல!**
**முலையன்னம் சுவைத்த**
**முகை முகத்தின் கடவாயோரம்**
**நழுவி விழுபவையே முத்துக்கள்!**

# சொல்லிய வார்த்தை




ஸ்ரீகந்தராஜா கிருஷாந்தி



கிழக்கிலங்கை மட்டக்களப்பு பேத்தாழைக் கிராமத்தில் ஸ்ரீகந்தராஜா தனலெட்சுமி தம்பதிகளின் மகளாக 1992.08.13 இல் பிறந்த "தாழையூர் கிருஷாந்தி" தன் எழுத்தாளுமைகளால் பிரதேசத்தின் மண் கமழும் பல படைப்புக்களைப் படைத்து வருபவர். இவர் மட்/பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தரக் கலைப்பிரிவில் கற்பவர். கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் எனும் மட்டங்களில் சிறுகதை, கவிதை, கட்டுரை, பேச்சு, விவாதம், நாடகம் எனும் துறைகளில் 2006 முதல் பங்குகொண்டு பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ள இவ் இளம் இலக்கியப் படைப்பாளியை அறிமுகம் செய்வதில் ஜீவநதி பெருமை கொள்கின்றது.


"பிரியா, பிரியா இந்தா புள்ள சாப்பாடு மேசையில வைச்சிருக்கன். மறக்காம எடுத்துத்துப் போ" என அவசர அவசரமாக கூறிக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறினாள் பிரியாவின் தாய்.

அன்று பிரியாவிற்கு பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வருடத்திற்கான இறுதிப்பரீட்சை தொடங்கியது. பொது நிறமும், கருமையான கூந்தலும் , சிரித்த முகமும் கொண்ட பிரியா எல்லோரிடமும் மிக அன்பாகப் பழகுவாள். அத்தோடு எல்லோரையும் இலகுவாக நல்லவர் என்று நம்பிவிடும் தன்மை கொண்டவளாகக் காணப்பட்டாள்.

பல்கலைக்கழகத்திலே பரீட்சையை எழுதி முடித்துவிட்டு, வெளியே வந்து யாருக்காகவோ காத்துக் கொண்டிருந்தாள். சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். யாரையும் காணவில்லை. அவளை அறியாமலே அவளுடைய கால்கள் நடக்கத்தொடங்கின.

"பிரி, பிரி..." என தூரத்தில் இருந்து யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

" உங்களத்தான் இவ்வளவு நேரமாத் தேடினனான். அது சரி ரெஸ்ட் எல்லாம் எப்பிடி, நல்லா எழுதினதா?" என்றான் கரீஸ்.

இவன்தான் பிரியாவின் காதலன். பாடசாலைப் பருவத்தில் இருந்தே இவர்கள் இருவருக்கும் காதல் ஏற்பட்டிருந்தது. இது இன்று பெரிய மரமாக வளர்ந்து பூத்துக் குலுங்குகின்றது.

"நான் நல்லாத் தான் எழுதியிருக்கன். நீங்க எப்படி?" எனச் சிரித்துக் கொண்டே கேட்டாள். இவ்வாறு இருவரும் கதைத்துக் கொண்டே பஸ்ஸில் ஏறினார்கள். கரீஸ் மிகவும் நல்லவன். தன் காதலிக்காக எதையும் செய்யும் வல்லமை கொண்டவன். இவனுக்கு இரண்டு அக்காமார் உண்டு. இருவருக்கும் அவர்களுடைய காதல் விவகாரம் பற்றி நன்கு தெரியும். ஒருநாள் கரீஸின் அம்மாவிற்கும் இது பற்றித் தெரிந்தபோது, அவரும் இதற்குச் சம்மதம் தெரிவித்தார்.

பிரியாவினுடைய குடும்பம் ஒரு தனிக்குடும்பம். உறவினர்கள் என்று ஒருசிலர் மாத்திரமே. அவளுடைய பெற்றோர் அவளுக்குச் செல்லமும், கட்டுப்பாடும் அதிகமாகவே வழங்கியிருந்தார்கள். ஆனால் பிரியாவினுடைய காதல் விவகாரம் பற்றி ஒரு துளி கூட அவர்களுக்குத் தெரியாது.

அன்று பிரியாவிற்குப் பிறந்தநாள். பல்கலைக் கழகத்திலே அனைவரும் அவளை வாழ்த்தினார்கள். பரிசுப் பொருட்களும் வழங்கினார்கள். இடைவேளை நேரத்திலே பிரியாவும் அவளுடைய தோழியரும் மரத்தின் கீழே அமர்ந்து கொண்டு கலகலப்பாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது,

" பிரியா உன்னை கரீஸ் வரட்டாம்" என்றாள் சுஜா.

பிரியாவின் பிறந்த நாளுக்கு அனைவரும் வாழ்த்துக்களைத் தெரிவித்த போதும் அவளுடைய அன்புக் காதலன் கரீஸ், அவளைச் சந்திக்கக் கூட இல்லை. அந்தக் கோபத்திலிருந்த அவளுக்கு, இந்தச் செய்தியைக் கேட்டதும் மனதிற்குள்ளே மகிழ்ச்சியாறு பெருக்கெடுத்தோடியது.

ஆனால் அதனை வெளிக்காட்டாமல் பொய்க் கோபத்தோடு கரீஸை சந்திக்க நூலகத்திற்குள் சென்றாள்.

கதிரையிலே பிரியாவைப் பார்த்துச் சிரித்தபடி அமர்ந்திருந்தான் கரீஸ்.

"என்ன பிரி முகமெல்லாம் வாடியிருக்கு, என்ன நடந்தது..." எனக் கன்னக்குழிச் சிரிப்போடு கேட்டான் கரீஸ்.

"ஒண்டும் இல்ல, வரச் சொன்னீங்களாமே, கெதியாச் சொல்லுங்க நான் போகனும்" என்றாள்.

"அதில்லை பிரி! இண்டைக்கு எண்ட கேர்ள் பிரண்டின் பிறந்தநாள். நான் 12 மணிக்கெல்லாம் போக னும். என்னைக் கட்டாயமா வரச்சொல்லியிருக்காள். அவளுக்கு என்ன வேண்டித்துப் போறது எண்டுதான் தெரியாமலிருக்குது. நீயே சொல்லு பிரி என்ன வேண்டித்துப் போகலாம்" என விறுவிறுப்பாகப் பேசி முடித்தான்.

அப்போது பிரியாவின் முகமோ கோபத்தால் சிவந்திருந்தது. தனது புத்தகங்களையெல்லாம் தூக்கிக்கொண்டு நூலகத்தை விட்டு வெளியேறினாள். அவள் பின்னாலே கரீசும் சென்றான்.

"என்ன பிரி கோபமா? நான் சும்மா விளை யாடிப் பார்த்தன். உனக்கு ஒரு விஷயம் தெரியுமா. இண்டைக்கு உங்கட பிறந்த நாளெண்டு வகுப்பே பேசுது" என்று நகைப்புடன் கூறினான் கரீஸ்.

அவள் கரீசை நிமிர்ந்து பார்த்து, அருகிலிருந்த கம்பை எடுத்துக் கொண்டு அவனைத் துரத்தத் தொடங்கினாள். அடடா அந்த ஜோடியைப் பார்க்கும் போது கண்ணே பட்டுவிடும் போல இருந்தது. சிட்டுக் குருவிகள் போல சிறகடித்துத் திரிந்தவர்களுக்கு அந்தச் சிறகு உடையும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை இவர்கள் அறியவில்லை.

பல்கலைக்கழக இறுதியாண்டின் ஒரு நாளில், இவர்களுடைய காதல் விடயம் பிரியாவின் பெற்றோருக்குத் தெரிய வந்தது. கட்டுப்பாட்டை மட்டுமே கைவந்த கலையாக கொண்ட அவர்கள் பிரியாவினு டைய மனதை சுக்குநூறாக உடைத்தார்கள். அது செய்யாதே இது செய்யாதே என்று அவளைப் படாதபாடு படுத்திவிட்டார்கள். காலங்கள் கரைந்தோடின. தன் வீட்டில் நடக்கும் பிரச்சினையைப் பற்றிக் கரீசிடம் எதுவும் கூறாமல் தன்னுடைய காதல் வலையை அதிகரித்து வந்தாள் பிரியா.

"கரீஸ் உங்களுக்கு நான் கிடைக்காட்டி என்ன செய்வீங்க?" என்று கேட்டாள்.

"என்ன பிரி அப்படிக் கேக்கிறா? நீ இல்லாட்டிச் செத்தே போயிடுவன்" என சோகத்துடன் பெருமூச்சு விட்டான்.

"ஏண்டி! உங்களுக்குப் பின்னாலை 'லோ லோ' எண்டு அலஞ்சு திரிவம். நீங்களும் பல்ல இளிச்சுத் திரிவிங்களாம். புறகு வந்து என்ன மறந்திடு எண்டு சொல்லுவியள். பொம்பிளயளிண்ட புத்திய நீயும் காட்டிட்டியேடி' எனக் கண்ணீர் வடித்தான். பிரியாவோ ஒன்றும் கூறாமல் அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டான். அன்றிலிருந்து ஒரு கிழமையாய் பல்கலைக் கழகத்திற்கு பிரியா வரவேயில்லை. திடீரென்று ஒருநாள் பல்கலைக்கழகத்திறகுச் சென்றாள்.

"என்ன பிரியா இவ்வளவு நாளா கெம்பஸ் பக்கம் வரவே இல்ல. நீ ஒருநாள் கூட வராம நிண்டதே இல்லையே..."

"ஒண்ணும் இல்லடி. உடம்பு சரியில்ல..."

"உடம்பு சரியில்லயா... கரீஸ் எல்லாத்தை யும் என்னட்ட சொல்லித்தான். உங்கட வீட்டில தெரிஞ்சித்து போல, கரீஸ் பாவண்டி. உன்னை அடிச்சுத்தானாம் எண்டு புலம்பிக் கொண்டே திரிஞ் சான். ஒவ்வொரு நாளும் உன்ன எதிர்பார்த்துக் காத்தி ருந்தான். வகுப்புக்கும் சரியா வரல்ல. பைத்தியக் காரனை போல திரிஞ்சான்..." என்று கவலையுடன் கூறினாள் சுஜா.

அவளுடைய மடியிலே பிரியா சாய்ந்தபடி,

"என்னத்தடி நான் செய்வன். எங்கட வீட்டில என்னை வெளிநாட்டில இருக்கிற மாமி வீட்ட அனுப்பத் திட்டம் போட்டுத்தாங்க. கரீஸிட விஷயம் தெரிஞ்சதில இருந்து அவண்ட சாதி கூடா, குடும்பம் கூடா எண்டு சண்டை பிடிக்குறாங்க. இதை எப்படி நான் அவரிட்டச் சொல்லுவன்" என்று புலம்பினாள்.

சுஜாவோ அவளுக்குப் பல ஆறுதல் வார்த்தைகளைக் கூறி வகுப்பிற்குள்ளே அனுப்பி வைத்தாள். அங்கு கரீஸைத் தேடினாள் சுஜா. ஆனால் அங்கு அவனைக் காணவில்லை. தொலைபேசி மூலம் தொடர்புகளை மேற்கொண்டும் அதுவும் பயனளிக்க வில்லை.

நாட்களின் வேகமான ஓட்டத்தால் பட்ட மளிப்பு விழாவும் நெருங்கியது. அன்று கூட பிரியா வால் கரீஸைக் காணமுடியவில்லை. உடல் வலியைத் தாங்கும் அவளுக்கு மனவலியை தாங்க முடிய வில்லை. மேடையிலே கரீஸின் பெயர் அறிவிக்கப் பட்டதும் பிரியா அவனை மிக ஆர்வமாகத் தேடினாள். எங்கிருந்தோ ஒருவர் வரும் திசையை நோக்கினாள் அது கரீஸ்தானா என சந்தேகத்துடன் உற்றுப் பார்த்தாள். மிகவும் கஸ்டப்பட்டு, ஆம் அது கரீஸ்தான் என முடிவு கொண்டாள். அழகின் உச்சத்திலே இருந்த வன், இன்று உருக்குலைந்து அடையாளம் காண முடியாதவாறு மேடையை நோக்கி வருகை தந்தான். பரீட்சையென்று இருந்து இன்று பரீட்சை இல்லை எனும்போது ஏற்படும் மகிழ்ச்சிபோல பிரியா வின் முகம் மகிழ்ச்சியில் மூழ்கியிருந்தது. ஆனால் கரீஸோ பிரியாவைக் கண்டும் காணாதவன் போல சென்றான்.

மனமுடைந்த அவள், அவனைப் பின்

தொடர்ந்து, நடந்த விஷயங்களைப் பற்றிக் கூறினாள். கரீஸ்சுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

"பிரியா நான் உன்மேல உயிரையே வச்சிருக்கன் எண்டு உனக்கு நல்லாத் தெரியும். ஆனா..." எனப்பல கதையை எனப்பல கதையை வழக்கம் போல ஒரு ஆண் கூறுவது போலவே கதையைச் கொல்லி மழுப்பினான்.

"பிறகு என்ன கரீஸ்" எனப் பிரியா கேட்டாள்.

"அதில்லை பிரி, நீ கெம்பஸ்சுக்கு வராம விட்ட ஒருநாள் உங்கட அப்பா என்ன வந்து சந்திச்சாரு. உன்னை மறந்திட வேணுமாம். இல்லாட்டி உன்னை வெளி நாட்டிற்கு அனுப்பிடுவாராம்" என்று தன்னிடம், பிரியாவின் அப்பா கூறிய விடயங்களையெல்லாம் கூறினான். இதைக் கேட்டதும் பிரியா ஒரு நிமிடம் ஆடிப்போனாள்.

"அப்ப, நீங்க என்ன நம்பல்லையா கரீஸ். உங்கள விட்டுத்து நான் எங்கபோவன்" எனக் கண்ணீர் வடித்து அழுதாள்.

"நான் உங்கள நம்புறன். ஆனா உங்கட அப்பாட குணம்தான் நல்லாத் தெரியுமே. உங்களப் பார்த்தாலோ, இல்லாட்டி உங்களோட கதச்சாலோ வெளிநாட்டிலை இருக்கிற மாப்பிள்ளைக்கு உங்கள கட்டி வைக்கப் போறாராம். அது நடக்கக் கூடாதெண்டுதான் இவ்வளவு நாளா உங்கள விட்டு பிரிஞ்சே இருந்தேன்." என்றான். இருவரும் மாறி மாறி உரையாடிக் கொண்டிருந்தார்கள். "பிரி நீ எனக்கு கிடைக்காட்டிலும் பறவாயில்ல. வெளிநாட்டுக்கெல்லாம்... நீங்க நம்மட நாட்டிலேயே சந்தோஷமாயிரு..." என்றான்.

இதைக்கேட்டவுடன் பிரியா கதறி அழுதாள்.

"கரீஸ் நீங்களா இப்படியெல்லாம் பேசுறீங்க. நம்மட காதல் மேல சத்தியமாச் சொல்லுங்க. என்ன பிரச்சினை வந்தாலும் என்ன விட்டுப் பிரிய மாட்டன் எண்டு" எனக்கூறிக்கொண்டு தனது கையை நீட்டினாள். இருவரும் தன் காதல் ஜெயிக்கும் என்ற நம்பிக்கையுடன் கைகோர்த்து நடக்கத் தொடங்கினார்கள்.

அன்றைய நாளில்தான் இருவரும் கடைசியாகச் சந்தித்தார்கள். பின்பு இருவரும் சந்திக்கவே இல்லை. மூன்று வருடங்கள் எப்படியோ அவர்களுக்குள் தொடர்பில்லாமலே கடந்தோடின.

ஒருநாள் கரீஸ் கரையோரத்தால் நடந்து வந்து கொண்டிருந்தான். அப்போது ஓரிடத்திலே கணவனும் மனைவியும் ஒரு அழகான குழந்தையும் மிகக் குதூகலமாக மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். கரீசும் கன்னக்குழிச் சிரிப்போடு அவர்களை நன்கு உற்றுப் பார்த்தான். என்னவென்று சொல்வது அந்தப் பெண் தன்னுடைய பிரிஸ் தான். ஒரு நிமிடம் அவன் உயிர் அவனை விட்டுப் பிரிவது போல உணர்ந்தான். பிரியாவும் அவனை திரும்பிப் பார்த்தாள். மண்ணிலே அமர்ந்திருந்தவள் அவளை அறியாமலே எழுந்து நின்றாள்.

"பிரியா யாரு இது?..... ஏன் திகைச்சுப் போய் நிக்கிறா?..." எனக் கேட்டான்.

பிரியாவின் இரண்டாந்தரக் கணவன்.

"இவரு என்னோட படிச்சவரு..." என்று மட்டுமே பிரியா கூறினாள்.

"சரி பிரியா, நீ கதச்சிட்டு வா. தம்பிக்கு தண்ணி குடுத்துத்து வாறன்" என்று கரீஸைப் பார்த்து சிரித்து விட்டுச் சென்றான்.

நீண்ட நாளைக்குப் பிறகு இருவரும் சந்தித்த போதும் எதுவும் பேசாமல் இருவரும் மௌனமாய் நின்றார்கள்.

"கரீஸ் எப்பிடி இருக்கீங்க?... எனக் கேட்கத் தொடங்கினாள். அவனோ எதுவும் பேசாமல் பிரியாவின் கண்களையே பார்த்துக் கொண்டிருந்தான். பிரியாவிற்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

"கரீஸ் என்ன மன்னிச்சிடுங்க. எண்ட அப்பா என்ன ஏமாத்தித்தாரு. சிங்கப்பூரில் இருக்கிற மாமிட போய்த் தங்கிட்டு வா. வந்தவுடன் உனக்கும் கரீசுக்கும் கலியாணம் பண்ணிக் கொடுக்கிறன் எண்டாரு. நானும் அத நம்பித்து அடுத்த நாளே உங்களிட்டக் கூடச் சொல்லாமல் போனன். பிறகுதான் தெரிஞ்சிது எனக்கு கலியாணம் பண்ணி வைக்கப் போறாங்க எண்டு. எவ்வளவோ தடுத்தும் அத நிப்பாட்ட என்னால முடியல. இவ்வளவு நாளா சிங்கப்பூரிலதான் இருந்தன். கடவுள் ஏன் எண்ட வாழ்க்கையில மட்டும் இப்பிடி விளையாடுறார். எண்டு தெரியல்லயே! உங்கள காணவே கூடாது எண்டு நினைச்சன். ஆனா..." எனக் கண்ணீர் வடித்தாள்.

"பிரியா, நீங்க அப்ப வேறொருத்தண்ட மனைவி. இப்ப நீ அழக்கூடாது. உங்கட கண்ணில இருந்து ஒரு சொட்டுத் தண்ணி கூட வரக்கூடாது.... நீங்க ஊரில் இல்லாத நேரம் உங்கட வீட்டுக்கு நான் போனன். உங்கட அப்பா நீங்க என்ன மறந்திட்டு, வேறொருத்தன கலியாணம் கட்டித்தியளாம் எண்டு சொன்னாரு ஆனா, அத நான் நம்பல்ல எண்ட பிரியா என்ன ஏமாத்த மாட்டாள் எண்டு சொல்லித்து வந்துத்தன். ஆனா அது இப்ப..." என்றான்.

"கரீஸ் நடந்தெல்லாம் நடந்து முடிஞ்சித்து. இனி ஒண்டும் செய்ய ஏலாது. உங்களுக்கு ஏத்த ஒரு பொண்ணப்பாத்து கலியாணம் கட்டித்து சந்தோஷமா வாழுங்க" என்றாள்.

"இல்ல பிரியா என்னால அப்படியெல்லாம் வாழ முடியாது. எண்ட முன்னாள் காதலி பிரியா என்கிற பிரிஸ் எந்த சந்தர்ப்பத்திலும் அவள மறக்கக் கூடாது எண்டு சத்தியம் வாங்கியிருக்காள். அந்த சத்தியத்த நான் மறக்க மாட்டன்" எனக்கூறி கடற்கரையோரத்தால் நடைப்பிணம்போல நடக்கத் தொடங்கினான்.

"நான் சொன்ன அந்த வார்த்தையாலே எண்ட கரீஸிட வாழ்க்கை கேள்விக்குறியா நிக்குதே" என அழுது, கடற்கரை ஓரத்திலே விழுந்து கண்ணீர் வடித்தாள். அவளாலும் அவளது காதலை மறக்கத்தான் முடியுமா?...




**ச.முருகானந்தன்**

இன்றைய உலகமயமாதல் சூழலில் மனிதன் தன்னுடைய தனித்துவத்தை இழந்து வருகின்றான். தனிமனிதன் தன்னுடைய வேர்களை இழந்து தனிமையில் உழன்று கொண்டிருக்கும் ஓர் அவலமான நிலை பற்றி சிந்திக்கக்கூட அவகாசமற்றவனாக இயந்திர கதியில் உந்தப்பட்டுக் கொண்டிருக்கிறான். மேலோட்டமாகப் பார்க்கும் போது உலகமயமாதல் மனித வாழ்வை இலகுபடுத்தி மேம்படுத்துவதாக தோற்றமளித்தாலும் உண்மையிலேயே இதற்கு எதிரான ஒரு நிலையே உருவாகி வருகின்றது.

மதிப்பீடுகளின் நெருக்கடி என்கிற காலத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில் வன்முறையும் மனித உறவுச் சிக்கல்களும் அதிகரித்து வருகின்றன. ஓர் அந்தரங்கமான உரையாடல், உறவாடல் என்பன அசாத்தியமாகி, நம்முடைய தொடர்பு வழிகள் இறுக்கமாகிக் கொண்டு வருகின்றன. நவீன உலக மனிதன் தன்னுடைய சுயத்தை இழந்து, நிரந்தரத்துடனும் இயற்கையுடனும் தனது பிடிப்பை இழந்தவனாக ஒரு வித அடர்த்தியான மாயையில் உழன்று கொண்டிருக்கிறான். வாழ்க்கை வாழ்வதற்கே என்ற உன்னத நிலைப்பாடு மாறி தன்னுடைய கால் பதிப்பதைக் கூட சுயமாக முடியாமல் திரிசங்கு சொர்க்க நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்றால் அது மிகையாகாது.

மனிதன் உலகை ஆட்டி வைத்த காலம் போய், மனிதனை உலகம் ஆட்டி வைக்கின்றதான சூழ்நிலை! உலகமயமாதலின் சூழ்நிலைக் கைதியாகிவிட்ட மனிதன் வாழ்வு இன்னொரு கோணத்தில் பார்த்தால் நிர்க்கதியான ஒன்றாகவே மாறியுள்ளது. அந்தரங்கம் என்பதுவும் அந்நியோன்யம் என்பதும் மனிதனை விட்டு தொலைதூரம் போய் விட்டது. இயற்கையை ஒன்றி வாழ்தல் என்பதும் வெறுங் கனவாய்ப் போய் விட்டது.. செயற்கையான போலியான மாயை மனிதனின் இயல்பான இயற்கையுடன் ஒன்றிய அமைதியான நிம்மதியான வாழ்வை ஏப்பம் விட்டு விட்டது. மனிதனின் கண்டுபிடிப்புகள் மனிதனை விஞ்சி அவனை ஆட்டிப் படைக்கின்றன. மனிதனின் பெறுமானம் என்பது நலிவடைந்து விட்டது. மனிதமும், மனித நேயமும் கூட ஓரம் கட்டப்படுகிறது.

சுய அடையாளத்தை மெல்ல மெல்ல இழந்து வரும் மனிதன் தனக்கு நெருக்கமானவர்களை மட்டுமல்ல, தன்னையே முழுமையாக அறிந்து கொள்ளாதவனாக மாறி வருகின்றான். தனது உடலும் மனமும் கூட அந்நியமாகிப் போன இத்தகைய ஒரு சூழ்நிலையில் தன்னுடைய அடையாளத்தை மீளப் பெறும் வழி தெரியாமல் திக்குத் தெரியாத காட்டில் தவிக்கின்றான்.

இன்றைய உலகில் பல்வேறு புறச் சூழ்நிலைகளின் தாக்கத்தினால் வாழ்க்கைப் பயணம் நெறிப்படுத்தப்படுகின்றது. மனிதன் தன் மீதான சுய கட்டுப்பாட்டை இழந்தவனாக பேதலித்த ஒரு மன நிலையிலேயே, செயற்கையுடன் ஒன்றிய இன்றைய வாழ்க்கை தொடர்கிறது. நீர் நிலைகளில் இயற்கையாக தண்ணீர் நிறைந்திருக்க போத்தல் தண்ணீரில் மூழ்கிப் போயுள்ள இன்றைய மனிதனின் நிலை இதற்கு நல்லதொரு உதாரணமாக உள்ளது.


இயற்கையுடனான இனிய வாழ்வை நினைவூட்டி அந்நினைவுகளுக்கு உயிரூட்டி செயலூக்கம் பெறுவதற்கான உந்துதல் தான் இன்றைய மனிதனுக்குத் தேவை. இன்றேல் மனிதன் தன்னையும் இழந்து, இந்த இனிய இயற்கை சூழ் உலகையும் இழந்தவனாகி விடுவான். இன்று இயற்கையின் முக்கியத்துவம் பற்றி பலரும் பேசுகிறார்கள். உலக மயமாதலுடன் பரம்பலாகி விட்ட இயந்திர உபகரண செயற்பாடுகளின் அதீத தாக்கத்தால் மனித வாழ்வு அச்சுறுத்தலாகி வருவதையும், பனிப் பாறைகள் உலக வெப்ப அதிகரிப்பால் உருகுவதையும், ஓசோன் கலசத் துளையினால் ஆரோக்கியத்திற்கு ஏற்படும் சவால் பரம்பல்களாலும், அணு உலைகளாலும் உலகம் நோக்கியிருக்கும் அச்சுறுத்தல்களும் உணரப்பட்டுள்ளன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக வளிச் சமநிலையில் ஏற்படக் கூடிய மாற்றமும் சுட்டிக் காட்டப்படுகிறது.

பொதுப் படையான மேற்கூறிய தாக்கங்கள் மாத்திரமன்றி மனிதனை நிம்மதியாக, அமைதியாக, அன்பு, பாசம், ஜீவகாருண்யம், மனிதாபிமானம் உள்ளவனாக வாழ முடியாமல் உலக மயமாதலும் இயந்திர மயமாதலும் ஆக்கிரமித்துள்ள மனித உழைப்பின் பெறுமானமும் உணரப்படுவதில்லை. மனித வாழ்வு மேம்பட இயற்கையுடன் ஒன்றி வாழ்வோம். இதுவே மனித குலத்தின் மீட்சிக்கான வழி.

# நேர்காணல்

# கவிஞர் ஏ.இக்பால்

## சந்திப்பு க.பரணீதரன்



**அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகவும் தர்கா நகரினை புகுந் இடமாகவும் கொண்ட கவிஞர் ஏ.இக்பால் ஈழத்தின் மூத்த படைப் பாளியாவார். சிறுகதை, கவிதை, கட்டுரை, விமர்சனம் என பல்வகை ஆளுமை உடையவராக திகழ்கின்றார். இவரது பதின்மூன்று நூல்கள் வெளியாகியுள்ளன. இவர் இலக்கியத்திற்காக பல்வேறு பரிசுகளைப் பெற்றுள்ளார். ஜீவநதியின வாசகர்களுக்காக இவருடனான நேர் காணலைத் தருகின்றோம்.**

*பரணீ*

**உங்கள் எழுத்துத் துறைப்பிரவேசம் பற்றியும், எழுத்துத் துறையில் உங்களுக்கு ஊக்கம் அளித்தோர் பற்றியும் கூறுவீர்களா?**

**ஏ.இக்பால்**

1954- 1955 இல் நான் அக்கறைப்பற்று ஆர்.ஸீ.எம்.பாடசாலையில் எஸ்.எஸ்.ஸி, வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் போது, அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையிலிருந்து கற்பித்தல் பயிற்சிக்கு வந்தவர்களில் எம்.வை.எம்.முஸ்லிம் என்பவர் எங்க ளுக்கு தமிழ் மொழிப்பாடமும் இலக்கியப்பாடமும் கற்பித்தார். அக்காலம் மொழி, இலக்கியம் இரண்டு பாடங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அந்நேரம் வெளிக்கள வேலையாக "கலாவல்லி" எனும் கை யெழுத்துப்பத்திரிகையை ஏற்படுத்தி, அதற்குப் பத்தி ராசிரியராக என்னை நியமித்தார். அப்பத்திரிகையை அழகுற அமைத்து, வகுப்பிலுள்ள அத்தனை மாணவ மாணவிகளிடம் விடயதானம் பெற்று வெளியிட்டேன். தொடர்ந்து சிறப்புற வெளியிட அக்கறை கொண்ட தால், தேடுதல், அதிக வாசித்தல்களில் ஈடுபாடு கொண் டேன். இப்பயிற்சியால் எழுதவும் முயன்றேன். "கலா" என்ற பெயரில் 'தோழிக்கு' எனும் கவிதை எழுதி 'வீர கேசரி'க்கு அனுப்பினேன். அது சிறப்பாகப் பிரசுரமா னது. அக்காலம் பத்திரிகையில் ஆக்கம் பிரசுரமா னால், அப்பிரதியை எழுதியவருக்கும் 'வீரகேசரி' அனுப்பும். எனது கவிதை வெளியான ஞாயிறு வீர கேசரிப்பிரதி தபாலில் வந்த போது மிக மகிழ்ந்ததோடு, 'கலா' எனும் புனைபெயர் என்னுடையது தான் என்பதை உறுதிப்படுத்தவும் முடிந்தது. எழுத்துத் துறைப் பிர வேசம் தானிது. இலக்கியப் பிரவேசமல்ல. ஊக்கம் அளித்த முதல்வர் எம்.வை.எம்.முஸ்லிம் அவர்கள் தான்.

*பரணீ*

**உங்கள் பிறந்த ஊர் அக்கரைப் பற்றாக இருந்த போதும், உங்கள் புகுந்தகம் மூலமும் நீங்கள் பெருமை பெற்றதாகச் சொல்லிக் கொள்ளப்படுவது பற்றிக் குறிப்பிடுவீர்களா?**

**ஏ.இக்பால்**

பிறந்தகம் இயல்பாக இலக்கிய ஆர்வம் நிறைந்த ஊர், மரபு ரீதியாக இலக்கியம் வளர்த்தோர் அங்கதிகம். இங்கு தான் என்னை நிறையப் பெருமைப் படுத்தினார்கள். 'கவிஞன்' என்ற பட்டத்தை ஊரைக் கூட்டியே எனக்களித்தனர். அவ்விதம் நிறைய உண்டு. புகுந்தகத்தில் கற்பிக்கும் வாய்ப்பு ஏற்பட்டதோடு, அங்கு இலக்கிய ஈடுபாடுடையோரை ஒன்று சேர்த்துப் 'படிப்பு வட்டம்' எனும் சங்கத்தை ஏற்படுத்தி இத்துறையில் வழிகாட்டியதால் அவர்கள் என்னைப் பெருமைப்படுத் தினர். அதனால், புகுந்தகம் பெருமைப்பட்டது. இது தான் கதை.

*பரணீ*

**நீங்கள் பல புனைபெயர்களில் உங்கள் படைப்புகளை முன்வைத்தீர்கள். இவ்வாறு வெவ்வேறு புனைபெயர்களைப் பயன்படுத்தக் காரணம் என்ன?**

**ஏ.இக்பால்**

நான் அரசாங்க உத்தியோகம் செய்பவன். எங்கள் காலத்தில் அரசியல் ஈடுபாட்டிற்கு இடமில்லை. இக்காலம் அரசியல் சார்ந்த பத்திரிகைகளில் எழுதும் போது புனைபெயர் அவசியமாகியது. என்னை வெளிக் காட்டாமலிருக்க புனைபெயர்களில் எழுத லானேன். 'லிப்கி', கீர்த்தி, 'அபூஜாவித்', அல்முஜீப்' என்பவைகளே அப்புனைபெயர்கள். இப்பெயர்களுள் மறைந்தும், சில இடங்களில் வெளியானதால் 'கடகடவென' பன்னிரண்டு இடங்களுக்கு இலங்கை

முழுவதும் இடமாற்றம் பெற்ற அநுபவமுண்டு. பிற்காலம் மறைய வேண்டிய அவசியமில்லாததால் புனைபெயர்களை விட்டுவிட்டேன்.

*பரணி*

**கவிதை, சிறுகதை, கட்டுரை, விமர்சனம் என் பல்வேறு இலக்கிய வகைகளில் உங்களின் படைப்புக்கள் நூல்களாக வெளி வந்துள்ளன. இவற்றுள் உங்களுக்கு உயர்ந்த இலக்கிய அந்தஸ் தைப் பெற்றுத் தந்த நூல் என எதைக் கருதுகிறீர்கள்? அதற்கான காரணம் என்ன?**

**ஏ.இக்பால்**

இதுகாலவரை எனது பதின்மூன்று நூல்கள் வெளிவந்துள்ளன. பதினான்காவது நூலாக "ஆய்வுகள் திறனாய்வுகள்" எனும் நூல் இவ்வருடத்துள் வெளியாகி விடும். பொதுவாக எல்லா நூல்களும் இலக்கியத் தர முடையவைதான். என்றாலும் எனது மூன்றாவது நூல் "மறுமலர்ச்சித் தந்தை" – சித்திலெப்வை பற்றியது உயர்ந்த இலக்கிய அந்தஸ்த்தை ஏற்படுத்தித் தந்தது. அதற்குக் காரணங்கள் உண்டு. இந்நூல் எழுதுவதற்கு முக்கிய காரண கர்த்தாக்கள் 1.பி.இராமநாதன், 2. எம்.எஸ்.எம். இக்பால், 3.சந்திரசேகர சர்மா. இந்நூலெழுத 1960 ஆண்டிலிருந்தே ஆரம்பித்தேன். 1971 இல் தான் வெளி யானது. இம்மூவரும் இட்ட திட்டங்கள் இதற்குச் சாஹித்திய மண்டலப்பரிசு கிடைக்க வேண்டும். அதற் கான முயற்சிகள். சாஹித்திய மண்டலப் பரிசுக்குத் தேர்வுக்காக நூலை எம்.எம்.உவைஸ், எஸ்.எம்.கமால் தீன் என்பவர்களுக்கே அனுப்புவார்கள். அவர்களுக்கு இந்நூல் போகக்கூடாது. உடனே அணிந்துரையோ , முன்னுரையோ இவர்களிடம் பெற வேண்டும். எம்.எம். உவைஸிடம் பாராட்டுரையும், எஸ்.எம்.கமால்தீனின் மனைவியிடம் மதிப்புரையும் பெற்றேன். லக்ஷ்மண ஐயருக்கும், க.கைலாசபதிக்குமே சென்றது. அதனால், நேர்மையாக தெரிவு நடந்தது. 34ஆவது வயதில் மிகக் குறைந்த வயதில் ஸாஹித்திய மண்டலப் பரிசை நான் பெற்றேன். இந் நூல் பற்றி தமிழ்ப் பிழைகளுண்டென் றும், நூல் எழுதும் தகுதி இவருக்கில்லையென்றும் எத்தனையோ விமர்சனங்கள். ஆனால், பரிசுக்கு தேர்ந் தெடுத்த பின் விமர்சித்தவர்களே பேட்டிக்காக என்னை அழைத்தனர்.இன்னும் இது பற்றிக் கூற அதிகமுண்டு. அவை நல்ல அனுபவங்கள். இந்நூலுக்குப் பின் வந்த நூல்களுக்கெல்லாம் நன்மதிப்பு கிடைத்தது.

*பரணி*

**ஈழத்துப் பூதந்தேவனார் பற்றிய உங்கள் மனப்பதிவுகள் யாவை?**

**ஏ.இக்பால்**

சங்க காலப் பாடல்களில் திழைத்த இவர் இலங்கையருள் முக்கியமானவர். சோதிடம், வைத்தி யம் பற்றிய பாடல்களுடன் தொடர்பான ஈழத்து இலக்கியம் எங்கேயோ சங்க இலக்கியப்பால் வர லாற்றை இழுந்து நிற்கின்றது என்பதால் ஈழத்துப் பூதந் தேவனாரை உயர்ந்த இடத்திற்கு கொண்டு வருகின் றது. அதனால் அவர் பற்றிய மனப்பதிவு எனக்கதிகம். நான் சி.வை.தாமோதரம்பிள்ளை போலில்லையே என்பதும் மனக்கவலை. இதனால்தான் ஈழத்துப் பூதந் தேவனார் நான்மணிமாலை போட்டியில் பங்கு பற்றிப் பரிசு பெற்றேன்.

*பரணி*

**பத்தி எழுத்துக்களை இலக்கியத்தரமுள்ள வையாக்குவாற்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டி யவை எவை?**

**ஏ.இக்பால்**

பத்தி எழுத்துக்கள் என்பது இலக்கித்தரம் வாய்ந்தது தான். உலக மொழிகள் பலவற்றிலும் இந்திய மொழிகள் யாவற்றிலும் எழுதித் தள்ளியவர் கே.ஏ.அப்பாஸ் அவர்கள். அவர் எழுதிய நூல்களின் தொகை அதிகம். இவர் "பம்பாய் கிராணிக்கல்" வார வெளியீட்டில் கடைசிப்பக்கம் பத்தி எழுத்தாக எழுதி வந்தார். 40 வருடங்களாக 'பிளிட்ஸ்' வார இதழில் கடைசிப்பக்கம் எழுதி வந்தார். பண்டிதர் ஜவஹர்லால் நேரு அப்பாஸிடம் "கடைசிப் பக்கத்தை நிறுத்தி விடாதே" என வேண்டினார். இவரது எழுத்துக்கள், இலக்கியம், மக்கள் உறவு பற்றியதே! இந்த வகையில் உயர்ந்து நிற்பவர் கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள். இவரது பத்தி எழுத்துக்கள் இலக்கியம் விமர்சனம், விமர்சனம், மனிதத் தொடர்புடையவை. இவ்விதம் எழுதுபவர்கள் மிகக் குறைவு. என்றாலும் முயற்சிகள் நடைபெறுகின்றன. நானும் 'ஓலை'யில் 'இலக்கிய வாழ்வில் இடறிய சம்பவங்கள்' எனத் தொடர்ந்திருக் கிறேன். 'இவர்கள் இப்பொழுதும் வாழ்கிறார்கள்' எனத் தினகரனிலும் எழுதியுள்ளேன். இவைகள் இலக்கியம், மனித வாழ்வு சார்ந்தவைகளே! பத்தி எழுத்தை இலக்கியத் தரமாக்குவதற்கு எழுதுபவர் களை விட பிரசுரிக்கும் பத்திரிகைகளுக்கே அதிக பொறுப்புண்டு... இவர்களது கவனமும், எழுதுபவர்கள் கவனமும் இலக்கியத் தரத்தை நோக்க வேண்டும்.

*பரணி*

**நீங்கள் ஒரு படைபாளியாகவும் அதே வேளை ஓர் ஆய்வாளராகவும் விளங்குகிறீர்கள். உங்கள் படைப்புக்களையே ஆய்வு நிலை நின்று நீங்கள் நோக்கியதுண்டா?**

**ஏ.இக்பால்**

எனது படைப்புக்களை வாசகர் விமர்சிப்

பதை நோக்கி அதை ஆய்வு செய்வதுண்டு. 1987களில் ஏ.எச்.றஜபுன்னிஸா என்பவர் "கவிஞர் ஏ.இக்பால் கவிதைகள் சில ஒரு மதிப்பீடு" எனும் நூல் ஒன்றை வெளியிட்டார். நான் எண்ணியிராத விடயங்களை யெல்லாம் எனது கவிதைகளில் கண்டதை நோக்கி னேன். நான் உயிருடனிருந்திருந்ததால் நோக்குதற்கு வசதியானது. உயிருடன் இல்லாதோர் படைப்புக்களும் இவ்விதமே நோக்கப்படலாம். எனது படைப்புக்களை ஆய்வு நிலையில் நோக்கலாமே ஒழியப் பதித்திடல் கூடாது. பதித்திடின் கருத்துப் பரவல் நின்று விடும். இந்த அளவிலே தான் எனது படைப்புக்கள் பற்றிய எனது நோக்குகள்.

*பரணீ*

**உங்கள் படைப்புகள் குறித்து சொல்லப் படும் விமர்சனங்கள் உங்களில் என்ன மாற்றத்தை விளைவித்துள்ளன?**

**ஏ.இக்பால்**

விமர்சனங்கள் அதைச் சொல்பவர்களின் சொந்தக் கருத்துக்களே! எனது படைப்புக்கள் எனது இலக்கிய நோக்குள்ளானவை. எனது நோக்கம் அதனா லெழுந்த படைப்பு பல்விதப் பார்வைக்குள்ளாவது படைப்பாளியின் படைப்புக்குரிய வெற்றிதான். விமர் சனங்களால் படைப்பு மலினப்படுவதில்லை. படைப் பின் உயர்வு விமர்சனங்களால்தான் உணர்த்தப் படுகின்றன. எனக்கு இது பற்றி வியப்பதிகமே ஒழிய மாற்றத்தை ஏற்படுத்தாது. மாற்றம் ஏற்படின் இலக்கியக் கொள்கை மலினப்பட்டு விடும்.

*பரணீ*

**நீங்கள் ஓர் ஆசிரியர் என்ற வகையில் உங்களால் படைப்புத்துறைக்கு வழிகாட்டப்பட்ட மாணவர்கள் பற்றிச் சுருக்கமாகக் கூறுங்கள்?**

**ஏ.இக்பால்**

நான் கற்பித்த பாடசாலைகளில் மேல் வகுப்புக்களில் கற்பவர்களுக்கிடையே கையெழுத்துப் பத்திரிகை ஒன்றை வெளிப்பிக்கும் வழியைக் காட்டு வேன். பதுளை முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் 'சிந்தனை' இதழ், அதன் ஆசிரியர் பாஹிறா. இன்று நாடறிந்த புதுக்கவிஞர். மாளிகாறேள முஸ்லிம் வித்தியாலயத்தில் 'மாளிகை', இதன் ஆசிரியர் எம்.எல்.எம்.அஃலா. இவர் எழுதி, அதிபராகி ஓய்வு பெற்றுள்ளார். வெலிப்பன்னை முஸ்லிம் வித்தியால யத்தில் 'விளக்கு'. களுத்துறை முஸ்லிம் பெண்கள் கல்லூரியில் 'துறை'. தர்க்காநகர் ஸாஹிறாவில் 'சுவை', இதன் ஆசிரியர் திக்வெல்லக்கமால். இவர் நாடறிந்த இலக்கியவான். இதில் எழுதியவர்கள், தர்க்கா நகர் ஸபா, 'அரும்பு' ஆசிரியர் ஹாபீஸ். இவ் விதம் அநேகமுள்ளனர். விரிவஞ்சி சுருக்கி விட்டேன்.

*பரணீ*

**தர்க்காநகர் கல்வியியற் கல்லூரியின் பகுதி நேர விரிவுரையாளர் என்ற நிலை, உங்கள் இலக்கியப் பயணத்தில் எவ்வளவு தூரம் பங்களித்துள்ளது?**

**ஏ.இக்பால்**

நான் கற்பித்த பாடங்கள் மூன்று.1. விதிக்கப் பட்ட பாடநூல்கள், 2. இலக்கிய வரலாறு, 3. இலக்கிய ஆய்வு. ஆசிரியராக மாணவர்களுடன் அதிகம் கதைத்தே பாடத்தை அவர்களறியாமல் அறிமுகம் செய்வேன். இவர்கள் எல்லோரும் ஏ.எல் வகுப்பில் சித்தியடைந்தவர்கள். எனவே, தகவல்களையே அதிகம் இவர்களுக்களிப்பேன். தகவல்கள், மரபு, தற்காலம், உலகநிலை என விரியும் இதனால் எந்தக் கேள்வியைக் கேட்டாலும் பதிலளிப்பார்கள். நான் கற்பித்த காலம் வரை, இறுதிப் பரீட்சையில் தமிழில் தர்காநகர் கல்வியற் கல்லூரியே அதிக புள்ளிகள் எடுத்தன என்பது பெருமைக்குரியதே! இதற் கெல்லாம் காரணம், தகவல் பரிமாற்றமே!

*பரணீ*

**ஆரோக்கியமான இலக்கிய வளர்ச்சியை நோக்கி இளைய தலைமுறையினரை வழி நடத்து வதற்கு நீங்கள் முன் வைக்கும் ஆலோசனைகள் எவை?**

**ஏ.இக்பால்**

பார்த்தல், படித்தல். இவற்றுள் பார்த்தலே அதிகம். பார்த்தல் இலக்கியத்திற்குதவும், படித்தல் இலக்கிய வளர்ச்சிக்குதவும். தற்கால நவீன அறிவியற் கருவிகளை விட ஏற்றமானவை நூல்களே! நவீனங் கள் மறைந்தொழியலாம். நூல்கள் மறைந்தொழி யாது. உலகில் உயர்ந்த புத்தகக் களஞ்சியங்களை எரித்தும், கடலில் அமிழ்த்தியும் விட்ட வரலாறு தெரியும். யாழ்ப்பாண நூல்நிலையம் கூட அழித்தும் அழிய வில்லை. இளைய தலைமுறையினர் வாசிப்பை விடக் கூடாது. விட்டால் மேலோட்டமாகக் கூறுதலை ஆழமாக எடுத்துக் கூறமுடியாது. வளர்ச்சிப் படிகளில் கேட்டல், எழுதுதல், வாசித்தல் என வளர வேண்டும். தற்காலம் கேட்டல், பேசுதல் அடுத்தது பார்த்தலுடன் நின்று விடுகின்றது. அதனால் வாசிப்பு எழுத்து மங்கி விட்டன. ஆரோக்கியமான இலக்கிய வளர்ச்சிக்கு வாசிப்பு, எழுத்து மிகமிக முக்கியமானது. இன்றைய தலைமுறையினர் இதை உணருதல் சிறப்பபே!

தவராஜா வசந்தன்

# யப்பானிய கபுக்கி நாடக வடிவத்தின் ஆற்றுகைச் சிறப்புக்கள்




17ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியிலிருந்து யப்பானில் செல்வாக்கு மிக்க அரங்க மகிழ்வூட்டு வடிவமாக கபுக்கி காணப்படுகிறது. கபுக்கி அரங்க வடிவமானது இசை, நடனம், விநோதம் போன்றவற்றின் மூலம் பெருங் காட்சித் தன்மையுடன் கருத்துக்களை வெளிப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. கபுக்கியின் உருவாக்கத்துக்கு யப்பானிய நோஹ் நாடகங்கள், புன்ரக்கு, யப்பானிய களைக் கூத்தாட்டம் என்பன உதவின. ஆரம்பத்தில் லௌகீகக் கதைகள் கொண்டதாகவும் பின்னர் பொழுதுபோக்கு வடிவமாகவும் மாறியது.

## ஆற்றுகைச் சிறப்புக்கள்

கபுக்கி அரங்க வடிவத்தின் ஆற்றுகைச் சிறப்புக்கு அதில் காணப்படும் பெருங் காட்சித் தன்மை, மிகைப்பாட்டுத் தன்மை, பெரிய அரங்க நிர்மாணத் தன்மை என்பன காரணமெனலாம். பெருங் காட்சிப் பண்பானது நடிகரின் ஆடம்பரமான வேட உடை, ஒப்பனை, நடனம், பிரகாசமான காட்சியமைப்பு, ஒளியமைப்பு, இசையமைப்புத் தாக்கம் என்பனவற்றின் மூலம் வெளிப்பட்டது. இவை மிகைப்பாட்டுத் தன்மை கொண்டதாகவும் காணப்படுகின்றன.

நடிகர்கள் பரம்பரை பரம்பரையாகத் தந்தை – மகன், ஆசிரியன் – மாணவன் என்ற ரீதியில் குழந்தைப் பருவம் முதல் பயிற்சி அளிக்கப்பட்டு ஆற்றுகைக்குத் தயார்ப்படுத்தப்படுவர். வசந்த காலத்தில் விறுவிறுப்பான நாடகமும், குளிர் காலத்தில் ஆவிகளின் நாடகமும் நிகழ்த்தப்படும். கபுக்கி அரங்கானது யப்பானிய கட்டடக் கலை, சுதேசியத் தன்மை உடையதாகவும், பார்வையாளரை நெருக்கமாக ஆற்றுகையின்பால் ஈடுபடத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது. பொதுவாக அரங்கானது 90 அடி அகலம், 27 அடி உயரம், 60 அடி நீளம் உடையதாக படச் சட்ட அரங்காகக் காணப்படுகின்றது.

## கபுக்கி அரங்கு




1 – பிரதான மேடை (Main Stage)
2 – சுழலும் மேடை (Revolving Stage)
3 – இசைஞர் (Musicians)
4A – பிரதான கனாமிச்சி (Kanamichi)
4B – துணையான கனாமிச்சி (Kanamichi)
5 – பார்வையாளர் கூடம், பார்வையாளர்
6 – பின்புற திரை (Curtain)
7 – பார்வையாளர் மாடம் (Balcony)
8 – புறோசீனிய அரங்க கட்டடம் (Procenium Stage)
9 – பைன் மர ஓவியம்
10 – பின் சுவர் (Cyclo Rama)

பிரதான மேடை புறசீனியம் அரங்கத் தன்மை உடையதாகவும், நடுவில் சுழலும் மேடையும், கனாமிச்சி (பூம்பாதை) பார்வையாளர் மாடங்கள், கோரஸ் இருப்பிடம், கலைஞர்கள் இருக்குமிடம் என்பவற்றைக் கொண்டதாக அமைந்துள்ளது. மேடையில் மலைகள், வீடுகள், பூங்கா என்பன நுணுக்கமாக இயல்புத் தன்மை உடையதாக வடிவமைக்கப்படுகின்றன. பார்வையாளர் பகுதியை ஊடறுத்துக் காணப்படும் கனாமிச்சி (பூம்பாதை), நடிகர் வரவு, வெளியேறல், நடிகர், பார்வையாளர் வலிய உறவிற்கு வழிவகுத்தல் (பேசுதல், தொடுதல்), திடீர் தோற்றம், மறைவுகள் காட்டப் பயன்படுத்தப்படுகின்றன. கபுக்கி அரங்கின் பின்னணியில் காணப்படும் 3 பைன் மரங்கள் சொர்க்கம், நரகம், பூமி என்பவற்றைக் குறியீடாகக் காட்டுகின்றன. கபுக்கி அரங்கில் காணப்படும் பெருங் காட்சித் தன்மை, மிகைப்பாட்டுத் தன்மை, பெரிய அரங்க நிர்மாணத் தன்மை இவையே ஏனைய அரங்க வடிவங்களிலிருந்து கபுக்கி அரங்கினை வேறுபடுத்துகின்றன.

# ஏகாந்தம்

போதையேறிய இருளைப்
போர்த்திக் கிடக்கும்
பின் இரவின் வாசனையைக்
காவித் திரியும் காற்றிலும்
கனம் பரவும்

நீள்சதுரச் சாளரத்தின் நிழலாய்
வெகு தொலைவில்
வெள்ளிப் பூவோடு
மின்மினியும்
கண்மினுங்கி
பின்னிரவைத் துரத்திச் செல்லும்

தூங்கா இரவுப் பூங்கா
புதுவித அழகு
ஏங்கும் நிலவு வடிக்கும்
வெள்ளிக் கண்ணீரை
விரும்பிய வரைக்கும்
அள்ளிப்பூசிய அற்புதக் கோலம்

பறவைகள் உறங்கும்
இரவு வந்திறங்கிய
ஏகாந்தப் பொழுதில்
எலியைத் துரத்தும்
பூனையின் உறுமல்
ஒலியின் பெருக்கால்
புலியை நிகர்க்கும்

கள்வர்க்கும் கயவர்க்கும்
கவிஞர்க்கும் காதலர்க்கும்
சுட்டெரிக்கும் சூரியனில் நாட்டமில்லை
காரிருள்தான் அவர்களுக்கு
கள்
இனிமை

அறிவுடை மாந்தரின்
ரகசியக் காதலி
இரவிடை துளிர்க்கும்
கவிதை கற்பனை
எழுதிடக் கோரும்
எண்ணமோ கோடி

உறக்கம் மறுத்துக்
கிறக்கம் சுரக்கும்
இன்னோரிரவின்
இம்சை நிசப்தம்
இதயத் துடிப்பை
இடியென பெருக்க

வெற்றிடங்களை இயற்கை
விட்டுவைப்பதில்லையெனும்
விதியைக் கடந்து கட்டிலின்
ஒருபாதி வெற்றிடம்

கனடாவிலிருந்து க. நவம்



# வாசல் படிகள்

கவிதை சுமந்திருந்த காமம்
கனிந்து முதிர்ந் துவந்த காதல்
அன்பின்
இனிமை
குவிந்திருந்த பாசம்
தலையணைகள்
மௌனம் தரும்
தீராத பசி
ஆளைத்திருகி
விளையாடும்
நினைவுகளால் நீரோடும்
ஆரோடும் பேச
முடியா அவலங்கள்
அந்தரங்க அந்தரங்கள்
வேரோடி நின்று
விரக்தி அரங்கேறும்
விலங்குச் சுழிச் சுமைகள்
நாரோடு பூவாய்
நடைமுறையில் கட்டுண்டு
சைவருக்குத் தக்கபடி
தரகர்தான் சாதகமாய்
வீட்டில்
அடர் கூந்தல்
குரும்பட்டியாக
வெளுத்து முதிர்கன்னி
வீட்டுக்கு வீடு
எத்தனை வீணைகள்
வீணே கிடக்கின்றன.

கல்வயல் வே.குமாரசாமி

## ஆனந்தி

# வழித் துணை

கொழும்பு நகரத்து ஆடம்பரக் கல்யாண விழா ஒன்றில், சேர்ந்து குழுமியிருக்கிற மனித வெள்ளத்தி னிடையே, ஒரு புறம்போக்குத் தனி மனிதனாக விசாகன் கரை ஒதுங்கியிருந்தான். மணப் பெண்ணுக்குத் தோய வார்ப்பதைப் படம் பிடிப்பதற்காகப் போயிருந்த, வீடி யோப் படப் பிடிப்பாளர்கள், இன்னும் மண்டபத்திற்கு வந்து சேராததால், முகூர்த்தம் தள்ளிப் போய்க் கொண்டி ருந்தது, மண வளை முன்னால் ஐயர் வேறு காத்துக் கொண்டிருந்தார்.

சாஸ்திரம் மீறிய இந்தச் சடங்குகள், ஒன்று திரண்ட கலியின் ஒரு காலக் கோளாறாய், கண்ணை எரித்தது, விசாகனுக்கு மட்டும் தான். இதிலிருந்து மீண்டு போக வழி தெரியாமல், இடறி நசித்து விட்டுப் போகிற, இத்தகைய நடைமுறை அனுபவங்களிடையே, எங்கோ முகம் தெரியாத காட்டில், இருட்டில் புதையுண்டு, அல்லலுறும் மக்களைப் பற்றிய கவலை, அவனுக்கு இயல்பானது. எந்நேரமும், எப்பொழுதும், அவர்களை அவனால் மறக்க முடிவதில்லை, அவர்களுக்காக, ஏதாவது செய்ய வேண்டுமே என்று தோன்றும் பணம் கொடுத்தாலும், ஆறாத துயரம் அவர்களுடையது. அவர்களின் ஒவ்வொருவரிலும், மிகப் பெரிய இழப்புகளுக்கு முன்னால், அவர்களின் கண்ணீர் கடல் கண்ட பின்னும் இப்படியான களியாட்டங்களில், மனம் ஈடுபடுவதை நினைத்தால், அது ஒரு தார்மீகக் குற்றமாக அவனுக்கு மனம் வருந்தும். அந்தக் குற்றவாளிகளே, தன் கண்ணைச் சுற்றி, எங்கும் நிறைந்திருப்பதாக, அவன் உணர்வதுண்டு. என்ன செய்வது? அவர்கள் நிலை அப்படி வருந்திச் சிலுவை சுமப்பவர்களுக்காக, வாழ்க்கையின் உன்னதங்களை, மேலோட்டமான சிறப்பு களைத் தாங்கள் ஏன் துறக்க வேண்டும் என்ற, மித மிஞ்சிய அல்லது கட்டறுந்து போகிற, சுயநலப் போக்கு அவர்களுடையது.

மணமகளின் தோய வார்ப்புச் சடங்கு முடிந்து, அதை நீண்ட நேரமாகப் படம் பிடித்து விட்ட களைப்பு மாறாமல், வழிந்தோடுகின்ற வியர்வை மழையைக் கூடத் தொடைத்தெறிய, நேரமின்றி அவசரம் அவசரமாக வீடியோப் படப் பிடிப்பாளர்கள், பந்தலுக்கு நுழைகிறபோது, மணி பத்தரைக்கு மேலாகி விட்டிருந்தது. சரியாகப் பதினொரு மணிக்குத் தானாம் முகூர்த்தம். அதற்குள் மணப் பெண்ணின் ஜோடனை அலங்காரங்கள் முடிய வேண்டுமே. அதற்கே ஒரு யுகம் பிடிக்கும். சாஸ்திர சம்பிரதாயமென்பதெல்லாம் வெறும் பேருக்குத் தான். வீடியோ நாடகம் தான் – எல்லாவற்றையும் விட முக்கியம். இப்படி எல்லாமே, பணத்தை மையமாக வைத்து, வாழ்க்கை நிஜம் ஒழிந்து போன, வெறும் நிழல் அனுபவமே போலான பின், வரட்டுச் சங்கதிகளற்ற உயிர்ப் பிரக்ஞையென்பது, கை நழுவிப் போன ஒன்று தான்.

விசாகனுக்கு அதை நினைக்கப் பெரும் ஆயாசமாக இருந்தது. உயிர் மரத்துப் போய்க் கதி யற்று ஓடிக் கொண்டிருக்கிற, இந்தப் பொருளிழந்த வாழ்க்கை நடுவே, அவனது எண்ணங்களும் கனவும் வேறு விதமாக இருந்தன. இந்த நிழல் வாழ்க்கை யோடு, பொருந்திப் போகாத வகையில், தனது வாழ்க் கை, உயிரின் சத்தியத்தையே பிரதிபலிப்பதால், தானொரு துருவமாக நின்று, பிரகாசிக்க வேண்டு மென்ற, தனது தீராத லட்சிய வேட்கை பற்றி, இது வரை காலமும் அவன் எவரோடும் மனம் திறந்து பேசியதில்லை. அதற்கான ஆளும் அகப்படவில்லை. இன்று அப்படியொரு சம்பவம் அவனையறியாமலே, அவனின் காலடிக்கு வந்து சேர்ந்தது, எதிர்பாராத விதமாக நீண்ட யுகத்திற்குப் பிறகு, அவனது உணர்ச் சிகளைப் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு நண்பனை அவன் காண நேர்ந்தது.

மாதவன் என்று, சின்ன வயதில், அவனோடு ஒன்றாகப் படித்த நண்பன். ஊரை விட்டு வந்த பிறகு அவனைக் கன காலம் காணவில்லை. வெளிநாட்டில் இருந்து வந்திருக்க வேண்டும்.

ஆளே அடையாளம் தெரியாமல், மாறிப் போயிருந்தான். பணக் களை, முற்றிலும் அவனை ஒரு புது மனிதனாக மாற்றியிருந்தது. இருந்தாலு மென்ன? முகம் மறந்து போகாத விசுவாசமான நட்பைச் சட்டென நினைவு கூர்ந்தவனாய், விசாகனை அறிமுகம் புரிந்து கொண்டு, ஓடி வந்து கை குலுக்கின போது, விசாகன் உணர்ச்சி வசப்பட்டு, நட்பின் தடம் பிடிபட்டவனாய், அவனைக் கரம் பற்றி அணைத்த வாறே, தன்னருகே அமர வைத்துக் கொண்டு கேட்டான்.

“எப்படியிருக்கிறாய் மாதவா?”

“எனக்கு ஒரு குறையுமில்லை. நான் இப்ப கன காலம் தொடக்கம் கனடாவிலை இருக்கிறன். இதிலிருந்து பார்க்கும்போது, உன்ரை தேக்கம் எனக்கு நன்றாகவே புரியுது”

அதற்கு விசாகன் சட்டெனக் குரலை உயர்த்தி சற்றுச் சூடாகவே கேட்டான்.

"ஏன் அப்படி ஒரு பார்வை உனக்கு? நான் எதிலை குறைஞ்சிட்டனென்று, உன்ரை நினைப்பு? சொல்லு மாதவா?"

"நீ எல்லோரையும் போலச் சகஜமாக இல்லையே? ஒரு நிழல் மாதிரி, உன்னிலை ஒரு வெறுமை தெரியுது, உனக்கு அப்படியென்ன பெரிய சோகம்? எல்லோரையும் போலப் பண மில்லையென்று தானே"



"நான் அப்படி நினைக் கேலை. இப்ப நானொரு பாங் மனேஜராக இருக்கிறன். கை நிறையச் சம்பளம் வருகுது. உன்ரை பார்வையாலே பார்த்தால், நான் கூட ஒரு முழு மனிசன் தான். இப்ப என்ரை கவலை அதில்லை. வெறும் பணம் மட்டுமே வந்தால் போதுமே"

"பின்னை என்ன உனக்குக் குறை...?"

எங்கடை இனத்தைப் பற்றித் தான். ஒரு நல்ல ஆரோக்கியமான சமூகம் என்று சொல்ல முடியாமல் ஊனம் விழுந்து, இருளில் இருந்து அந்தரித்துக் கொண்டிருக்கிற, வேர் விட்டுக் கழன்று போன, எங்கடை தீனமுற்ற மனிதர்களைப் பற்றித் தான், என்ரை கவலையெல்லாம். இதுக்குப் பரிகாரமாகப் பெரிதாக, நான் ஏதாவது செய்ய வேணும் போலிருக்கு. அதுக்கு என்னைப் பொறுத்த வரை, ஒரே ஒரு வழி தான் இருக்கு"

"என்ன செய்யப் போறாய்?"

"நான் இரண்டு மூன்று தடவை, வன்னிக்குப் போய் வந்தனான். அங்கு போய் வந்த பிறகு, நான் கண்ட காட்சிகளை என்னால் மறக்க முடியேலை. கால் கைகளை இழந்து எத்தனை பேர் கஷ்டப்படுகினம். இதையெல்லாம் மறந்திட்டு, நீ சொல்லுற மாதிரி, ஒரு சுகமான வாழ்க்கையைத் தேடிக் கொண்டு, அதனோடு ஒன்றிப் போக என்னால் முடியேலை, அது எனக்கு வேண்டாம், நான் கல்யாணம் செய்யிறதாக இருந்தால், கால் இழந்த, ஒரு வன்னிப் பெண்ணைத் தான், செய்து கொள்ளப் போறன்"

"நான் கேட்கிறன். அது உன்ரை வாழ்க்கையை யே, முடமாக்கி விடாதா? இந்த வயதிலை இப்படி ஒரு வீழ்ச்சி உனக்குத் தேவை தானா?"

"நான் அப்படி நம்பேலை. கால் போன ஒரு பெண்ணுக்கு நான் வாழ்க்கை கொடுக்கப் போற னென்பதே, எல்லா நிறைவையும் அடைஞ்ச மாதிரி, எனக்கு இருக்கு"

"ஓர் இலட்சிய வெறியிலை, நீ இதைச் சொல்லலாம், செய்யலாம். பிறகு வாழ்ந்து பார்க் கேக்கை தான் உனக்கு அதின்ரை வலி புரியும். கால் நடக்கேலாத அல்லது பொய்க் கால் போட்ட பெண் ணைக் கட்டிக் கொண்டு நீ என்ன சுகத்தைக் காணப் போறாய்? காலமெல்லாம் கஷ்டப்படப் போறியே?"

"எனக்கு அது விளங்காமலில்லை. நல்ல பெண்ணைக் கட்டின ஒருவனே, அவனோடு மனம் ஒன்றுபட்டு இருக்க முடியாமல், அறுத்தெறிந்து விட்டுப் போற கதையெல்லாம் நடந்து கொண்டிருக்கு. நீ இந்தக் கோணத்திலே நின்று தானே என்னைப் பார்க்கிறாய். நான் அப்படியான ஆளில்லை, வெறும் வரட்டுச் சங்கதியாய், என்ரை கல்யாணம் முடிந்து போகாது, நான் ஓர் ஊனம் விழுந்த பெண்ணோடு வாழ்ந்து காட்டுறேனா, இல்லையா என்று பார், காலம் உனக்குப் பதில் சொல்லும்"

என்றான் விசாகன் மனோபலம் கொண்ட வனாய். மாதவனுக்கு அவனை அந்த நிலையில் பார்க்கப் பெரும் வியப்பாக இருந்தது. வாழ்வின் சாதாரண நடைமுறைகளையே, புரட்டிப் போடும், எதிர்த் துருவமான அவனின் இந்தப் புரட்சிகரமான எண்ணங்கள் குறித்து, மனம் சிலிர்த்துப் போகிற பெருமையுடன் அவன் நினைவு கூர்ந்தான். இப்படி விசாகன் போல், நினைக்க நமது சமூகத்து இளைஞர் களில், எத்தனை பேருக்கும் மனம் வரும்? இப்படி ஓரிரண்டு பேர் நினைத்தாலும், வாழ்விழந்த பேதை களுக்கு அது ஒரு வரப்பிரசாதம் தான். நடக்க வேண்டுமே என்று தோன்றியது.

அவர்களின் நினைவுக்கு எட்டாத, புறப் பிரக்ஞையாக வருகிற, நடைமுறை உலகம் இன்னு மொரு துருவத்திலிருந்து, அவர்களை வா என்று அழைப்பது போல் பட்டது, வீடியோ நாடகம் போல, வேடம் கட்டி நடந்தேறுகின்ற, கல்யாணக் காட்சி

வெறுமை அவர்களின் கண் முன்னால், களை கட்டி நின்றது. அவர்களையும் வந்து, அந்தக் காட்சி நிழலுக்கு முகம் காட்டிப் போகுமாறு, மணப் பெண்ணின் அப்பா வந்து அழைத்துப் போனபோது, விசாகன் உயிர் மரத்துப் போன, வெறும் நிழலாகவே, அவரைப் பின்தொடர்ந் தான். இப்படி வருவோர், போவோர், நின்றவர், இருந்தவர் எல்லோரையுமே படமெடுத்துக் காசைக் கரி யாக்குகிற இப்பெரிய மனிதர்கள் குறித்து, அவனுக்குப் பெரும் கவலை வந்தது. இப்போதிருக்கிற இழப்பு வாழ்க் கையில், மிகவும் மட்டமான ஒரு நாகரிகக் கூத்தாய், அதை அவனால் உணர முடிந்தது. இதை வெளிப்படை யாக, மனம் திறந்து பேசுகிற நிலைமை இன்னும் வர வில்லை. அகக் கண்ணால், நிஜ வாழ்வின் ஊனங்களைப் பார்க்க முடியாமல் போன, மன இருட்டு இவர்களுடை யது. கண்ணிருந்தும் குருடர் போலான நிலைமை தான். அவர்களின் கண் திறக்கவே, என்ரை வழி மூடாத இந்த லட்சியப் பயணம். பொறுத்திருந்து பார்ப்போம்.

மாதவனின் குரல், மீண்டும் அவன் மௌனத் தைக் கலைத்தது, வீடியோ நிழலுக்கு முகம் காட்டி விட்டு, மேடையை விட்டுக் கீழிறங்கியபோது, மாதவன் உணர்ச்சி வசப்பட்டுக் கேட்டான்.

"என்ன விசாகா? ஏன் வந்தோம் என்று தானே உனக்கு இருக்கு. இதில் உனக்கு உடன்பாடு இல்லைத்தானே"

"உணர்ச்சி பூர்வமாக நினைக்க எவ்வளவோ சங்கதிகள் இருக்கு. இது உணர்ச்சியில் கரைந்து போகிற ஒரு விடயமில்லை. சும்மா வேடம் கட்டி ஆட, ஒரு போக்குக் கெட்ட செயல் தான் இது. இதை வழிக்குக் கொண்டு வருவது எப்படி என்று தான், எனக்கு ஒரே யோசனையாக இருக்கு. தமிழுக்குத் தோலுரிந்து போன காயத்தை நான் சுமக்கிறன், அது தான் முழு ஈடுபாட் டோடு, இதில் கலந்து கொள்ள என்னால் முடியேலை. எப்ப வன்னிப் பெண்ணை மணப்பேனோ, அப்ப கூட, ஒரு வேளை இதற்கு விடிவு கிடைக்கலாம்"

"முதலில் நீ வாழ்ந்து காட்டு" என்றான் மாதவன். குரலில் உணர்ச்சி ஏறி. விசாகன் மௌனமாக அதைக் கேட்டுக் கொண்டிருந்தான். இப்படி வேடம் கட்டி ஆடுகின்ற கல்யாணக் கூத்துக்கள் போலன்றி, ஊனப் பளு சுமக்கிற ஒரு சமூகத்தின் பொருட்டு தான் நிலை கொண்டு, நிறுவ இருக்கும், ஒரு பேதையுடனான தன்னுடைய அந்தக் கல்யாண வேள்வி, வாழ்வின் கறை கள் படியாத, ஒரு புனிதச் சடங்காகவே, இவ்வுலகின் கண் முன்னால், நிழல் காணாத, நிஜத்தின் தரிசன ஒளி யுடன், தெய்வீகக் களை கட்டி, அரங்கேற இருப்பதாய், அவன் முழு மனதோடு நம்பினான். அந்த நம்பிக்கை வீண் போகாதென்று, படவே, மாதவன் உரிமையோடு அவனின் தோள் மீது கை போட்டு, அணைத்தவாறே, மனம் கரைந்து கூறினான்.

"உனக்கு என் வாழ்த்துக்கள்"

கவிதை அல்ல

# உள் - வெளி

தூசிப் புகாராய்
சுற்றித் திரிந்த போது
நான் இருந்தேன்
விண்ணில்
உள்ளுறையாய்

நெருப்புக் கோளமாகி
பகுதி பகுதியாய் பிரிந்து
கிரகங்கள் ஆகிய போதும்
நான் இருந்தேன்.

மக்குத் தண்ணீரில்
நுண்ணுயிராய்
உதயம் கொண்ட போதும்
நான்
இருந்தேன்.

மீனாய், ஆமையாய்
விலங்காய், பறவையாய்
வந்ததும்
நானே.

இப்போது மனிதனாய் -

என்
அடுத்த பரிணாம
இலக்கு
எது?

உள்ளுணர்வின் வழி
விழி திறக்க
உனக்கு நீயே
உண்மையாய்
இரு.

-இ.ஜீவகாருண்யன்

# எனது இலக்கியத்தடம்



20

தி. ஞானசேகரன்

## இலக்கியம் சார்ந்த பிறிதொரு முயற்சி – "புரிதலும் பகிர்தலும்"

எனது அவுஸ்திரேலியப் பயண இலக்கியக்கட்டுரை பற்றி இத்தொடரின் பதினெட்டாவது அத்தியாயத்தில் விளக்கியிருந்தேன். அந்தப் பயணக்கட்டுரையில் உள்ள டக்கப்படாத வேறும் பல விடயங்களும் அந்தப் பயணத் தில் அடங்கியிருந்தன.

நான் அவுஸ்திரேலியாவில் இருந்த ஆறுவார காலத்தில், புலம்பெயர்ந்து வாழும் கலை இலக்கிய வாதி கள், தமிழ் ஆர்வலர்கள், ஒழுங்கு செய்த கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் பங்கு பற்றும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அங்குள்ள 'இன்பத் தமிழ்ஒலி' வானொலி நிலையத்தினர் என்னைப் பேட்டிகண்டு ஒலிபரப்புச் செய் தனர். பாடசாலைகள், தமிழர் ஒன்றியங்கள் ஆகியவற் றிற்கும் நான் விஜயம் செய்து கருத்துப் பரிமாறல்கள் செய்தேன்.

தமது மண்ணில் இருந்து வந்திருக்கும் ஓர் எழுத்தாளன் என்ற காரணத்தால் – நம்மவர் என்ற உரிமையோடு அங்குள்ளவர்கள் என்னை அழைத்து எனது கருத்துக்களைக் கேட்டறிந்து அவற்றை அங்குள்ளோரிடமும் பகிர்ந்து கொண்டனர்.

எமது நாட்டில் நிலவும் அரசியல் நிலைமை, தமிழர்படும் இன்னல்கள், இனப்பிரச்சினை தொடர்பான விடயங்கள், கலை இலக்கியச் செயற்பாடுகள் போன்ற வற்றை அறிவதில் அவர்களது அக்கறை அதிகமாக இருந்தது.

அவ்வேளையில் எனது சிந்தனையில் ஒரு கீற்று!

தாம்பிறந்த நாட்டைப்பற்றிய அக்கறையை இவர்கள் வெளிக்கொணர்வது போன்று நாமும் புலம் பெயர்ந்து வாழும் நமது நாட்டவர்கள் பற்றிய அக்கறை யை – அவர்களது வாழ்வு அனுபவங்கள், கலை இலக்கிய முயற்சிகள், மொழி, கலை, கலாசாரம், பண்பாடு ஆகிய வற்றைப் பேணிப் பாதுகாப்பதற்கு அவர்கள் எடுக்கும் முயற்சிகள், எதிர்காலம் பற்றிய சிந்தனைகள் ஆகிய வற்றை வெளிக்கொணர்ந்து நம்நாட்டு வாசகர்களுடன் பகிர்தல் செய்தால் என்ன? என்ற சிந்தனை என்னுள் எழுந்தது.

எனவே அங்குள்ள கலை இலக்கிய வாதி களுடன் நேர்காணல் செய்து அவர்கள் கருத்துக்களை இங்குள்ளவர்களுக்குத் தெரிவிப்பதென முடிவு செய்தேன்.

எனது அவுஸ்திரேலியப் பயணத்தில் நான் அறிந்து கொண்டவற்றை இரு பகுதிகளாக வகுத்துக் கொள்ளலாம். ஒன்று எனது பயண இலக்கியக் கட்டுரை யில் உள்ளடக்கப்பட்ட அந்த நாட்டின் புவியியல், வர லாறு, மற்றும், சமூக, பொருளாதார, அரசியல் தொடர் பான விடயங்கள், கலை பண்பாட்டு விடயங்கள், சமயரீதியான விடயங்கள், அந்த நாட்டின் சுவாத்தியம், சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், எமது நாட்டு வாழ்க்கை முறைக்கும் அந்நாட்டு வாழ்க்கை முறைக் கும் உள்ள ஒப்புமை வேற்றுமைகள் போன்ற விடயங்கள்.

மற்றது, அந்தநாட்டில் உள்ள கலை இலக்கிய முயற்சிகள், மொழி, கலை, கலாசாரம் ஆகியன அழிந்து கொண்டு போவதைத் தடுக்க அங்குள்ளோர் மேற்கொள்ளும் பகீரத்தனங்கள், இளஞ் சந்ததி யினருக்கும் மூத்த தலை முறையினருக்கும் இடையே யுள்ள தலைமுறையிடைவெளிப் பிரச்சினைகள், வாழ்க்கையைத் தொலைக்கும் ஒருசில பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் போன்றவை. இவற்றை எனது மொழியில் கூறாது அங்குள்ள கலை இலக்கிய வாதிகளின் கூற்றாகப் பெற்றுக்கொள்ளலே சிறந்தது எனக்கருதி அவற்றை அவர்களுடனான நேர்காணல் கள் மூலம் பெற்றுக் கொண்டேன்.

அக்கால கட்டத்தில் நான் ஞானம் சஞ்சி கையை ஆரம்பித்திருக்கவில்லை. எனவே இங்குள்ள பத்திரிகைகளில் பிரசுரிக்க ஏற்றவாறு நேர்காணல் களை மேற்கொண்டேன். முதலில் நான் பெற்றுக் கொண்டது எஸ். பொ. வின் நேர்காணலாகும். அவர் அப்போதுதான் இந்தியாவிலிருந்து திரும்பியிருந்தார்.

ஐம்பது வருடங்களுக்கு மேலாக சளைக்காது எழுதிவரும் எஸ்.பொ. ஈழத்து இலக்கிய உலகில் மிகவும் ஆழமாகத் தடம்பதித்த மூத்த தலைமுறைப் படைப்பாளி. சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை, உருவகக்கதை, விமர்சனம், Creative essays, ஆய்வு போன்ற துறைகளில் முத்திரை பதித்தவர். இவரது

தமிழ்நடையும் வார்த்தைத் தொடுப்பும் தனித்துவ மானவை. தீ, சடங்கு ஆகிய நாவல்கள் இவர் எழுதிய தால் புதுமைபெற்றன. வீ, அவா, ஆண்மை, அப்பையா, வலை, முறுவல், நனைவிடை தோய்தல் உட்படப் பல நூல்களை எழுதியவர். இவரது 'வரலாற்றில் வாழ்தல்' சுயசரிதை நூல் 2000 பக்கங்களுக்கு மேற்பட்ட தனித்துவம் உடையது.

அறுபதுகளில் முற்போக்கு அணியினருடன் முரண்பட்டு இவர் முன்வைத்த 'நற்போக்கு இலக்கியக் கோட்பாடு' பெருஞ் சர்ச்சைக்கு உள்ளாகியது.

இவருடைய நேர்காணலில் பல்வேறு சர்ச்சைக் குரிய விடயங்கள் அடங்கியிருந்தபோதும் அவற்றை யெல்லாம் இங்கு தருவது எனது நோக்கமல்ல.

'புலம்பெயர்ந்தோர் இலக்கியம்' என்ற சொற் றொடரை தானே முதன்முதலில் முன்மொழிந்ததாக எஸ். பொ. உரிமைகோருகிறார். எனவே அவர் புலம் பெயர் இலக்கியம் பற்றிக் கூறிய கருத்துக்களின் ஒரு பகுதியைக் கீழே தருகிறேன்.

"புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என்றும் அதற்கு ஒரு தனி வீறும் வீச்சும் உண்டு எனவும் புலம் பெயர்ந்தோருடைய இலக்கியமே இருபத்தியோராம் நூற்றாண்டிற்குத் தலைமை தாங்கும் என்றும் கடந்த ஒரு தசாப்த காலமாக உரத்த குரலில் நான் பேசிவருகிறேன். இவை பற்றிய அக்கறையை தமிழ்நாட்டிலும் பல இலக்கியவாதிகள் மத்தியிலே பிரஸ்தாபித்தும் முன் வைத்துமுள்ளேன். ஆரம்பத்தில் இது சற்று நையாண்டி செய்யப்பட்டபோதிலும் இப்பொழுது முகிழ்ந்து வரும் நிலைகளையும் அண்மைக் காலத்தில் புலம்பெயர்ந்த இலக்கியங்களாக மக்களுக்குக் கிடைத்துவரும் நவீன இலக்கியங்களும் இதன் உண்மையை அன்றேல் நிதர்சனத்தை விளங்கக் கூடியதாக அமைந்துள்ளது. புலம்பெயர்ந்த இலக்கியங்கள் என்று ஆரம்பத்தில் பேசப் பட்டது ஈழத்தில் இருந்து நிர்ப்பந்தங்கள் வசமாக பனை வளர்ந்த நாட்டிலிருந்து பனி நிறைந்த நாடுகளுக்கு சென்று வாழும் இலக்கியங்களாக இவை தங்களை இனங்காட்டிக் கொண்டன. ஆனால் இன்று இந்தப் புலம் பெயர் இலக்கியமென்பது விரிவான அர்த்தத்தைப் பெறு வதாக அமைகிறது. சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடு களில் 83ஆம் ஆண்டு கலவரத்தின் நிமித்தம் இந்தப் புலம்பெயர்வு நிகழ்ந்ததில்லை. அவர்களும் இன்று தங்கள் இலக்கியங்களை புலம்பெயர்ந்த இலக்கியங் களாக இனங்காட்டவேண்டுமென நினைக்கிறார்கள். இதற்கான ஒரு பிரதான காரணத்தை நாங்கள் அறிந்து கொள்ள வேண்டும். ஒருகாலத்தில் பீஜித்தீவு, மொறிசி யஸ்தீவு, மலேசியா போன்ற நாடுகளுக்குச் சென்ற தமிழர்கள் தங்களை இந்தியர்களாக அடையாளப்படுத் திக்காட்ட முனைந்தார்கள். அவர்களுடைய இனத்துவ அடையாளம் ஒரு நாட்டின் அடையாளமாக இருந்தது. இந்த நிலமையிலிருந்து வேறுபட்டு ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து சென்றவர்கள் தங்களது இனத்துவ அடையாளமாக தமிழ்மொழி என்பதை முன் வைத்தார்கள். இன்று இனத்துவ அடையாளம் என்பது மொழிமூலம் பெறப்படும்பொழுது தங்களுடைய கலை இலக்கியப் பாரம்பரியங்கள் பேணப்படுவது மட்டுமல்லாமல் புதியதோர் வளர்ச்சிக் கட்டத்திற்கு எடுத்து செல்லப்படும் என்றும் கருதுகிறார்கள். எனவே இந்தப் புலம்பெயர் இலக்கியம் என்பது இன்று ஒரு நிதர்சன தமிழ் இலக்கியப் பண்பாக வளர்ந்து வருகிறது. இந்தப் புலம்பெயர் இலக்கியமே இருபத்தி யோராம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்திற்குத் தலைமை தாங்கும் என்றும் நான் திடமாக நம்புகிறேன்" என்றார்.

எஸ். பொ. வின் கருத்து நிலைக்கு நேரெதி ரான கருத்தை மாத்தளை சோமு கூறினார். மாத்தளை சோமு அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் மலையக எழுத்தாளர். சிறுகதை நாவல், கவிதை, கட்டுரை, பயண இலக்கியம் ஆகிய துறைகளில் எழுதி வருபவர். வீரகேசரி நடத்திய மலையகச் சிறுகதைப் போட்டியில் பரிசு, தகவம் இலக்கிய அமைப்பின் பரிசு, நாவலுக்குச் சாகித்தியப் பரிசு, விபவி சுதந்திர இலக்கியவிழா விருது, தமிழ்நாடு வல்லி தேவசிகா மணி விருது ஆகியவற்றைப் பெற்றவர். இலங்கை இந்தியா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேசியா, பிரான்ஸ், லண்டன் நாடுகளில் இருந்து வெளிவரும் ஏடுகளில் தொடர்ந்து எழுதிவருபவர். ஐரோப்பிய நாடுகளில் இலக்கியச் சுற்றுலா மேற்கொண்ட முதலா வது மலையகப் படைப்பாளி என்ற பெருமைக் குரியவர்.

புலம்பெயர்ந்தோர் இலக்கியமே இருபத்தி யோராம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தை முன் னெடுக்கும் என்ற எஸ். பொ. வின் கூற்றை மறுத்து இவர் பின்வரும் கருத்தை முன்வைத்தார்:

"தாய் மொழியைப் பேசாத இனம் இலக்கி யம் படைக்கமுடியாது. அவர்கள் அவ்வாறு படைத் தால் அது வேற்றுமொழி இலக்கியமாகத்தான் இருக் கும். 21ஆம் நூற்றாண்டில் புலம்பெயர்ந்தோர் இலக்கி யமே தமிழ் இலக்கியத்தை முன்னெடுத்துச் செல்லப் போகிறது என்று கூறுதல் கோஷமாக அல்லது கூட்டத்திலே கைதட்டல் பெறுவதற்குக் கூறக்கூடிய ஒரு விஷயமாகத்தான் எனக்குப் படுகிறது. சமீபத்தில் பல நாடுகளுக்கு நான் போய் பார்த்தபோது அங்கு ஆழமான இலக்கியம் பேசுபவர்களின் எண்ணிக்கை பத்துக்குள் இருப்பதாகத்தான் தோன்றுகிறது. அதாவது அவர்கள் கூடுகிற கூட்டத்திற்குப் பத்துப் பேருக்குமேல் வருவதில்லை. எனவே ஒரு குறுகிய வட்டத்துக் குள்ளேதான் இலக்கிய முயற்சிகள் இருக்கின்றன.

இந்நிலையில் இளைய தலைமுறையினர் இதில் ஈடுபட்டால்தான் அடுத்த நூற்றாண்டிலே புலம்பெயர் இலக்கியம் முன்னெடுக்கப்படும். ஆனால் இளைய தலை முறையினர் இதில் ஈடுபடுவதாக எனக்குத் தெரிய வில்லை. சிட்னியிலே நடைபெறுகின்ற கலை இலக்கிய நிகழ்ச்சிகளிலெல்லாம் முப்பந்தைந்து வயதுக்கு மேற் பட்டோரே கலந்து கொள்கின்றனர். குழந்தைகளுக்காக நிகழ்த்தப்படுகிற நிகழ்ச்சிகளிலேகூட பெற்றோருடைய பயமுறுத்தலின் காரணமாகத்தான் மண்டபத்துக்குள்ளே இந்தக் குழந்தைகள் இருக்கிறார்களே தவிர ஒரு ஆவலுடன் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பல பிள்ளைகள் வெளியிலே விளையாடிக் கொண்டிருப் பார்கள். அவர்களிடம் கேட்டால் Too much boring என்கிறார்கள். இதற்குக் காரணம் நான் முன்னர் கூறியது போல சுற்றுப்புறச் சூழ்நிலை இவர்களுக்கு வேற்று மொழியைப் போதிக்கிறது. அநேகமான வீடுகளிலே குழந்தைகள் தமிழ் பேசுவதில்லை. இவர்களுக்குத் தாயகத்துக்குப் போய்வரக்கூடிய வாய்ப்புகளும் மிகக் குறைவு. இந்நிலையில் இவர்கள் தமிழ் இலக்கியத்தை முன்னெடுத்துச் செல்வார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் வேறு மொழிகளில் தமிழர்கள் பற்றிய இலக்கியம் தோன்றும். அதை நான் உறுதியாகக் கூற முடியும். அந்த ரீதியிலே இன்றைய இளந் தலை முறையினர் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள்,

ஆரம்பத்திலே புலம்பெயர்ந்துவந்த எழுத் தாளர்கள் இலக்கியவாதிகள் தங்கள் ஆர்வத்தின் அடிப் படையிலே பலமுயற்சிகளை முன்னெடுத்தார்கள். ஆனால் பிறகு வாழ்க்கை அழுத்தங்கள் காரணமாக இம்மாதிரியான முயற்சிகளைக் கைவிடவேண்டிய கட்டாயத்திற்கு உட்படவேண்டி ஏற்பட்டுவிடுகின்றது.

புலம்பெயர்ந்த நாடுகளிலே இன்று வீடுகளிலே மூன்றாந்தர வீடியோ சினிமா படங்களையும் நாடகங் களையும் பார்ப்பதில் ஆர்வம் அதிகமாகியுள்ளது. படிக்கிற ஆர்வம் மிகவும் குறைந்துவிட்டது. இங்குள்ள றெயிலில் வெள்ளையர்களைப் பார்த்தால் கையிலே புத்தகங்களோடு போகிறார்கள். ஆனால் நம்மவர்கள் புத்தகங்களோடு போவதை நான் பார்த்ததில்லை. படிக்காத சமூகம் முன்னேறாது. இது வரலாறு சொன்ன கதை. இந்த அடிப்படையிலே பார்த்தால் புலம்பெயர் நாடுகளிலே ஆழமான இலக்கிய முயற்சிகள் குறைந்து விட்டன. ஆனால் ஆழமான இலக்கிய முயற்சிகளை முன் னெடுக்கவேண்டும் என்ற சிந்தனை மட்டும் குறைய வில்லை" என்றார்.

சி. மனோகரன் என்ற நாடகக் கலைஞரைச் சந்தித்தேன். இவர் கட்டிட ஒப்பந்தக்காரராகத் தொழில் புரிகிறார். இவர் சிட்னியில் உள்ள எல்லா நாடகக் கலை ஞர்களுடனும் எல்லா அமைப்புகளுடனும் இணைந்து நாடகங்களை மேடையேற்றி வருகிறார். ஆரம்பத்தில் விடுதலைப் போராட்ட வரலாறுபற்றியும், தியாகங்கள் பற்றியும் நாடகங்கள் தயாரித்து நடித்த இவர், தற்போது புலம்பெயர்ந்து வாழும் எதிர்காலச் சந்ததியினரை கலாசார அழிவிலிருந்தும் மொழி அழிவிலிருந்தும் காப்பாற்ற வேண்டிய நோக்குடன் நாடகங்களைத் தயாரித்து வருகிறார். இவரது நேர்காணலின் ஒரு பகுதி பின்வருமாறு அமைந்தது:

நான் 1986ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா வுக்கு வந்தேன். அப்போது என்கூட நினைவில் வந்தது எங்கள் மண்ணில் போதும் போதும் என்ற அளவிற்கு நடந்த அழிவுகளும் அவலங்களும்தான். எனவே நானும் இங்குள்ள நாடகக் கலைஞர்களும் சேர்ந்து விடுதலைப் போராட்ட வரலாறு பற்றியும் தியாகங்கள் பற்றியும் நாடகங்களை மேடையேற்றினோம். முதன்முதலில் சிட்னியில் நாங்கள் மேடையேற்றிய நாடகம் "மெழுகு வர்த்திகள்" இது ஒரு விடுதலைப் போராட்ட நாடகம். அதைத் தொடர்ந்து மூன்று நான்கு வருடங்கள் அதிக மாக விடுதலைப்போராட்ட பிரசார நாடகங்களையே மேடையேற்றினோம். இந்த நாடகங்கள் எங்களுக்கு ஒரு வரலாற்றுத் தேவையாக இருந்தது.

தற்போது எங்களது குழந்தைகளின் எதிர் காலம் பற்றிய பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினை யாக உருவெடுத்திருக்கிறது. அதிலே நாம் கவனம் செலுத்தவேண்டிய தேவை முனைப்புப் பெற்றுள்ளது. எமது தாயகத்தில் இருக்கின்ற சீதனக் கொடுமை, சாதிக் கொடுமை, வர்க்கவேறுபாடுகள் ஆகியவற்றை அறவே தெரியாமல் எங்கள் குழந்தைகள் இங்கே வாழ்கிறார் கள். இது ஒரு நன்மையான விஷயம். ஆனால் இங்கே இவர்களைக் காத்திருக்கின்ற பெரிய எதிரி கலாசார அழிவும் மொழி அழிவும். எனவே இந்த அழிவுகளி லிருந்து எங்களுடைய குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டிய தேவை எமக்கு இருக்கிறது. எனவேதான் கோயில் தேவைகளுக்காகவும் பாடசாலைத் தேவை களுக்காகவும் தயாரிக்கப்படுகின்ற நாடகங்களில் மொழிவளர்ச்சிக்கும் கலாசார வளர்ச்சிக்கும் உதவக் கூடிய நாடகங்களைத் தயாரிப்பதில் ஈடுபடத் தொடங் கினோம். ஆனால் இதிலே உள்ள பிரச்சினை என்ன வென்றால் நாங்கள் நாடகத்தை நாடகத்துக்காகத் தயாரிக்கவில்லை. உதாரணமாக ஹோம்புஷ் தமிழ் பாட சாலையில் இருநூறுக்கும் அதிகமான பிள்ளைகள் கல்வி பயில்கிறார்கள். அத்தனை பிள்ளைகளும் மேடை யில் ஏறி ஒரு சொல் என்றாலும் தமிழ் பேசவேண்டும் என்ற குறிக்கோளுடன் நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றுகிறோம். மகாபாரதம், இராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற இதிகாச நாடகங்களை முழுக் குழந்தைகளுமே பங்குபற்றக்கூடிய விதத்திலே தயாரித்து மேடையேற்றுகிறோம்.

ஒழுங்கான நாடகப் பயிற்சியுடன் இந்த

நாடகங்கள் மேடையேற்றப் படுவதில்லை. குழந்தைகள் தமிழ் பேசவேண்டும் என்ற ஒரு நோக்கத்துடனேயே மேடையேற்றப்படுகின்றன"என்றார்.

திரு.லெ.முருகபூபதி யாவராலும் நன்கு அறியப்பட்டவர். 1972ல் 'கனவுகள் ஆயிரம்' என்ற சிறு கதைத்தொகுதி மூலம் மல்லிகையில் அறிமுகமானவர். கதை, கட்டுரை, செய்தியறிக்கை, இலக்கிய ஆய்வு, புதினம் முதலான துறைகளில் எழுதிவருபவர். அவுஸ்திரேலிய 'தமிழ் அகதிகள் கழகம்', 'இலங்கை மாணவர் கல்வி நிதியம்' முதலிய அமைப்புகள் உரு வாகுவதற்கு முன்னின்று உழைத்தவர். சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் அமைப்பாளராக இருந்து முதலாவது சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் மாநாடு இலங்கையில் சிறப்புற நடைபெறுவதற்குக் காரணராய் விளங்கியவர். அவர் வெளிநாடுகளில் குடும்ப உறவு களில் பெரும் பிரச்சினையாக எதிர்நோக்கப்படும் தலை முறை இடைவெளி பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"வெளிநாடுகளில் வாழும் எமது தமிழர்கள் மத்தியில் மட்டுமல்ல எங்கும் எல்லா இட மக்களிடத்தும் இந்தத் தலைமுறை இடைவெளி உண்டு. அது – கல்வி யில் நடையுடை பாவனையில், பேச்சு மொழியில், வாழ் வில், அறிவியலில், கலை இலக்கியத்தில், இசையில், பாடலில் இப்படிப் பலவற்றிலும் புரையோடித்தான் இருக்கிறது. முன்பு நாம் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து திரைப்படப்பாடல்களைக் கேட்டு இரசித் தோம். இன்று இசையையும் இரச்சலையும்தானே இரசிக்கிறார்கள் இளம் தலைமுறையினர். இங்கு இப்பொழுதும் தினமும் இரவு பாரதி பாடல்களை கசட்டில் கேட்டுக்கொண்டுதான் துயில் கொள்கிறேன். எத்தனை தடவை கேட்டாலும் எனக்கு அலுக்கவில்லை. ஆனால் எனது பிள்ளைகள் இங்குள்ள கம்பியூட்டர், தொலைக்காட்சி, வானொலி முதலான சாதனங்களின் மூலம் இன்றைய இரைச்சல்மிக்க பாடல்களைத்தான் இரசித்துக்கொண்டிருக்கிறார்கள். தலைமுறை இடை வெளி என்பது வெறுமனே உறவில் மட்டும் தங்குவ தில்லை. சூழலும் ஒரு காரணம். பெற்றோர் ஒரு உலகி லும் பிள்ளைகள் வேறோர் உலகிலும் வாழ்கிறார்கள். பெற்றோர் இறந்த காலத்தைச் சுமந்துகொண்டு எதிர் காலத்தை அதிர்ச்சியுடன் நோக்கியவாறு நிகழ்காலத் தில் பதட்டத்துடன் வாழ்கிறார்கள். ஆனால் பிள்ளை களோ நிகழ்காலத்தை மாத்திரம் பரவசத்துடன் சந்திக் கிறார்கள். கடந்த காலமோ எதிர்காலமோ தற்போது தம்வசம் இல்லை என்ற தெளிவு இளம் தலைமுறை யினருக்கு உண்டு. மூத்த தலைமுறையினரைப் போன்று இன, மத, மொழி, பண்பாட்டுச் சிறைக்குள் முடங்கி விடாமல் சுதந்திரமாகச் சிந்திக்கவும் செயற்படவும் விரும்புகிறார்கள். இதனால் பெற்றோருக்கும் பிள்ளை களுக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றுகின்றன. இந்தப் பிள்ளைகள் பெற்றோருடன் தோழமையுடன் சினேக பாவத்துடன் பழகுவதற்கே விரும்புகிறார்கள். இதனைப் புரிந்துகொண்டு விவேகமாகச் செயற் படவேண்டிய பொறுமையும் சகிப்புத் தன்மையும் மூத்த தலைமுறையினருக்குத் தேவைப்படுகின்றன" என்றார்.

அருண் விஜயராணி இலங்கையிலும் இந்தியாவிலும் வாழ்ந்து தற்போது அவுஸ்திரேலி யாவில் வாழ்கிறார். 'கன்னிகா தானங்கள்' என்ற சிறுகதைத் தொகுதியை வழங்கிய இவர் மரபுவழி நின்று பெண் சமத்துவத்தை மிகத் தீவிரமாக ஆதரிப்பவர். தரமான நாடக எழுத்தாளர், இலங்கை வானொலியில் 25 வாரங்கள் தொடர்ந்து 'விசா லாட்சிப் பாட்டி' என்ற ஹாஸ்யத் தொடரை வழங்கி யவர். அவுஸ்திரேலிய முரசு என்ற பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றியவர். விக்டோரிய மாநில வானொலியில் கதை, கட்டுரை, இலக்கியச்சுவை என்ப வற்றை வழங்கியவர். இவர் ஒரு பெண்ணியச் சிந்தனையாளர் என்ற வகையில் பெண்களின் விவ காரங்களை அவர் எவ்வாறு அணுகுகிறார் எனக் கேட்ட போது, அவர் பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்.

"பெண்கள் செய்வது எல்லாமே சரியெனத் தலையாட்டிவிடுபவள் அல்ல நான். அளவுக்கதிகமான சுதந்திரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு தலை குனியும் படியான பலகாரியங்களைப் பெண்கள் வெளி நாடுகளில் செய்வதையும் அதற்குப் பெண் விடுதலை யைச் சாக்காகக் கொண்டு நியாயப்படுத்து வதையும் பார்க்கும்பொழுது வேதனையாகவும் அவமானமாக வும் இருக்கிறது. இவைகளைக் கண்டித்து எழுது வதற்கும் நான் தயங்குவதில்லை. ஆயின் ஒரு பெண்ணுக்குரிய அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுத்துள்ள வெளிநாட்டில் வாழ்ந்தும்கூட ஓரிரண்டு பெண்கள் மெல்போர்ணில் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். காரணம் குடும்பப் பிரச்சினை. கணவனது அன்பு வேறு பெண்பால் திரும்பிவிட்டமை. சிந்தித்துப் பார்த்தால் எவ்வளவு அற்ப விடயங்கள். இப்படி ஆண்கள்தான் தமது பலம் எனப் பெண்கள் நிரூபிப்பதுதான் பெண்ணின் நிலை இன்னமும் தாழ்ந்து கொண்டிருப்பதற்குக் காரணம். ஜேர்மன், கனடா, சுவிஸ், பிரான்ஸ் போன்ற நாடுகளில் நம் பெண்களின் நிலை பற்றிக் கேட்கவே வேண்டாம். நஞ்சருந்துதல், புகைவண்டிக்குள் தலையைக் கொடுத்தல், தூங்கிச்சாதல் போன்றவை அடிக்கடி நிகழ்கின்றன. ஆசிய நாடுகளில் இருந்துவரும் பல பெண்களுக்கு இங்கு அமைந்துள்ள அடிப்படை வசதி கள் புரிவதில்லை. எனவே மகளிருக்கான அமைப்புக் கள் எழுதுவதோடு நேரடியாக அவர்களிடையே செல்லமுடியுமாயின் அவர்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றிற்கான தீர்வைக்கண்டறியலாம்.

இப்படியான தற்கொலைகளைத் தடுக்கலாம். என் வரையில் எனக்குத் தெரிந்த பெண்களின் வாழ்க்கையில் பிரச்சினைகள் ஏற்பட்டால் கூடியவரையில் தலையிட்டு அவற்றைத் தீர்க்க முயல்கின்றேன். இந்த நேர்காணலைப் படித்துவிட்டு, வெளிநாட்டுப் பெண்கள் தமது பிரச்சினையை என்னிடம் சொல்ல விரும்பினாலோ எழுத்து வடிவத்தில் தரவிரும்பினாலோ என்னோடு தொடர்பு கொள்ளலாம்.

பெண்களுக்கான அமைப்புக்கள் வெறுமனே தாங்கள் சந்தித்துக் கொள்வதினால் பெரிய நன்மைகள் நடைபெற்றுவிடமுடியாது. ஜெர்மனியில் இருந்து அண்மையில் மெல்போர்ண் வந்த தேவா என்பவர் தாம் பெண்களுக்கான அமைப்பை தம் நாட்டில் நடத்தியும் ஏராளமான தற்கொலைகள் நடைபெற்றுவிட்டன எனக் கூறிக் கவலைப்பட்டார். இதற்கான முக்கிய காரணமே, அவை தெளிவாக விளம்பரப்படுத்தப் படாமை. இரண்டாவது இவர்கள் நேரடியாக பிரச்சினைக்குரியவர்களிடம் செல்ல முடியாமை. அடுத்து Counseling என்ற அமைப்புக்கள் இங்கு கூடுதலாக உண்டு. இந்த அமைப்பில் பலதரப்பட்ட பிரச்சினைகளைக் கையாளக் கூடிய பக்குவத்தை அறிவுபூர்வமாகச் சொல்லித்தர பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்கள் (Counselor) இங்கு அங்கம் வகிப்பார்கள். இவ்வமைப்பு நம்நாட்டு மக்களுக்கான தீர்வுகளைச் சொல்லித்தருவது மிகவும் கஷ்டம் என நினைக்கிறேன். காரணம் நம் வாழ்க்கை முறை முற்றிலும் அவர்களிடமிருந்து வேறுபட்டது. எனவே நம்நாட்டுப் பெண்கள்(இதய சுத்தி, மனித நேயம், இரகசியத்தைக் காப்பாற்றும் எண்ணம், கொண்டவர்கள் மட்டும்) இப்படியான பயிற்சிகளைக் கைக்கொண்டு அப்படியான உத்தியோகத்தர்களாகப் பணியாற்றினால், பலபெண்கள் உறவினர்களிடம் சொல்லமுடியாத பல பிரச்சினைகளை இவர்களிடம் கூறி ஆலோசனை பெற்று தம் வாழ்வை இனிதே நடாத்திச் செல்லலாம். இப்படிப்பட்ட பெண்கள் மகளிருக்கான அமைப்புகளில் அங்கம் வகிப்பதும் நன்று. பெண்களுக்கு மட்டுமல்லாது எல்லாத் தரப்பினருக்கும் இவ் அமைப்புகள் நன்மை பயக்கும்" என்றார்.

மேலே, நான் கண்ட நேர்காணல்களின் வகை மாதிரியான சிற்சில பகுதிகளே தரப்பட்டுள்ளன. இவை புலம்பெயர் வாழ்வின் பிரச்சினை மையங்களை ஓரளவாவது வாசகர்புரிந்துகொள்ள உதவும் என நம்புகிறேன்.

இந்த நேர்காணல்கள் ஐந்து வாரங்கள் தொடர்ச்சியாக வீரகேசரி வாரவெளியீட்டில் வெளியாகின. அப்போது வீரகேசரிக் காரியாலயத்திற்கு நான் சென்றிருந்த வேளையில் வீரகேசரி வாரவெளியீட்டின் ஆசிரியர் திரு.வி. தேவராஜ் அவர்கள் இந்த நேர்காணல் தொடருக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. வாசகர்களிடமிருந்து இந்த நேர்காணல் தொடரைச் சிலாகித்துக் கடிதங்கள் வந்திருக்கின்றன. இந்த நேர்காணல் தொடரை நூலாக்கினால் அது புலம்பெயர் வாழ்வின் பிரச்சினைகளை அறிந்துகொள்ள ஒரு பயன்மிக்க நூலாக இருக்கும் என்றார்.

அவரது ஆலோசனைக்கு அமைய, ஐவரின் நேர்காணல்கள் அடங்கிய இந்த நேர்காணல் தொடரை "புரிதலும் பகிர்தலும்" என்ற தலைப்பில் நூலாக்கினேன். இந்த நூலுக்கு வீரகேசரி வார வெளியீட்டின் ஆசிரியர் வி. தேவராஜ் அவர்களே முன்னுரை எழுதியிருக்கிறார். அந்த முன்னுரையின் ஒரு பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது.

"நேர்காணல் என்பது ஒரு கலை. வெறுமனே கேள்விகளும் பதில்களும் நேர்காணல் ஆகிவிடாது. நேர்காணல் காணப்படுபவர் பற்றிய பின்னணியும், அவரது துறைசார்ந்த அறிவும், அவரிடமிருந்து எவற்றைப் பெற்று சுவைஞர்களுக்குத் தரவேண்டும் என்ற தெளிவும் கேள்விகளைத் தொடுப்பவருக்கு இருக்கவேண்டும். அதேவேளையில் அவரிடமிருந்து வெளிக்கொணரப்படும் விடயங்கள் வெறமனே கருத்துக்கோவையாக இருந்துவிடாது அவரது மனவுணர்வுகளை வெளிக்கொணரும் வண்ணம் கேள்விகள் தொடுக்கப்படவேண்டும்....

திரு.தி.ஞானசேகரனின் "புரிதலும் பகிர்தலும்" என்ற இந்தத் தொகுதியை வாசிக்கும் பொழுது, நேர்காணல் பற்றிய பூரணத்தெளிவோடு அவர் செயற்பட்டிருக்கிறார் என்பது புலனாகிறது...


"...நம் நாட்டின் இனப்பிரச்சினை உக்கிரம் அடைந்த வேளையில் காலத்தின் நிர்ப்பந்தம் காரணமாக நம்மவர்கள் பலர் பனிபடர்ந்த நாடுகள் பலவற்றில் புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள். இவர்கள் வாழும் நாடுகள் பலவாக இருப்பினும் எதிர்நோக்கும் வாழ்வியல் பிரச்சினைகள், மனவுணர்வுகள், எதிர்காலம் பற்றிய சிந்தனைகள், பிரிந்து சென்ற மண்ணைப்பற்றிய ஏக்கங்கள், எதிர்காலச் சந்ததிகள் பற்றிய கவலைகள், மொழி, கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை பேணிக்காப்பதற்கு எடுக்கும் முயற்சிகள் போன்றவை பொதுவானவையாகத்தான் இருக்கின்றன. இவை பற்றிய ஒரு வெட்டுமுகத்தை இந்த நேர்காணல் தொகுதியில் காணக்கூடியதாக இருக்கிறது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நேர்காணல் 1999 மார்கழியில் 'ஞானம்' பதிப்பக வெளியீடாக வெளியாகியது.

எனது இலக்கியத் தடத்தில், படைப்பிலக்கிய முயற்சிகளுக்கு அப்பால் இத்தகைய நேர்காணல்கள் பிறிதொரு வகையான இலக்கியம் சார்ந்த முயற்சியாக – இலக்கியத் தகவற் கருவூலங்களாக, வரலாற்றுப் பதிவுகளாக அமைந்திருக்கின்றன.

**(இனி அடுத்த இதழில்)**

அ.விஷ்ணுவர்த்தினி



# திருப்பம்

தலையில் வைத்துள்ள கூடையின் பாரம் தாங்க முடியாமல் அதனை இறக்கித் தரையில் வைத்துவிட்டு, பக்கத்திலிருந்த கல்லில் உட்கார்ந்திருந்தாள் சந்திரமதி.

வீட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட ஊறுகாய்ப் போத்தல்கள் அனைத்தும் விற்கப்படாமல் கூடைக்குள் அடைபட்டுக் கொண்டிருந்தன.

சூரியன் நடு உச்சியில் நின்று கொண்டு தனது வெப்பத்தை பரப்பி விட்டிருந்தான். 'இந்த சூரியன் சரிந்து செல்ல முன்னரே அவள், அக்கூடையிலுள்ள ஊறுகாய்ப் போத்தல்கள் அனைத்தையும் விற்று முடிக்க வேண்டும்' என்று மனதில் உண்டான வேகம் உடலில் ஏற்படவில்லை. நீண்ட தூரம் நடந்து வந்த களைப்புத் தீர அவ்விடத் திலேயே கொஞ்ச நேரம் உட்கார்ந்திருக்க வேண்டும் போல இருந்தது.

போரினால் ஏற்பட்ட வடுக்களாய் அழியாச் சின்னங்களாய் அவள் கண் முன்னால் தெரிந்த வீடுகள், கட்டிடங்கள். முண்டங்களான பனைகள் என எல்லா வற்றையும் காணும் போது, சந்திரமதிக்கு தன் நினைவு கள் வந்து அலைமோதின.

இன்று அவளுடைய வீடும் இதே போன்றதொரு நிலையில் தான். சுவர்களில் சல்லடைகள் போடப்பட்டு, ஓடுகளைத் தாங்கி நின்ற சலாகைகள் கழற்றப்பட்டு, கதவு கள், ஜன்னல்கள் எதுவுமற்று அம்மணமாய் காட்சி யளித்தன.

நான்கு வருடங்களின் முன் சந்திரமதி, தன் கணவனுடனும் மூன்று பிள்ளைகளுடனும் சந்தோசமாய் வாழ்ந்த அந்நாட்களை இப்போது நினைத்தால் கூட அவளுக்கு தேனாய் இனிக்கும்.

பெரும்பாலான பெண்களுக்கு கடவுளால் சபித்து விடப்பட்ட சாபம் போல, அத்தகைய சந்தோசங் களெல்லாம் சிறிது காலம் தான் நிலைப்பவை போலும் இனிமேல் அவற்றுக்கெல்லாம் எத்தனையோ சந்திரமதிகளின் வாழ்வில் இடமில்லை.

சந்திரமதியின் கணவன், அவள் கண் முன்னா லேயே இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து உயிரைவிட்ட போது தானும், தன் குழந்தைகளும் அந்த நேரமே உயிரை விட்டால் என்ன? என்ற மனநிலையில் தான் அவள் இருந்தாள்.

திருமணத்தின் பின், பெண்கள் ஆண்களி லேயே தங்கி வாழ வேண்டும் என்ற பாரம்பரியமான வழக்கத்தின் கீழ் வாழ்ந்த சந்திரமதியின் மனதில், 'இனி நான் யாரில் தங்கி வாழ்வது' என்ற கேள்வி மனதில் துளிர்த்தது. கணவனுக்குப் பிறகு மகனையல்லவா தாய் நம்பி வாழவேண்டும். ஆனால் எட்டு வயது கூட நிரம் பாத அந்தப் பிஞ்சுக் குழந்தை இப்போது கூட தாயின் நிழலைத்தானே நம்பியிருக்கிறது. இந்த நிலையில், அவளுடைய மகன் வளர்ந்து வேலைக்குச் செல்லும் வரை, மூன்று குழந்தைகளுக்கும் எப்படிச் சாப்பாடு போடப் போகிறேன் என்ற தவிப்பிலிருந்து விடுபட அவளுக்கு பல நாட்கள் எடுத்தன.

ஒன்றரை வருடங்களை முகாமில் கழித்த போது, அங்கு அவர்கள் தந்தவற்றை உணவாக்கி, உடு துணிகளாக்கி எப்படியோ காலத்தைக் கடத்தினாள்.

முகாமிலிருந்த நான்கு லட்சம் மக்களுக்கு உணவு, உடை கொடுத்து சமாளிப்பது கஷ்டம் என நினைத்தார்களோ என்னவோ... அரைவாசி மக்களை அவரவர் சொந்த இடங்களில் குடியேற்றினர். சந்திர மதியும் அவர்களுள் ஒருத்தியானாள்.

சொந்த மண்ணில் சொந்த வீட்டுக்கு அவள் வந்த போது இனிமேல் சந்தோசமாய் வாழலாம் என்ற நினைப்பை அவ்வீட்டின் தோற்றம் சுக்குநூறாக்கியது. அதனைத் திருத்துவதென்றால் சில லட்சங்கள் வரை செலவாகும்.

வீடு புனரமைப்புக்காக அரசு கொடுத்த ஆயிரங்களைக் கொண்டு சந்திரமதி சிறு குடிசை அமைத்தாள்.

சந்திரமதி குழந்தைகளுடன், சாப்பாட்டுக்குக் கூட வழியில்லாமல் கஷ்டப்படுவதைப் பார்த்த அவளது

பெற்றோர், அவளையும் குழந்தைகளையும் தம்மோடு வந்திருக்கும்படி அழைத்தனர்.

அவர்கள் அழைத்தபோது அவள் சந்தோசப் பட்டாள். இந்த உலகில் தான் தனித்து விடப்பட்டவள் அல்ல என்பதைப் புரிந்து கொண்டாள்.

ஒருமாதம், இரண்டு மாதம் அவர்கள் போடும் சாப்பாட்டைச் சாப்பிடலாம். வாழ்நாள் பூராக இப்படியே இருப்பதென்றால், நாட்கள் செல்லச் செல்ல பெற்ற தாய் தந்தை என்றாலும், அவர்களுக்கும் வெறுப்பு வந்து விடும். பெற்றோர் தம் பெண்பிள்ளைகளை இன்னொரு வருக்கு திருமணம் செய்து கொடுப்பதே தம் பாரம் நீங்குவதற்குத்தானே...! அப்படியிருக்க, கட்டிக் கொடுத்த பின்பும் அவள் பெற்றோருக்கு பாரமாக இருப்பதா...! அப்படியிருக்குமளவுக்கு சந்திரமதி கையாலாகாதவள் இல்லையே...

பெற்றோரின் நிழலைப் பின் தொடர அவளின் தன்மானம் இடங்கொடுக்கவில்லை.

ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி பெற் றோரை சமாதானம் செய்து விட்டாள்.

ஒரு இளம் விதவை பெண், இந்த உலகில் தனியாக வாழும்போது ஏற்படும் அச்சுறுத்தல்களை அவள் அறிந்திருக்கவில்லை.

கிளிநொச்சியிலுள்ள அவளது அந்த சிறு குடிசையின் அருகில் வேறு வீடுகள் இருந்திருக்க வில்லை.

திடீரென ஒரு நாள் இரவு கதவு, 'டொக், டொக்' என பலமாகத் தட்டப்பட்டது. உறவினர்கள் யாரோ தான் தட்டுகிறார்கள் என கதவைத் திறந்தவள், முகத்துக்குக் கறுப்புத் துணி கட்டிக்கொண்டிருந்த உருவத்தைக் கண்டு அதிர்ச்சிக்குள்ளானாள். உடனடியாக அவள் மயக்க மடைந்தாள்.


சந்திரமதி சற்றும் இதனை எதிர் பார்த்திருக்க வில்லை.

நிலைமையை விளங்கிக் கொண்ட அவளது பிள்ளைகள் மூவரும் விழுந்தடித்து ஓடிச் சென்று அயலி லுள்ளவர்களை அழைத்து வருவதற்கிடையில் அந்த உருவம் ஓடி மறைந்தது.

அதன் பின், அவள் தன் பெற்றோரின் வீட்டின ருகே ஒரு குடிசையை அமைத்துக் கொண்டாள்.

கணவனை இழந்தவள் பிள்ளைகளை வளர்க்க வேறு வழியின்றி, தம்மைப் போன்ற ஆண்களை தேடி வருவார்கள் என கனவு கண்டவர்களின் மத்தியில் சந்திரமதி வாழ்ந்து காட்ட நினைத்தாள்.

அவளின் பெற்றோர் அவளுக்கு மறுமணம் செய்து வைக்க பல முறை முயன்று தோற்றனர். சந்திரமதியை திருமணத்திற்கு சம்மதிக்க வைக்க, அவளின் தாய், "இங்க பார் பிள்ளை, நீ நினைக்கிறது மாதிரி இந்த உலகம் இல்லை. ஒரு பொம்பிளைப்



பிள்ளை தனிய, அதுவும் இந்த ஊரில வாழுற தெண்டால் அது பெரிய சோதனை தான். எங்களுக்கும் வயசு போட்டுது. நாங்களும் எப்ப இந்த உலகத்தை விட்டுப் போவம் எண்டு தெரியாது. அதுக்குப் பிறகு நீ தனிய கஷ்டப்படுவாய் பிள்ளை. உனக்கு இப்ப எந்த விதமான வருமானமும் இல்லை. உன்ர பிள்ளை யளின்ர எதிர்காலத்தை அநியாயமாக்கப் போறாய். அதுகளை எப்படி தனிய வளர்ப்பாய். ஒரு ஆம்பிளை துணையில்லாமல் பொம்பிளை தனிய வாழமுடியாது. அது தான் பிள்ளை சொல்றன். கேட்டுக் கொள். துரைச் சாமியை உனக்குத் தெரியுந் தானே பிள்ளை. அவரும் உன்னை மாதிரித் தான். பெஞ்சாதியை இழந்திட்டு நிக்கிறார். உன்னைக் கலியாணஞ் செய்ய அவர் விரும்புறாராம். நாங்களும் அவர் கேட்டதை சரி யெண்டு நினைக்கிறம். நீங்கள் இரண்டு பேரும் சேர்ந் தால் ஒருத்தருக்கொருத்தர் ஆறுதலாய் இருப்பியள். நீ என்ன பிள்ளை சொல்கிறாய்"

இவ்வளவு நேரமும் தாய் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தவள், இழைத்த ஓலைப் பெட்டியை பொத்தி முடித்துவிட்டு,

"அம்மா, நான் உங்களுக்கு கடைசியா ஒண்டு சொல்றன். எனக்கு மறு கலியாணம் எண்ட கதை கதைக்கிறதெண்டால் இந்த வீட்டுப் பக்கம் வர வேண்டாம்"

"உன்ர நல்லதுக்குத் தானே சொல்றன்..."

என்று தாய் கூறியதை இடைமறித்து,

"எது நல்லது கெட்டது என எனக்குத் தெரியும். என்ர புருஷனோடு நான் வாழ்ந்த வாழ்க்கையை மறக்கேல்ல. ஆயுளுக்கும் அந்த சந்தோசமே போதும். என்ர புருஷன்ர இடத்தில துரைச்சாமியை வைக்கேலாது. அவன் பொம்பிளைக் கள்ளன். என்னைப் போல விதவையா இருக்கிற பொம்பிளையளிட்ட அவன் என்னத்தையோ எதிர்பார்க்கிறானே தவிர, எனக்கும் என்ர பிள்ளைகளுக்கும் வாழ்க்கை தரவேணுமெண்டு அவன் நினைக்கேல்ல. இப்ப நீங்கள் சொல்றபடி நான் அவனை கலியாணம் செய்தால், நாலைஞ்சு மாசத்துக்கு என்னோட இருந்து எல்லாத்தையும் அனுபவிச்சிட்டு, எவனோ பெத்த பிள்ளைகளுக்கு நான் அப்பாவா இருக்க மாட்டனெண்டு சொன்னால் என்ர நிலமை என்னம்மா?" என்று கேட்டவளின் கேள்விக்குத் தாயால் பதில் சொல்ல முடியவில்லை. மீண்டும் சந்திரமதியே தன் மனதில் தோன்றியவற்றைக் கொட்டினாள்.

"ஒரு விதவைப் பொம்பிளையை ஒரு ஆண் கலியாணம் செய்ய விரும்புறானெண்டால், அது வெறும் உடற் பசியை தீர்க்கத் தான். இந்த உலகத்தில உள்ள ஒரு சில ஆம்பிளையள் பொம்பிளையளின்ர மனதைப் புரிந்துகொண்டு மறுவாழ்வு கொடுப்பினம். ஆனால் இந்தத் துரைச்சாமி மாதிரியான ஆம்பிளையள் தாற வாழ்வு மாசக்கணக்கில் தான். அம்மா, நீங்கள் என்னைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். இன்னும் ஐஞ்சாறு வருசத்தால என்ர பிள்ளையள் வளர்ந்து எனக்கு துணையாயிருப்பினம். என்ர புருஷன் என்னை தனிய விட்டுட்டுப் போனாலும், தன்ர தொழிலை எனக்குத் தந்துவிட்டுப் போயிட்டார்"

"ஆம்பிளை செய்யுற தொழிலை நீ எப்படிப் பிள்ளை தனிய செய்வாய். அந்த மனுசன் இருந்த காலத்தில ஓடியோடி ஊறுகாய் போத்தல்களை கடைகளுக்கு குடுத்தார். நீ பொம்பிளை ஓடியாடி செய்வியோ?"

"என்னம்மா உப்பிடிக் கதைக்கிறியள். ஆம்பிளையள் செய்யுறதை நாங்கள் செய்யேலாது எண்டு நீங்கள் எல்லோரும் இப்படி நினைக்கிறதால தான் என்னை மாதிரி பொம்பிளையள் அடிமைப்பட்டு வாழுறம். ஆம்பிளையள் மாதிரித் தான் எங்களுக்கும் இரண்டு கை, கால்களை கடவுள் தந்திருக்கிறார். என்ர புருஷன் ஊறுகாய் போத்தல்களை கடை கடையாய் விற்றார். நான் என்னால முடிஞ்ச வரைக்கும் ஊரூராய் நடந்து போய் ஒவ்வொரு வீடு வீடாயும், அயலிலுள்ள கடைகளுக்கும் விற்கப் போறன். அதில மிச்சப்படுத்தி ஒரு சைக்கிள் வாங்கினனெண்டால் தூரத்திலுள்ள கடைகளுக்கும் கொண்டு போய் விற்றுப் போடுவன். அதை விட மிச்ச நேரங்களில பாய், பெட்டி இழைக்கிறன். இது போதும், நான் என்ர பிள்ளைகளை வளர்ப்பதற்கு"

தன் மகளின் தன்னம்பிக்கையைப் பார்த்து



பெருமைப்படுவதா? அல்லது பரிதாபப்படுவதா? எனக் குழப்பமான நிலை அந்தத் தாய்க்கு.

சைக்கிள் 'பெல்'லின் சத்தத்திற்கு சுய நினைவுக்கு வந்த சந்திரமதி, தன்னை உற்று நோக்கியபடியே துரைச்சாமி பெல்லை அடித்துக் கொண்டு வருவதைக் கண்டாள். துரைச்சாமி அண்மையில் தான் மறுமணம் செய்து கொண்டான் என்பதையும் அவள் அறிந்திருந்தாள்.

மறுமணம் செய்த பிறகும் கூட துரைச்சாமி தன்னை விஷமத்தனமாய் பார்ப்பதை உணர்ந்தவள். கூடையைத் தூக்கி தலை மேல் வைத்துவிட்டு, கால்களின் வேகத்தை அதிகரித்தாள்.

அருகாக வந்த துரைச்சாமி கேட்டான், "நான் உன்னை வைச்சிருக்க விரும்புறன். நீ விரும்பினியெண்டா ஒருத்தருக்கும் தெரியாமல் உன்னட்டை வந்திட்டுப் போவன். நீ இப்பிடிக் கஷ்டப்படவும் தேவையில்லை..."

துரைச்சாமி சொல்லிமுடிக்குமுன், அவள் எச்சிலைக் காறி உமிழ்ந்தாள்.

"சீ, நாயே! என்னை, அந்த மாதிரிப் பொம்பிளையெண்டு நினைச்சாய் போலை... ஏதாவது வாலாட்டினால் உன்ரை வாலை ஒட்ட வெட்டிவிடுவன். ஊரையெல்லாம் கூட்டி உன்னை அவமானப்படுத்து வன்..."

அவள் கத்த ஆரம்பித்ததுமே துரைச்சாமி வேகமாக ஓடி மறைந்தான்.

இவளுக்கு இப்போது நடந்து முடிந்து போன வாழ்க்கையின் துயரங்களை விட, இனி வாழப் போகின்ற வாழ்க்கையின் துயரங்களே கண் முன்னால் பெரிதாகத் தெரிந்தன.

ஆனாலும், அந்த வாழ்க்கையை எதிர் கொள்ளத் துணிந்தவளாய், கூடையைத் தூக்கித் தலை மேல் வைத்துக்கொண்டு, சற்று வேகமாய் நடக்கத் தொடங்கினாள்.

# ஜாஹிலிய்யாக் கால
# அரேபியக் கவிஞன்
# இம்ர உல் கைஸின்
# கவிதைகள்
# தமிழில்
# பேருவளை றபீக் மொஹிடீன்



பாலைவனப் பயணிகளே...!
சற்று நில்லுங்கள்
என் பாலைவனக் காதல்
கதை தனைக்
கேட்டுச் செல்லுங்கள்
இது
உங்கள் தாகத்திற்கு
விருந்தாகலாம்
நடந்து நொந்த
உங்கள் இதயத்திற்கு
மருந்தாகலாம்
வாருங்கள்... வாருங்கள்...
என் இதயம் முத்தமிட்ட
காதலெனும்
சுனை நீரைப் பருகி...
வெம்மையால் வாடிய
உங்கள் மனம் குளிர...
களைப்பு இளைப்பாற...
கானம் பாடுவோம்
வாருங்கள்...

***

'ஸிக்தில் லிவா'
என் காதலி
கால் தடம் பதித்த
அழியாத சுவடு...
'தஹ்லுக்கும்' 'பஹ்மலுக்கும்'
இடையேயான காதல் வனம்
அங்கே
என் காதலை நினைவுபடுத்தும்
பழைய சின்னங்களையும்
என் காதலியோடு
நான் கழித்த
இனிய பொழுதுகளையும்
சற்று மீட்டி...
நீட்டிப் பார்த்து
அழுது மகிழ்வோம்

***

'தூழிவற்', 'மிக்றாத்'
ஆகிய இடங்களை
வருடி வரும் இரு தென்றல்
என் காதல் நந்தவனத்தை
தூசு படிய விடாமல்
துடைத்திருக்கிறது...
'ஜனூப்' எனும்
தென்னிளங் காற்று
பூப்பெய்திய என் பூங்காவனத்தை
அலங்கரிக்க...
'ஷிமால்' எனும்
வட இளந் தென்றல்
அதன் மீது ஆடையாக
படர்ந்திருக்கிறது...
என் காதலை நினைவுபடுத்தும்
அந்தச் சின்னம்
பூங்காற்றினால்
காக்கப்பட்டிருக்கிறது

***

அதோ பாருங்கள்
அங்கே பாருங்கள்
வெண் மணலிலே தூவப்பட்ட
மிளகு விதைகளைப் போல
அப்பாலைவன மணல் வெளிகளிலே
காட்சியளிக்கும் பெண் மானின்
எச்சங்கள்...
அவை எனக்கு
என்னைப் பிரிந்த என் காதலியை
நினைவூட்டுகின்றன

***

அந்த நாட் பொழுது...
என் காதலி தன் கூட்டத்தாரோடு
ஒட்டகத்திலே ஏறி
என்னை விட்டுப் பிரிந்தபோது
துயரம் என் இதயத்தை அறுத்தது
அப்போது
'ஸமுராத்' மரத்தடியில்
கறுப்பான 'ஹன்ழல்' விதைகளை
கடித்தவனைப் போன்று
அழுது கொண்டிருந்தேன்.
ஒட்டகங்களைத் திருப்பிய நிலையில்
என் தோழர்கள் எனக்குரைத்த
ஆறுதல் மொழிகள்
எனக்கு
ஆனந்தத்தைத் தரவில்லை

***

என் வேதனைக்கான நிவாரணி
நான் வடித்த கண்ணீரில்
நிறையவே இருந்தது...
எனினும்...
கடந்து போன பழைய நாட்கள்
மீண்டும் மீண்டு வரும்
என்ற நம்பிக்கையில்
நடந்து வந்த பாதையினூடாக
காத்திருக்கிறேன்


***

'உம்முல் ஹுவைரிஸ்', 'உம்முர் ரபாப்'
'மஃஸல்' சோலையின்
வாடா இரு மலர்கள்...
நான் முழுமையாக முத்தமிட்டு
முகர்ந்த
என் முன்னாட் கனவுக் கன்னிகள்
அவர்களின் மேனியோ கஸ்தூரி...
அதனைத் தடவி வரும்
இளந் தென்றல்
கராம்பின் வாசனையைச்
சுமந்து வரும்...
அந்த வாசனை
என் வேட்கையைத் தூண்டி...
வேதனையை அதிகப்படுத்தியது...
அதனால்...
என் கண்களில்
ஊற்றெடுத்த கண்ணீர்
கழுத்திலே விழுந்து...
இடுப்பு வரை இறங்கி...
வாளுறையை ஈரப்படுத்தியது
அந்த ஈரம்
என் இதயத்தை நனைத்து
என்னை சாந்தப்படுத்தியது

***

அந்த என் காதலியரோடு
இரண்டறக் கலந்திருந்த
நாட்கள் தான் எத்தனை... எத்தனை...
அதிலும்... 'தாரத்தில் ஜல்ஜல்'
அங்கே
அவர்களின் பெண்மைக்குள்
என் ஆண்மை
முழுமையாக அடங்கிக் கிடந்தது
அவர்களின் நாணத்தோடு
விளையாடி
கானம் பாடியபோது
என் ஆன்மா அமைதி கண்டது
***
அதனால்... அவர்களுக்காக...
என் வாகனமான
ஒட்டக ஏற்றை அறுத்து
விருந்து படைத்தேன்
என்ன ஆச்சரியம்...?
அதன் பயன்...
அதனை அவர்கள்
முழுமையாகவே
அனுபவித்து விட்டார்கள்
நான் ஒட்டகமிழந்தேன்
அவர்களோ என்னிடம்
தம் பெட்டகம் இழந்தார்கள்...!
***
மேலும் இரண்டு பெண்கள்...
ஒருத்தி கர்ப்பம் தரித்தவள்
அவளின் இரகசியங்களிலெல்லாம்
நான் இரகசியமாக
உலாவியிருக்கிறேன்...
அவளின் மர்மங்களையெல்லாம்
என் மர்மங்களால்
அடைகாத்திருக்கிறேன்...
இன்னொருத்தி
ஒரு வருட குழந்தையின் தாய்
அவளின் அந்தரங்களை
என் அதரத்தால்
குளிர வைத்திருக்கிறேன்...
அவளது குழந்தை
பாலுக்காக அழுதபோது...
தன் வயிற்றின் மேலுள்ள அரைப் பகுதியை
குழந்தையின் பக்கம் திருப்பினாள்.
குழந்தை பாலுண்டது
கீழ் அரைப் பாகத்தை
என் பக்கம் திருப்பினாள்
நான் தேனுண்டேன்...!
***
என் ஆண்மை
பல பெண்மைகளை
வென்றிருக்கிறது

அவர்களின்
நாடி நரம்புகளையெல்லாம்
என் உச்ச நரம்பு
உரசிப் பார்த்திருக்கிறது
சுருதிலயம் அடங்கி ஓய்ந்த
வீணைகளைக் கூட
நிசப்த இரவுகளில்
நான் மீட்டியிருக்கிறேன்
இந்த நிலையில்
என்னை விரும்பாதவள் எவள்?
***
என் காதலி
'உனைஸா...!'
அவள் பெயரை உச்சரிக்கும்போது
அன்றைய பொழுது
எனக்கு நினைவு வருகிறது
அதனால்...
இன்றைய பொழுது கூட
எனக்கு இனிப்பாகிறது
அன்று...
ஒட்டகமிழந்த நான்
உனைஸாவின் ஒட்டக அம்பாரிக்குள்
நுழைந்தபோது
அவள் மனம் படபடத்து...
வாய் குழறி...
வார்த்தை வெளிவராமல்
வழுக்கி விழுந்தது...
இனிய வார்த்தைகளை
அவள் உதடுகள் மறைக்க
அவள் கண்கள் மட்டும்
எனக்கு நேசக் கரம் நீட்டியது
***
நான்
அம்பாரிக்குள் அவளோடு...
பூப்பறித்து மகிழ்ந்திருந்தேன்...
அந்த நினைவுகள்
இன்னும் பசுமையாக...
என் இதயம் முழுக்க...
இனிக்கிறது...!
***
மற்றுமொரு நாள்...!
மணற் குன்றிலிருந்து...
அவளை நான் அழைத்தபோது
என்னை ஏற்றுக் கொண்டு
என் வேண்டுகோளை மட்டும்
நிராகரித்தாள் – அதற்காக
மன்னிப்பும் கேட்டாள்
ஆனாலும்...
என்னை ஏற்ற அவளால்
என் வேண்டுகோளை
மாற்ற முடியவில்லை
அவளது சத்தியமும் பிடிவாதமும்

என் ஆண்மைக்குள்
தோற்றுப்போனது.
***
அன்று... அவள்
என்னைப் பிரிந்தவிட்டாள்
அவளது பிரிவு
என்னைக் கொன்று விடும்
என எண்ணி விட்டாளா?
அவளது உள்ளத்திற்கு
அவள் ஏவுவது எதுவாயிருப்பினும்
அனைத்தையும்
அது செயற்படுத்தும் என
ஏமாந்து விட்டாளா?
அப்படியல்ல...
அவள் நினைப்பது போலல்ல
அவள் உள்ளம்
என்னை
ஒரு நாளும் மறந்து விடாது
ஏனெனில்...
அவளது முழுமைக்குள்ளும்
முழுமையாக உறைந்திருப்பவன்
நான் மட்டுமே...!
***

அவளது பிரிவு
அவளோடு நான் கழித்த
இன்பப் பொழுதுகளை
ஞாபகம் செய்கிறது...
அவளது கண்ணீர்
என் விழிகளிலும் வழிகிறது...
அது
ஏற்கனவே
வெட்கப்பட்டு
பத்துப் பங்குகளாகிவிட்ட
என் இதயத்தை
இரண்டு ஈட்டிகளால்
குத்துவது போன்றிருக்கிறது...
***
அன்று அம்பாரிக்குள்...
நான் அவளோடு கழித்த பொழுதுகள்
இன்னும் சுவாரஷ்யமானது...
எவராலும் நினைத்துப் பார்க்க முடியாத...
அம்பாரியினுள்
பாதுகாப்பாக இருக்கும்
ஆரணங்குகளிடம் கூட...

அவர்களின் கடுங்காவலைக் கடந்து
சென்று
எவ்வித அவசரமோ பதற்றமோ இன்றி
வெகு லாவகமாக
இன்பமனுபவித்திருக்கிறேன்...
அப்படி... ஒரு நாள்...!

***

இடைவெளிகளைக் கொண்ட...
ஆங்காங்கு
முத்துக்கள் பதிக்கப்பட்ட...
பெண்கள் அணியும் இடுப்புக் கச்சை
போன்று...
வானத்தில்
அங்கொன்றும் இங்கொன்றுமாக
நட்சத்திரங்கள்
இயங்கிக் கொண்டிருந்த
அந்தப் பொழுது முடிவதற்குள்
நான் அவளிடம் சென்றேன்...
அவள் தூங்குவதற்காக
தனது உடலில் எஞ்சியிருந்த
இடுப்புக் கச்சையைத் தவிர
வேறு எவ்வித உள்ளாடையுமின்றி...
இருந்த வேளை – அது
என் உணர்ச்சி நரம்புகள்
பெருமூச்சு விட்ட நேரம்

***

நான் சுகந்திரமாக...
அவள் மீது கொண்ட மோகத்தில்
சென்றேன்
தந்திரமாக மோசம் செய்ய வந்ததாக
கூறினாள்
வார்த்தைகளை உதடுகள் தான்
உதிர்த்தன
உள்ளமல்ல...
நான்
அவளைப் பிடித்து...
மென்மையாக இழுத்து...
அவளது கூட்டத்தார்
கூடாரமடித்துத் தங்கியிருந்த
இடத்தைக் கடந்து சென்று
வளைந்து நெளிந்த
மணல் வெளிகளைக் கொண்ட
பள்ளத்தை அடைந்தேன்...
சித்திர வேலைப்பாடுகள் கொண்ட
அவளது உள்ளாடையின் குஞ்சம்
எம்காலடிச் சுவடுகளை
அழித்து விட்டது

***

அவள் கூந்தலை
நான் மெல்ல வருட
என் மார்பில்
மௌனமாக சாய்ந்தாள்
சம்மதம்
அவள் மௌனத்தில் தொனித்தது...
கேசாதி பாதம் வரை
அவளை மெய் சிலிர்க்கச்
செய்தேன்...
ஆசைக்குரிய அவளது
அழகுப் பிரதேசங்களையெல்லாம்
என் ஆண்மையால் அபகரித்தேன்...
அவளோடு மெய்மறந்திருந்த
அந்தக் கணப்பொழுது...!

***


தசை திரட்சியான
அவளது கால்கள்
எனக்கு வழி விட்டன
அப்போது நான்
அவளது வெண்ணிற மெல்லிடையில்
புல்லாங்குழல் வாசித்தேன்...
துலக்கப்பட்ட கண்ணாடி போன்று
மார்பகங்களுக்கிடையிலான
அகப்பகுதி
பளபளத்தது
அதில் நான் அழகு பார்த்தேன்

***

மஞ்சள் நிற மேனி கொண்ட அவள்
களங்கப்படாத தூய நீரையே
அருந்துகிறாள் என்பது
அவளது அதரத்தை முத்தமிட்டபோது
நான் அறிந்தது
'வஜீரா' எனுமிடத்திலுள்ள
குட்டிகளையுடைய ஒரு காட்டுமானின்
பார்வை
அவள் விழிகளில்
எனக்குத் தெரிந்தது
வெண்மானை ஒத்த
பெண்மான் அவள்

***

அவள் முதுகை அலங்கரிக்கும்
கார்க் கூந்தற் பின்னல்கள்
தேன் சிந்தும் பேரிச்சங்கனிகள்...
கனியுண்டு தேனுமுண்டோம்...
முழுமையாக நீரில் காணப்படும்
மூங்கிலைப் போன்று
பளபளப்பானதும் வழுவழுப்பானதும்
அவளது மென்கால்கள்...
'மிப்யி' என்ற
மரக்குச்சியைப் போன்றது
அவளது கைவிரல்கள்...
மருதாணி இட்டதை போல
சிவந்திருக்கும்
அதைக் கண்டவர்களின்
உயிரை வாங்கும்...
கஸ்தூரி தூவப்பட்ட



தன் படுக்கை விரிப்பிலிருந்து
துயிலெழுவாள்...
இடுப்புக் கச்சையைத் தவிர
எவ்வித மேலாடையும்
அப்போது அவள் மேனியில்
இருக்காது...!

***

உலகை முற்றம்துறந்த
ஒரு துறவி
மாலை வேளையில் ஏற்றி வைக்கும்
விளக்கு
பிரகாசம் எடுப்பது போல
இரவு நேர வானுக்கு ஒளி கொடுத்த
இருளைப் போக்குவாள்...
மேலாடை பாவாடையணிந்து
அவள் நிமிர்ந்து நின்றால்
தன்னடக்கமும் கற்புமுடைய
ஆடவன் கூட
அவள் மீது தீவிர வேட்கை கொள்வான்
பிறர் உயிரை மாய்க்கும்
எழில் கொண்டவள் அவள்

***

சிறு பிள்ளைகளின்
சிறு பிள்ளைத்தனம்
அவர்களது சிறுபிராயம்
முடிந்ததும்
நீங்கி விடும்
ஆனால்...,
என் உள்ளமோ
அவள்மீது கொண்ட காதலை விட்டும்
ஒருபோதும்
நீங்கி விடாமல்இருக்கிறது
ஏனெனில்...,
நான்
அவள் மீது கொண்ட காதல்
ஆழமானது.

அருள் தந்தை இராசேந்திரம் ஸ்ரவின்

# ஆண்-பெண்ணிடையேயான உளவியல் வேறுபாடுகள்

ஆண்பெண் உளவியல் வேறுபாடுகள் பற்றி முதலில் எழுதியவர் எலீனர் மக்கோபியும் கறோல் ஜக்குலினுமாவர் (**Eleanor Maccoby & Carol Jacklin**.1974) ஆகிய உளவியலாளர்களே. இவர்கள் ஆயிரம் ஆய்வுகளைப் படித்தபின் தமது கருத்துகளை **The Psychology of Sex Differences** என்னும் புத்தகத்தில் வெளியிட்டனர். ஆண்-பெண்களிடையே பெரும் வேறுபாடுகள் இல்லை என்ற கருத்தை முன்வைத்தனர். ஆனால் இரு பாலாரிடையேயும் முக்கிய உளவியல் ரீதியான வேறுபாடுகள் உண்டு என்ற கருத்தும் பல உளவியலாளரின் ஆய்வின் வழி வெளிப்பட்டுள்ளது.

ஆண் பெண் இருபாலாரதும் உளவியல் வேறுபாடுகளை அறிந்திருப்பது பரஸ்பர புரிந்துணர்வுக்குப் பேருதவியாக அமையும். பெரும்பாலானவர்களில் காணப்படுவதை அவதானித்தே இவ்வேறுபாடுகள் தரப்படுகின்றன. இத்தகைய வேறுபாடுகள் பலவாக இருப்பினும் மிக முக்கியமானவை மாத்திரம் கீழே தரப்படுகின்றன:

**1. கவர்ச்சி:**

அனைத்துப் பண்பாடுகளிலும் நோக்கின், பெண்கள் ஆண்களிடமுள்ள செல்வம், சமூகத்திலுள்ள செல்வாக்கு, தமக்குக் கிடைக்கக்கூடிய பாதுகாப்பு, அக்கறை என்பனவற்றால் கவரப்படுகின்றனர். ஆனால் ஆண்களோ பெரும்பாலும் உடல் அழகாலேயே முதலில் கவரப்படுகின்றனர். எனினும் இருசாராரும் இரக்கம், அன்பு, பரஸ்பர கவர்ச்சி என்பனவற்றை விரும்புகின்றனர்.

**2. நட்பு:**

பெண்-பெண் நட்பானது ஆண்-ஆண் நட்புறவைவிட ஆழமானது. பெண்கள் தாம் நட்புக் கொள்வோருடன் அதிகம் பேசுதல், அன்போடு நெருக்கமாக இருத்தல் என்பனவற்றை விரும்புகின்றனர். ஆனால் ஆண்களோ தாம் ஆர்வம் கொண்டுள்ள விடயங்களைப் பற்றிப் பேசுதல், இருவரும் சேர்ந்து ஒரு விடயத்தை செய்தல் என்பனவற்றையே விரும்புகின்றனர். மேலும், பெண்கள் தாம் பெண்களோடு கொண்டுள்ள உறவில் தமக்கு ஆதரவு கிடைப்பதாக உணர்கின்ற அதேவேளை ஆண்களோ தம்மிடையே உள்ள உறவில் தமக்கு ஆதரவு கிடைப்பதில்லை என்றே உணர்கின்றனர்.

**3. அக்கறைப்படுத்தும் விடயங்கள்:**

பெண்களுக்கு உறவே மிகமுக்கியமானது. அதாவது இவர்கள் தமது பெற்றோர், சகோதரர், உறவினர், போன்றோரின் உறவுபற்றியே அதிக அக்கறை காட்டுவர். அந்த வகையில் தமது குடும்பம், வீடு என்பனவே மிகமுக்கியமான விடயமாக விளங்குகின்றன. இவற்றைத் தமது ஆளுமையின் பிரிக்கமுடியா அம்சமாக நோக்குவர். வீட்டில் நிலவும் உறவுநிலை, வீடு எங்கே அமைந்திருக்கின்றது என்பன இவர்களுக்கு முக்கியமான ஒரு விடயம். பெண்கள் தம் உத்தியோகத்தில் எத்தனை மணித்தியாலங்களைக் கழித்தாலும் தன் வீட்டை ஒழுங்காகவும் அழகாகவும் வைத்திருப்பது அதைவிட முக்கியமெனக் கருதுவர். பெண்கள் பிறந்தநாள், திருமணநாள்கள் என்பனவற்றை மிகமுக்கியமாகக் கருதுவார். அந்நாட்களைக் கணவன் நினைத்து அன்பளிப்பு வழங்கவேண்டும், சந்தோசமாய் கொண்டாட வேண்டும் என்று எதிர்பார்ப்பர். கணவனோ இதெல்லாம் பெரிய விடயம் அல்ல எனக்கருதி அவற்றைக் கவனத்தில் எடுப்பது குறைவு. இது மனைவி மனத்தைப் புண்படுத்துகின்றது.

ஆனால் ஆண்களுக்கோ தொழிலே ஆளுமையின் முக்கிய அம்சமாக விளங்குகின்றது. அதனாலேயே வேலையின்றி இருப்பது ஆண்களுக்கு மிகக் கடினமான ஒரு விடயம். கணவன் ஏன் தன் வேலைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றார் என்பதைப் பெண்களால் புரிந்துகொள்ள முடிவதில்லை. அத்தோடு ஆண்கள் உறவைவிட வேலைக்கு முக்கியம் கொடுப்பது பெண்களுக்குக் கலக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஏனெனில் பெண் தன் அன்றைய வீட்டு அனுபவம்பற்றி ஆணுடன் கதைக்க விரும்பிக்கொண்டிருக்க அவர் மனமோ இன்னமும் தன் வேலைப் பிரச்சினைகள் பற்றியே வட்டமிட்டுக் கொண்டிருக்கும். இதனால் மனைவி கூறும் கதைகளை ஆர்வத்தோடு கேட்பதில்லை. இது மனைவிக்கு வருத்தத்தை ஏற்படுத்துகின்றது. எனவே முதலில் கணவனின் வேலைத்தள அனுபவத்தைக் கேட்டு அறிந்தபின் தன் வீட்டு அல்லது உறவுவிடயங்கள்பற்றி அவருடன் கதைக்க முயல்வதே நல்லது. அவ்வாறே ஆண்களும், பெண்கள் தம் வீட்டு அனுபவங்களைக் கூறிமுடிக்க வாய்ப்பளிப்பது நல்லது.

**4. பேசும் விடயங்கள்:**

பெண்கள் பெரும்பாலும் தம் சொந்த வாழ்வுப் பிரச்சினைகள், உணர்ச்சிகள் பற்றிப் பேசுவதையே விரும்புகின்றனர். ஆண்கள் பெரும்பாலும் தமது தொழில், நகரம், நாடு, விளையாட்டு, பொழுதுபோக்குகள் பற்றியே பேச விரும்புகின்றனர். ஆண்களுக்கான உறவு நெருக்கத் தேவை பெண்களை விடக் குறைவாக இருப்பதே இதற்குக் காரணம்.

**5. விடயச்சுருக்கம்:**

பிறர் முக்கியமானதைத் தேர்ந்தெடுத்து அதையும் சுருக்கமாகக் கூறவேண்டும் என்று ஆண்கள் விரும்பு கின்றனர். ஆனால் பெண்களோ தாம் சொல்ல விரும்பும் விடயங்களை அனைத்து விபரங்களோடும் சேர்த்துச் சொல்ல விரும்புகின்றனர். இது ஆணுக்கு விரக்தியை ஏற்படுத்துகின்றது. எனவே ஆண்கள் பொறுமையாகக் கதை கேட்கப் பழகிக்கொள்வதே நல்லது. பெண்களும் தாம் கூற விரும்பும் விடயத்தை நேரம் காலம் அறிந்து ஆணின் மனநிலையைக் கருத்தில் எடுத்துச் சுருக்கமாகக் கூறமுயல்வது நல்லது.

**6. கண்ணோட்ட வேறுபாடுகள்:**

கணவன் தன் விடயங்களைப் பகுத்தறிவு ரீதியாக நோக்குவார் மனைவியோ உணர்ச்சி அல்லது உறவுக் கண்ணோட்டத்திலேயே நோக்குவர். இது உறவில் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. கணவன் எங்காவது சென்று வரத் தாமதிக்கும்போது அவருக்கு ஏதாவது நடந்திட்டுதோ என ஏங்கிக் கரிசனையோடு கவலைப்படுவாள். கணவன் இதை உணராமல். "போன எனக்கு வரத் தெரியும்தானே. நீங்கள் ஏன் வீணாய் கவலைப்பட்டனியள்?" என்பார். அவளோ தான் காட்டும் அக்கறையை இவரால் விளங்கிக் கொள்ள முடியவில்லையே என்று புண்பட்டுக்கொள்வாள்.

**7. சுயவெளிப்படுத்தல்:**

ஆண்களைவிடப் பெண்கள் தம் உள்ளக் கிடைக் கைகள் பற்றி ஏனைய பெண்களிடம் அதிகம் வெளிப் படுத்துகின்றனர். ஆனால் ஆண்கள் பிற ஆண்களுக்கோ அல்லது பெண்களுக்கோ தம்மை வெளிப்படுத்துவது குறைவு.

**8. உணர்ச்சி வெளிப்படுத்தல்:**

பெண்கள் தம் உணர்ச்சிகளை எளிதில் வெளிப் படுத்துவர். குறிப்பாக பயம், சோகம் என்பனவற்றைத் தயக்கமின்றித் தம் குடும்பத்தவர், உறவினருக்கு வெளிப் படுத்துவர். இவற்றை ஆண்கள் இலகுவில் வெளிப் படுத்துவதில்லை. ஆனால் சமூகச் சூழலில் இன்னொரு ஆண் தன் திறமைக்குச் சவால் விடும்போது ஆண்கள் தம் கோபத்தை வெளிப்படுத்தத் தயங்குவதில்லை. அத்துடன், ஆண்களின் கோபம் பெரும்பாலும் வன் செயலில் முடிவதுண்டு. ஆண்களைவிடப் பெண்கள் தம் இத்தகைய உணர்வுகளை வார்த்தையில் வெளிப் படுத்துகின்றனர்.

**9. உடல்வழிச் செய்திகளைப் புரிதல்:**

பிறர் உடல்வழியாக வெளிப்படுத்தும் செய்திகளை ஆண்களைவிடப் பெண்கள் இலகுவில் புரிந்துவிடு கின்றனர். குறிப்பாக முகத்தின் வழியாக வெளிப்படும் செய்திகளைத் திறமையாகப் புரிந்துகொள்கின்றனர். எனினும் குரல் வழி வரும் செய்தியைப் புரிந்து கொள்வதில் குறைந்தளவு ஆற்றலே கொண்டுள்ளனர். ஆனால் ஆண்களுக்கு இவற்றில் தேர்ச்சி குறைவு. இது வளர்ந்தோரில்மட்டுமல்ல சிறுவர், கட்டிளம்பரு வத்தினரிலும் காணப்படும் உண்மையாகும். அத்தோடு சமூக உறவாடல் சூழலில் ஆண்களைவிட பெண்கள் புன்னகைப்பது அதிகம். (**Hall & Amy Halberstadt 1986**)

**10. தொடுகை:**

ஆண்கள் பெண்களைத் தொடுவது அதிகம். பெண்கள் இதில் ஈடுபடுவது மிகக்குறைவு. ஆண்கள் பெண்களின் தோள்மீது கைபோட முயல்வதுண்டு. ஆனால் பெண்கள் ஆண்களின் கரங்களைக் கோர்த் திருப்பதில் மகிழ்ச்சி காணுகின்றனர்.

**11. பாலியல் கண்ணோட்டம்:**

பெண்கள் அன்பினதும் உணர்வுபூர்வமான அர்ப்பணத்தினதும் ஒரு அம்சமாகவே பாலியல் அனுபவத்தைப் பார்க்கின்றனர். ஆனால் ஆண்கள் காமம், உடலின்பம் என்பனவற்றையே விரும்புகின் றனர் (**Carrol, Volk, Hyde, 1985**).

ஆண்கள் அன்புக்கு வெளியேயும் பாலியல் அனுபவங்களை விரும்புகின்ற வர்களாக விளங்கு கின்றனர். அத்தோடு பெண்களை விட ஆண்களே திருமணத்தின் முன்னான பாலியல் நடத்தையில் ஈடுபடுகின்றனர்.

**12. விசுவாசமின்மை:**

தன் ஆண் பிறருடன் உணர்ச்சி ரீதியாக விசுவாச மின்மையாக இருப்பதைப் பெண்கள் விரும்புவ தில்லை. அதாவது பிற பெண்களுடன் உணர்ச்சி ரீதியான உறவில் ஈடுபடுவதை விரும்புவதில்லை. அது பாலியல் உறவை உட்படுத்தியதோ இல்லையோ உணர்ச்சி ரீதியாக ஈடுபடுவதை விரும்பமாட்டார்கள். ஆனால் ஆண்களோ தம் பெண் வேறு ஆளுடன் பாலி யல் ரீதியான உறவில் ஈடுபடுவதையும் உணர்ச்சிரீதி யாகப் பழகுவதையும் கடுமையாக எதிர்க்கின்றனர்.

**13. பொறாமை:**

பெண்கள் இன்னொருவருடன் உறவாடுவதால் கணவன் பொறாமைப்படும்போது அவருடனான உறவைச் சீர்ப்படுத்தவே முயற்சிப்பர்.

இக்கட்டத்தில் ஆணோ மனைவி இன்னொரு வருடன் உறவாடுவதால் தனக்கு ஏற்பட்ட சுயமதிப்பீட்டு இழப்பைக் கவனத்தில் எடுத்து அதனை உயர்த்துவதில் கவனம் செலுத்துவர்.

**14. முதிர்ச்சி மாற்றங்கள்:**

பெண்கள் முதிர்ச்சி அடைய அடைய பிறரைப் பராமரித்தல், ஆதரவளித்தல், புரிந்துணர்வுடன் நடத்தல் என்பவற்றில் வளர்ச்சியடைகின்றனர். ஆண்களோ சுதந்திரத்தை விரும்புபவர்களாகவும், சொந்தக் காலில் நிற்பவர்களாகவும், உணர்ச்சியை வெளிப்படுத்துவதைக் குறைப்பவர்களாகவும் காணப்படுகின்றனர் (Gilligan, 1990 in John W.Santrock.)

**15. குழுநடத்தை:**

சிறு குழுவாக இயங்கும்போது பெண்கள் கலந்துரையாடலின்போது நட்போடும் இசைந்து போகும் தன்மையுடன் நடந்துகொள்கின்றனர். ஆனால் ஆண்கள் செய்து முடிக்கவேண்டிய குழுவேலையிலேயே அதிக கவனம் செலுத்துவர் (**Anderson & Blanchard, 1982**). பெண்கள் குழுக்களைவிட ஆண்கள் குழுக்கள் தமக்குக் கொடுக்கும் வேலையைச் சிறப்பாகச் செய்கின்றனர் எனினும் உறவாடலை உள்ளடக்கிய வேலை விடயங்களில் பெண்கள் மேலோங்கி நிற்கின்றனர் (**Wood, 1987**).

தலைமைப் பதவியில் ஆண்களைவிடப் பெண்கள் ஜனநாயகமும் பிறரை உள்ளடக்கிச் செயற்படுதலையும் கொண்டு செயற்படுகின்றனர் (**Eagly & Johnson, 1987**). ஆண்கள் தலைமைப் பதவியில் தமக்கு அதிக நன்மை கிடைக்கும் விதமாகவே நடந்துகொள்கின்றனர் (**Carli, 1982**). அதாவது ஆண்கள் தாம் செய்ய வேண்டிய வேலையைச் செய்து முடிப்பதிலும் தமக்கு வெகுமதி பெறுவதிலும் கருத்தாயிருக்கின்றனர். ஆனால் பெண்களே நல்ல உறவுச் சூழல் நிலவ வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு செயற்படுகின்றனர்.

**16. பிறரின் செல்வாக்குக்கு உட்படுதல்** (Influenceability):

Alice Eagly & Linda Carli (1981) ஆகியோர் 21.000 பேர்களில் செய்யப்பட்ட 146 ஆய்வுகளைப் (1949-1977) படித்தபின் கண்டறிந்த ஒரு உண்மை ஆண்களை விடப் பெண்கள் இலகுவில் பிறரின் செல்வாக்குக்கு உட்பட்டுவிடுகின்றனர். இது தனியாளோடான உறவில் நிகழ்வதைவிட குழு அழுத்தத்தின் போது இவ்வாறு நிகழ்கின்றது.

**17. உளத்திறன் வேறுபாடுகள்:**

பெண்களைவிட ஆண்கள், கணிதம், பார்வைப் புலன்– இடம்பற்றிய ஆற்றல் (Visuo-spatial ability) (கட்டிடக்கலைஞர்களுக்கான ஆற்றல்) என்பனவற்றில் மேலோங்கி நிற்கின்றனர். ஆனால் பெண்கள் சொல்லாற்றலின் (Verbal abilities) மேலோங்கி நிற்கின்றனர்.

**18. ஆதிக்க (Aggression) வேறுபாடு:**

ஆண்கள் பெண்களைவிட அதிக சுறுசுறுப்பாக இருப்பதோடு ஆதிக்கப் போக்கும் கொண்டுள்ளனர். இவ்வாதிக்கப் போக்கை இரண்டு வயதிலிருந்துகூட அவதானிக்கக்கூடியதாக உள்ளது. பெண்களில் இது அதிகம் குறைவாகவே காணப்படுகின்றது.

**19. உதவும் நடத்தை:**

ஆண்கள் அந்நியர்களுக்கு உதவ முன்வருகின்றனர். பெண்கள் இதனைப் பெரும்பாலும் தவிர்ப்பர். பெண்கள் பிள்ளைகள், முதியோரைப் பராமரிக்கும் விடயத்தில் உதவ முன்வருவர்.

ஆண்-பெண் வேறுபாடு என்பது என்ன விடயத்தில் எந்தச் சூழலில், எவ்வளவிற்கு என்பன போன்ற பல விடயங்களில் தங்கியுள்ளது. அன்பு, பொறாமை, அச்சம் என்பனவற்றில் ஆண் பெண்ணிடையே பெருமளவு வேறுபாடு காணமுடிவதில்லை. அவ்வாறே பிறர் அவமானப்படுத்தும்போது கோபப்படுதல், முக்கிய உறவு முடிவுக்கு வரும்போது துயரப்படல், சமூகச் சூழலில் தவறுவிடும்போது சங்கடப்படல் என்பன இரு பாலாருக்கும் உரியனவே.


## ஜீவநதி சந்தா விபரம்

தனிபிரதி - 60/= ஆண்டுச்சந்தா - 1000/= வெளிநாடு - $ 35U.S

மணியோடரை அல்வாய் தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி

**K .Bharaneetharan, Kalaiaham , Alvai North west, Alvai.**

வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்

K.Bharaneetharan
Commercial Bank -
Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY

# பல்துறைப் புலமையாளர்
# பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

வடமராட்சியின் கரவெட்டி ஈன்றெடுத்த
திடமான சிந்தனையுள்ள பெருந்தகை பேராசிரியர் கா.சிவத்தம்பி
தமிழ்த்தாய் தவமிருந்து பெற்றெடுத்த தவப்புதல்வனவர்
அமிழ்தினிய தமிழ் இலக்கிம் இலக்கணம் கற்று
தமிழ் கூறும் நல்லுலகில் தலை சிறந்த தலைவரானார்...
உலகப் புகழ்பெற்ற மார்க்சிய அறிஞராம்
ஜோர்ஜ் (ெ)தம்சனின் நன்மாணாக்கரவர்
உலகறிந்த முற்போக்கு எழுத்தாளனாய்
தடம்பதித்தார் தம் படைப்புக்களால்
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நன்கறிந்த
ஈழநாட்டுத் தமிழறிஞரவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி...
மரபு இலக்கியம் முதல் தமிழின் நவீன இலக்கியங்களாம்
கவிதை சிறுகதை நாவல் விமர்சனம் என
ஆராய்ச்சி மேற் கொண்டு, அருமை பெருமைகளை
நூல்களாயும்(70) கட்டுரை வடிவிலும்(200)
ஆய்வாக வெளிப்படுத்திய பேரறிவாளர் பேராசிரியர் கா.சிவத்தம்பி...
பேராதனைப் பல்கலைக்கழகத்தின்
சொத்தான பேராசிரியர் சு.வித்தியானந்தனின்
ஆராய்ச்சி மிகு மாணாக்கனான பேராசிரியர் கா.சிவத்தம்பியவர்
முத்தமிழில் ஒன்றான நாடகத்தமிழினையே
முத்தாகக் கருதி கிரேக்க நாடகத்துடன் இலக்கிய
ஒப்பீடு செய்து தந்தார் அரியதொரு
பண்டைத் தமிழ் சமூகத்தில் நாடகம் எனும் பொக்கிசமாய்...
இலக்கியத்தில் இணையில்லா விமர்சகராய்
ஈழத்தின் தமிழறிஞர் தலைமகனாய்
எழுதுவதில் முற்போக்கு எழுத்தாளராய்
பழகுவதில் பண்பட்ட பேரறிஞராய்
பேசுவதில் நல்லை நகர் நாவலராய்
பல்துறைப் புலமையினால் புகழுடன் திகழ்ந்தார் தரணியிலே...
உலகறிந்த செய்தியல்லோ அவரின் தலைமைமிகு
கோவைதனில் இடம்பெற்ற உலகத்தமிழ் செம்மொழி மாநாடு
உடல்நிலை தளர்ந்த போதிலுங் கூட
கடல் கடந்து சென்றார் ஆறாத் தமிழ் காதலுடன்...
பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழை ஒரு பாடமாய்க்கற்று
இளமாணி, முதுமாணிப் பட்டங்களைப் பெற்றவரோ இங்கிலாந்தில்
முனைவர் பட்டம் பெற்று,
வாழ்நாள் பேராசிரியராய் வாழ்ந்தவர்தான், பாராளுமன்ற
சமகால மொழிபெயர்ப்பாளனாய் இவ்வுலக
வாழ்நாளின் இறுதி மூச்சுவரை அரும்பணியாற்றினார்
தமிழன்னைக்கு...
நடமாடும் நூலகமாய் நயமிக்க நூல்கள் பல தந்து
நம்நாட்டவர்க்கும் வெளிநாட்டவர்க்கும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
எடுத்துரைத்தீர் தமிழின் அருமை பெருமைகளை
ஆழ்ந்த புலமையால்
மண்ணுலகைவிட்டு விண்ணுலகம் சென்றாலும் - என்றும்
மக்களுடன் வாழ்ந்திருப்பீர் ஐயா உம் அரிய படைப்புக்களால்.

**- யோ.கலைவாணி**

# நானும் கவிஞனானேன்

பூவாய்த்தான் பூமியிலே பூப்பதற்கு ஆசை கொண்டேன்
புதிரான மாந்தரிலே பிறந்து விட்டேன் என்ன செய்ய
தாவாமல் தாவுகின்ற என் மனதின் ஆசையெல்லாம்
தண்ணீரில் எழுதி வைத்தேன் யாரிடத்தில் எடுத்துச் சொல்ல?

முகிலாய்த்தான் வானமதில் மிதந்து வரக் கனவு கண்டேன்
முகம் கூடத் தொலைத்தேனே முனகித்தான் என்ன பண்ண
திகிலான வாழ்க்கையதால் கலைந்தோடும் கனவுகளும்
திசைகொன்றாய்ப் போனதுவே சிந்தித்து என்ன பண்ண?

நதியாய்த்தான் நந்தவனம் நுழைந்து வர ஆசை கொண்டேன்
நீரில்லாப் பாலையெனும் நிலை கொண்டேன் என்ன செய்ய
விதியென்னும் காட்டாற்றில் வீழ்ந்துவிட்ட ஒரு துரும்பாய்
விடை காணாப் பயணத்தைத் தொடங்கிவிட்டேன் என்ன சொல்ல?

மரமாய்த்தான் நிலம் பிளந்து கிளை பரப்புமெண்ணம் வைத்தேன்
முளையாத விதையானேன் முகம் கோணி நடப்பதென்ன
வரமாய்த்தான் தாய் மடியில் வரவென்று ஆசை கொண்டேன்
வந்ததுமே ஆசிரமம் எனையழைத்தால் என்ன சொல்ல?

நிலவாய்த்தான் வானமதில் நீந்தவொரு ஆசை வைத்தேன்
நகராத மேகமென சோகமென்னை மறைப்பதென்ன
புலருகின்ற பொழுதுகளில் பூபாளமாக எண்ண
புலராமல் இரவின்னும் மலைப்பாம்பாய் நீள்வதென்ன?


குயிலாய்த்தான் கானங்கள் பாடிவர ஆசை நெஞ்சில்
கூண்டுக்குள் சிறைப்பட்டேன் கூவ முடியுமா என்ன
மயிலாய்த்தான் நடனங்கள் ஆடி வர ஆசை என்னில்
முடமாகிப் போனேனே மூலையிலே என்ன செய்ய?

மழையாய்த்தான் பூமி வந்து தழுவிடவே ஆசை வைத்தேன்
மனிதனாய் சோகங்களை சுமக்கவென்று பிறந்து விட்டேன்
அலையாக மனதுக்குள் எழுகின்ற எண்ணமெல்லாம்
அழகான கவியெனவே எழுதினேன், கவிஞனானேன்.

**- மன்னார் எம்.ஷிபான்**

கே.எஸ்.சிவகுமாரன்


# டொக்கியூமென்ட்றி' திரையாக்கம்




நம்மில் சிலர் குறும்படங்களுக்கும் (Short Film) கதைசாரா விவரணப் படங்களுக்கும் (Documentary Films) இடையே உள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்வதில் மயக்கம் கொண்டிருக்கின்றனர். இது பற்றி சூஸன் ஹேவர்ட் என்ற திறனாய்வாளர் "டொக்கியூ மென்ட்றி" திரையாக்கம் பற்றிக் கூறியிருப் பதை உங்கள் கவனத்திற் கொண்டு வரலாம் என நினைக்கிறேன்.

"பிரயாணத்தின் பதிவுகள்" (Travel Ogues) என்ற படப்பிடிப்புகளை "டொக்கியூ மென்டறிஸ்" என்று முதலில் அழைத்தவர்கள் லுமியே சகோதரர்களாவர். இது 1890களில் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட பிரயோகம். அதன் பின்னர் 30 ஆண்டுகளுக்குப் பின் (1910 இல்) பிரிட்டிஷ் திரைப்பட நெறியாளரும் திறனாய் வாளருமான ஜோன் க்ரியர்சன் இந்தப் பிரயோகத்தை 1926 இல் வெளியான "மோ ஆனா" (ரொபர்ட் ப்ள ஹார்றி நெறிப்படுத்தியது) படத்திற்கு பெயர் சூட்டினர். எனவே 1930களிலிருந்து "டொக்கியுமென்ட்றி" என்ற பிரயோகம் க்ரியர்சன் ஆதரவுடன் பிரபல்யம் அடைந்து வந்தது. இதன்படி "டொக்கியூமென்ட்றி" படத்தில் தகவல்களைப் பெறக் கூடியதாக இருக்க வேண்டும். கல்வி சார்ந்த விடயங்களை அறிந்து கொள்ளக் கூடிய தாக இருத்தல் வேண்டும். பிரசாரத்திற்கும் உறுதுணை யாக இத்தகைய படங்கள் அமையக்கூடும். அதேவேளை யில், யதார்த்தப் படப்பிடிப்பாக மாத்திரம் இருக்காமல், சிருஷ்டித்தன்மை கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

அரை நூற்றாண்டுக்கு முன்னர் இலங்கை




அரசாங்கத் திரைப்படப்பிரிவு இது போன்ற தரமான கதைசாரா விபரணப்படங்களைத் தயாரித்து வந்தது. இப்படங்கள் தியேட்டர்களில் முழுமைச் சித்திமைக் காட்டப்படு முன்னர், காட்டப்பட்டன. லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், திஸ்ஸ அபே சேகர, திஸ்ஸ லியன ஆரிய, டைற்றஸ் தோட்டபத்த போன்ற சிங்களத் திரைப்பட நெறியாளர்கள் முதலில் "டொக்கியூமென்ட்" படங் களையே தயாரித்து வந்தனர்.

"கமம்" என்ற பெயரிலே சில்லையூர் செல்வ ராசன், கமலினா ஆகியோரை நடிகர்களாகப் பயன் படுத்தி திஸ்ஸ அபேசேகரா ஒரு படத்தை நெறிப்படுத்தி யிருந்தார். இந்த டொக்கியூமென்றியை நான் 1960 களில் பார்த்தேன். இது இவ்வாறிருக்க 1940களில் மற்றொரு பிரிட்டிஷ் திரைப்பட நெறியாளரான லின்ட்ஸே என்டர்ஸன் ஒரு சவாலாகப் புதிய முயற்சி களை மேற்கொண்டார். அவருடைய கஜத்தின்படி டொக்கியூமென்ட்றி படங்கள் சமூகப்பிரசாரத்துக்கு மாத்திரம் பயன்படாமல், அழகியல் சார்ந்ததாகவும் இருத்தல் வேண்டும் என வாதிட்டார். இவர் கூற்றினால் கவரப்பட்ட பல தயாரிப்பாளர்கள் அழகியல் ரீதியாக வும் டொக்கியூமென்ட்றி படங்களை உருவாக்கத் தொடங்கினர்.

டபிள்யூ.எச்.ஓடன் என்ற ஆங்கில இலக்கியக் கவிஞர் விவரணை எழுத "Night Mail" என்ற அற்புதமான டொக்கியூமென்ட்றி படத்தை க்ரிகர்சன் நெறிப்படுத்தியிருந்தார். இதன் பின்னர் ஹம்ப்றி ஜெனிங்ஸ் டொக்கியுமென்றிப் கடங்களுக்கு மேலும் உயிரூட்டினார். இவர் கவிதை, ஓவியம், மார்க்சியம், சர்ரியலிஸம் போன்றவற்றில் நாட்டம் காட்டி இத்தகைய படங்களைத் தயாரித்தார். இவருடைய படங்கள் கைத்தொழில் சம்பந்தமானவையாக இருந்தமையைக் குறிப்பிடலாம்.எஸ்கிமோ மக்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் Naook Of The North என்ற அழகியல் ரீதியான திரைப்படமாக ப்ளஹெர்ட்டி 1922 இல் தந்தார்.


சுருக்கமாகச் சொன்னால் டொக்கியு மென்ட்றி படங்கள் இவ்வாறு தான் மேற்கில் உருவாகின.

அர்ச்சுனன்

# நூல் அறிமுகக் குறிப்புகள்

### 1) யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் "முன்னோர் சொன்ன கதைகள்"

ஆன்மீகத் தளத்தில் நின்று கொண்டு சிறந்த இலக்கியப் படைப்புகளை வெளிக்கொணர்ந்து கொண்டு இருக்கும் யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் "முன்னோர் சொன்ன கதைகள்" தொகுதி ஜீவநதியின் 9ஆவது வெளியீடாக வெளிவந்துள்ளது. நூலிற்கு பொருத்த மான அட்டைப் படம் அமைந்திருப்பதோடு நூலின் உள்ளே 24 மூத்தோர் சொன்ன கதைகள் காணப்படு கின்றன. நாடறிந்த எழுத்தாளர் செங்கை ஆழியான் அணிந்துரையை வழங்கியுள்ளார். இதில் அடங்கியுள்ள கதைகள் அனைத்தும் சந்நிதியான் ஆச்சிரம ஞானச் சுடர் சஞ்சிகைகளில் தொடராக வெளிவந்த காலத்திற்கு ஏற்ற படைப்புகளாகும். இதில் சொல்லப்படுகிற கதைகள் அனைத்தும் ஏற்கெனவே தெரிந்த கதைகளாக இல்லாமல் புதிய கதைகளாக காணப்படுவது சிறப்பு. கதைகளை கூற முன்னர் விளக்கவுரை கொடுப்பதும், கதைகளை முடிக்கும்போது நன்னெறிகளை சுட்டிக் காட்டுவதும் இந்நூலின் தனித்துவத்தை காட்டுகின்றது.



நூல் : முன்னோர் சொன்ன கதைகள்
வெளியீடு: ஜீவநதி
ஆசிரியர் : யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
விலை : 140/=

மனிதன் ஒருவன் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நன்னெறிகள், செய்ய வேண்டிய தொண்டுகள், ஆற்ற வேண்டிய நற்செயல்கள், வழிபாட்டின் முக்கியத் துவம், சத்தியத்திற்கு கட்டுப்படல், இறை நம்பிக்கையின் உண்மைத் தன்மை, இலக்கிய வழிக் கதைகள், அறநெறிகள், வாழ்க்கைத் தத்துவம், விருந்தோம்பல் பண்பு, அன்பின் உயர்வு, கோயில் வழிபாடு, புராணக் கதைகளின் மகிமை, விரதங்களின் மகிமை, தான தர்மத்தின் நற்பலன்கள், நற்செயலின் பலன்கள், ஒரு பக்தனின் உண்மை நிலை, மதப்பற்று, பக்தி, போன்ற விடயங்களை தன் கதைகளின் ஊடாக வெளிப்படுத்தி நிற்கின்றார்.

கதைகள் அனைத்தும் பெரியோர் முதல், சிறி யோர் வரை அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் வகை யில் படைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கதைக்குள்ளும் பல நற்செய்திகள் சொல்லப்படுவதோடு வாழ்க்கைத் தத்துவம் ஒன்று சொல்லப்படுவது சிறப்பு. அத்தோடு கதைகளுக்கு வைத்த தலைப்புகள் .மிகவும் பொருத்தமானதாகவும், சிந்திக்க வைப்பதாகவும் அமைந்துள்ளன. இக்கதைகளில் வரும் பாத்திரங்கள் நாம் ஏற்கெனவே அறிந்த பாத்திரங்களாக இருப்பினும் இதில் அப்பாத்திரங்கள் பற்றிச் சொல்லப்படும் கதையானது புதிதாக உள்ளது.

அணிந்துரையில் செங்கை ஆழியான் "யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் "முன்னோர் சொன்ன கதைகள்" என்ற இத்தொகுதியைப் படிக்கும் போது திருப்தியும் சந்தோஷமும் ஏற்படுகின்றன. நமது இலக்கியங்களிலும் வாய் மொழி மூலமும் வழங்கி வருகின்ற முன்னோர் சொன்ன கதைகள் இக்கால சம்பவங்களோடு இணைத்து நம்மைச் சிந்திக்கவும் செயற்படவும் வைக்கின்ற யோகேஸ்வரியின் இத் தொகுதி நமக்கு ஓர் அற்புத வரவாகும்" என கூறுவது போல இந்நூல் இலக்கிய உலகிற்கு மிகவும் பயன் பாடானதும் தனித்துவம் மிக்கதுமான நூலாகும் என்பதில் ஐயம் இல்லை. இந்நூலில் உள்ள கருத்துக்கள் மனிதர்களை வழிப்படுத்தும். பாடசாலைகளில் சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் கட்டாயம் இந்நூலை படித்திருக்க வேண்டும்.

### 2] அநுராதபுர மாவட்ட தமிழ்க் கவிதைகள் தொகுதி—ஒன்று "வேலிகளைத் தாண்டும் வேர்கள்"

அநுராதபுரத்தை தளமாக கொண்டு எல். வஸிம்அக்ரத்தை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "படிகள்" சஞ்சிகையின் முதற் பதிப்பு முயற்சியாக அநுராதபுர மாவட்ட தமிழ்க் கவிஞர்களின் கவிதை களை உள்ளடக்கிய "வேலிகளைத் தாண்டும் வேர்கள்" என்னும் கவிதைத் தொகுதி வெளி வந்துள்ளது. இந்நூலினை படிகள் ஆசிரியர் எல்.வஸிம் அக்ரமும், கவிஞர் நாச்சியாதீவு பர்வீனும் தொகுத் துள்ளனர்.

இத்தொகுப்பில் அன்பு ஜவஹர்ஷாவின் 7 கவிதைகளும், பேனா மனோகரனின் 2 கவிதைகளும், கெக்கிராவ ஸஹானாவின் 5 கவிதைகளும், நாச்சியா தீவு பர்வீனின் 5 கவிதைகளும் கெகிறாவ ஸுலைஹா வின் 4 கவிதைகளும், எம்.சீ.ரஸ்மினின் 4 கவிதைகளும், ரஹ்மத்துல்லாஹ்வின் 4 கவிதைகளும், எல்.வஸிம் அக்ரத்தின் 5 கவிதைகளும், சமானின் 4 கவிதைகளுமாக மொத்தமாக 40 கவிதைகள் உள்ள டக்கிய தொகுதியாக காணப்படுகின்றது. கவிதைகளை

எழுதியவர்கள் பற்றிய பல குறிப்புக்கள் கவிதைகளிற்கு முன்னர் தரப்பட்டுள்ளன. இவை கவிஞர்கள் பற்றிய தகவல்களை அறிய உதவுகின்றன. இதில் காணப்படும் கவிதைகள் அனைத்தும் வெவ்வேறு காலகட்டத்திற்கு உரியவை.



நூல் : வேலிகளைத் தாண்டும் வேர்கள்
வெளியீடு : படிகள்
ஆசிரியர் : நாச்சியாதீவு பர்வீன், எல்.வஸீம் அக்ரம்
விலை : 150/=

நாச்சியாதீவு பர்வீனின் "வேலிகளைத் தாண்டும் வேர்கள்" என்னும் கவிதையின் தலைப்பே நூலிற்கு தலைப்பாக வைக்கப்பட்டு உள்ளது. இக்கவிதையில் இருந்து சில வரிகள் :-

"தொட்டுப் பார்க்கும் தூரத்தில்
எல்லாமிருக்கும்
எட்டிப் பார்க்க மட்டுமே
எங்களுக்கு உரிமையுண்டு.
பிரம்பெடுத்து
நேர்த்தியாக துடிக்கும்
சாஸ்திரங்கள்
எங்கள் கால்களைக்
கட்டிப் போட்டு விடுவதில்
உறுதியாக இருக்கின்றன
சிறகொடித்து எம்மை
சிறைப்படுத்த
புதிய நீதிகளும்
புதிய நியதிகளும்
அன்றாடப் பிறப்பெடுத்தல்..."

இன்றைய காலகட்டத்தில் பிரதேச ரீதியாக நூல்களைத் தொகுக்கும் பாங்கு அதிகரித்து வருகின்றது. அவ்வாறான ஒரு முயற்சியாகவே இவ் நூலும் வெளி வந்துள்ளது. ஈழத்து இலக்கியத்தில் முஸ்லீம் சகோதரர் கள் குறிப்பாக, அநுராதபுர மாவட்ட முஸ்லீம் படைப் பாளிகள் ஆற்றிய பங்களிப்புகளை இத் தொகுப்பினை வாசிப்பதின் ஊடாக அறிந்து கொள்ள முடிகின்றது.

இலக்கிய உலகிற்கு வளம் சேர்த்த அன்பு ஜவ ஹர்சாவின் கவிதைகள் இத்தொகுப்பிற்கு பலத்தைக் கொடுக்கின்றன. அத்தோடு மூத்த படைப்பாளிகளும், சிறந்த முஸ்லிம் பெண் படைப்பாளிகளான கெகிறாவ ஸஹானா, ஸுலைஹா சகோதரிகளின் கவிதைகளும் இத்தொகுதியைக் கனதியுடையதாக ஆக்கியுள்ளதோடு. இளங் கவிஞர்களின் கவிதைகளும் சேர்ந்து இத்தொகுதி கனதியான ஒரு தொகுதியாக வெளிவந்துள்ளமை பாராட்டத்தக்கது. இவ்வாறான பல தொகுப்புக்கள் பிரதேச ரீதியாக வெளி வரவேண்டும். ஈழத்து இலக்கியம் செழித்து வளர வேண்டும். இவ்வாறான ஒரு சிறந்த தொகுதியை வெளியிட்ட தொகுப்பாளர்கள் பாராட்டுக் குரியவர்கள். இத் தொகுதியில் உள்ள கவிதைகள் கவிதைக்குரிய கட்டுக்கோப்புக்கள் சிதையாமல் எழுதப்பட்டு இருப்பது சிறப்பு.

### 3] உ.நிசாரின் 'முத்துக் கணையாழி' சிறுவர் கதை

சிறுகதை ஆசிரியரும், கவிஞரும் ஆகிய உ.நிசார் குழந்தை இலக்கியம் படைப்பதில் வல்லவர் என்பதை இவரது சிறுவர் இலக்கிய படைப்புகள் எடுத்துக் காட்டுகின்றன. ஏற்கெனவே 7 சிறுவர் பாடல் தொகுதிகளை வெளியிட்ட உ.நிசாரின் முதலாவது சிறுவர் கதையாக 'முத்துக் கணையாழி' வெளி வந்துள்ளது.

வண்ண வண்ணப் படங்களோடு சிறுவர் களைக் கவரும் வகையில் புத்தக அமைப்பு அமைக்கப் பட்டிருப்பது சிறப்பு. பண்டைய காலப் புதையல் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு, மந்திரவாதிகள் மேற் கொள்ளும் அபார முயற்சிகள் இக்கதையில் சித்திரிக் கப்படுகின்றது. சிறுவர்களின் கற்பனைத் திறன், சிந்தனை, இரசனை, ஆர்வம் என்பவற்றைத் தூண்டு வதாக இக்கதை அமைந்துள்ளது.



நூல் : முத்துக் கணையாழி
வெளியீடு : பானு பதிப்பகம்
ஆசிரியர் : உ.நிசார்
விலை : 100/=

இலகுவான சொற் பிரயோகம், சிறந்த மொழி நடை, சிறுவர்களுக்கு புரியும்படியான சொற்கள் என சிறுவர்களை மையப்படுத்தி எழுதப் பெற்ற சிறந்த கதையாக இது அமைந்துள்ளது. இக்கதையில் வரும் மூன்று தலைகள் கொண்ட நாக பாம்புகள், மந்திர வாதிகள், குணசாமி, பூதம், குருநாதர், தம்பிராசா, பிரபு போன்ற பாத்திரங்கள் சிறுவர்களைக் கவரும் வகையில் ஆக்கப்பட்டுள்ளன.

சிறுவர்கள் மனதில் இவை இன்ப உணர்வை ஏற்படுத்தி அவர்களை மகிழ்விக்கும் நூலாக அமையும் என்பதில் ஐயம் இல்லை. சிறுவர்களிடையே வாசிப்பில் ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடிய இவ்வாறான நூல்கள் பல வெளி வரவேண்டும். இக்கதையில் வரும் சம்பவங்கள் திகில் உடையவையாகவும், அதியசயிக் கும் வகையில் அமைந்திருப்பதும் சிறுவர்கள் உள்ளங் களை கொள்ளை கொள்ளும் பெற்றோர் தமது சிறுவர் களுக்கு இவ்வாறான நூல்களை வாங்கி படிக்க தூண்டி அவர்களை வளம் பெற செய்ய வேண்டும்.

# கலை இலக்கிய நிகழ்வுகள்

1) **'ஜீவநதி'யின் 4ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டு விழா** அல்வாயில் உள்ள கலை அகத்தில் 2011 - 08 - 06 அன்று எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரையை கவிஞர் வே.ஐ.வரதராஜன் நிகழ்த்தினார். ஆசியுரையை அருள் தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் அடிகளாரும் சிவஸ்ரீ சோமஸ்கந்தராஜக் குருக்களும் வழங்கினர். வெளியீட்டுரையை எழுத்தாளர் கே.ஆர்.டேவிட் நிகழ்த்தினார். ஜீவநதி கவிதைகள் பற்றிய மதிப்பீட்டுரையை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் அவர்களும், ஜீவநதி கட்டுரைகள், ஜீவநதி நேர்காணல்கள் பற்றிய மதிப்பீட்டுரையை ஆசிரியர் அ.பௌநந்தி அவர்களும், ஜீவநதியின் சிறுகதைகள் பற்றிய மதிப்பீட்டுரையை விரிவுரையாளர் திருமதி க.ஞானசக்தி அவர்களும் நிகழ்த்தினர். ஏற்புரையை க.பரணீதரன் கூறினார்.சிறப்பு நிகழ்வாக 'மெய்ப்பட வேண்டும்' என்னும் தலைப்பில் சிறப்புக் கவி அரங்கம் கவிஞர் வதிரி சி.ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இக்கவி அரங்கத்தில் கவிஞர்களான நாச்சியாதீவு பர்வீன், மன்னூரான் ஷிஹார், பி.அமல்ராஜ், ஜீவநதி துணை ஆசிரியர் வெ.துஷ்யந்தன், அல்லாயூர் செ.கணேசன், வடஅல்வை க.சின்ன ராஜன் ஆகியோர் கவிதை பாடி அவையோர் உள்ளங்களைக் கவர்ந்தனர்.



2) **மாவை நித்தியானந்தனின் 'சின்ன சின்ன நாடகங்கள்', 'சட்டியும் குட்டியும்', 'நாய்க் குட்டி ஊர்வலம்' ஆகிய நாடக நூல்களினதும் சின்னச் சின்னக் கதைகள் நூலதும் பாப்பா பாரதி (சிவன் வீடியோ) வெளியீட்டு நிகழ்வு** யாழ். பல்கலைக்கழகத்தில் 07 - 08 - 2011 அன்று பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரையை செல்வி எம்.ஜெனோபா நிகழ்த்தினார், உரைகளை கலாநிதி த.கலாமணி, விரிவுரையாளர்களான இ.இராஜேஸ்கண்ணன், ஈ.குமரன் ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையை செல்வி ஆர்.வித்தியா நல்கினார்.

3) **வதிரி சி.ரவீந்திரனின் 'மீண்டு வந்த நட்கள்' கவிதைத் தொகுதி அறிமுக விழா** கொழும்பு தமிழ்ச் சங்கம் சங்கரம் பிள்ளை மண்டபத்தில் 21 - 08 - 2011 அன்று பேராசிரியர் மா.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. வரவேற்பு ரையை திரு.செ.கணேசன் நிகழ்த்தினார். நூல் அறிமுகவுரையை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி M.S.தேவகௌரி ஆற்றினார். வாழ்த்துரைகளை பேராசிரியர் சபா.ஜெயராசா, திரு. டொமினிக் ஜீவா, திரு. தி.ஞான சேகரன் ஆகியோர் கூறினார்கள். கருத்துரையை பேராசிரியர் செ.யோகராசா கூறினார். நயவுரையை ஸ்ரீஸ்கந்தராஜா நல்கினார். ஏற்புரையை நூலாசிரியர் நல்கினார். தொகுப்புரையை கவிஞர் மேமன் கவி தொகுத்து வழங்கினார்.

4) **தம்பு சிவாவின் இரு நூல்கள் அறிமுக விழா** இலண்டன் சிவன் சென்டரில் 28-08- 2011 அன்று எழுத்தாளர் வவுனியூர் இரா.உதயணன் தலைமையில் நடைபெற்றது. "சொந்தங்கள்" சிறுகதைத்தொகுதி பற்றிய ஆய்வுரையை எழுத்தாளர் திருமதி.நவஜோதி யோகரட்ணமும், "முற்போக்கு இலக்கியச் செம்மல்கள்" பற்றிய ஆய்வுரையை போசான் பாலசுகுமாமும் நிகழத்தினார்கள். ஏற்புரையை நூலாசிரியர் கூறினார்.

# பேசும் இதயங்கள்

1) 2011 யூலை ஜீவநதியில், ஞானம் ஆசிரியர் ஞானசேகரன் எழுதும் தொடர் கட்டுரையில் ஒரு முக்கிய விடயத்தை குறிப்பிட்டுள்ளார். அதாவது அவர் அவுஸ்திரேலியா சென்றிருந்த போது லெ.முருகபூபதியையும், கலாமணியையும் சந்தித்ததைப்பற்றிக் கூறியிருந்தார். அப்போது தாங்கள் சிறு பையனாக இருந்ததாகவும், இப்போது ஜீவநதி ஆசிரியர் ஆக இருப்பதுடன், தொடர் கட்டுரை ஜீவநதியில் வெளிவருவதற்கு தாங்களே காரணம் என்றும் குறிப்பிட்டுள்ளார். என்ன புதுமை! "ஆர்வம் மிகுந்த அச்சிறுவனின் கண்கள் அவன் விளையும் பயிர் என்பதை அப்போதே காட்டின" என்ற வரிகள் என் நெஞ்சில் ரீங்காரமிடுகின்றன. பத்திரிகைத்துறையிலும் நூல் வெளியீட்டிலும் தாங்கள் புரிந்துள்ள சாதனைகளை நோக்கும் போது தங்கள் இலக்கியக் குடும்பம், ஒரு தனி நிறுவனம் என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

ஜீவநதி ஆண்டுமலர் அபாரம். 4ஆவது ஆண்டமலர் அல்ல, 40 ஆவது ஆண்டுமலர் என கனதி அமைந்துள்ளது. அத்தனை விடயங்களும் வெறுமனே ஆக்கங்களல்ல. அவை அனைத்துமே சமகால இலக்கியப் பதிவுகளாகும். இந்த நான்கு வருடங்களில் நீங்கள் வெளியிட்ட நூல்களும் அத்தகையதே. சில விடயங்கள் பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும்.ஆசிரியத் தலையங்கம் – மனம் திறந்து பேசியுள்ளீர்கள். இதுவரை வெளிவந்துள்ள "ஜீவநதி" இதழ்கள் தங்கள் நேர்மையான போக்கை இனம் காட்டுகின்றன. குடும்பப் பத்திரிகை என்றோ, சின்னப் பெடியன் வெளியிடும் சஞ்சிகை என்றோ யாராவது பிதற்றினால் இவர்கள் ஜீவநதி இதழ்களைப் படிக்கவில்லை என்பது நிரூபனமாகிறது. நேர்காணல்கள் அத்தனையும் சிறப்பு. முருகபூபதியின் நேர்காணல் மிக முக்கியமானது. பெண்ணியா நேர்காணல் சமகால பெண் எழுத்தாளர் ஒருவரின் இலக்கிய எழுத்தாளுமையைக் காட்டுகின்றது. இவர் ஆரையூர்த்தாமரையின் தோழி. சூரியா இலக்கிப் பண்ணையில் வளர்ந்தவர்கள்.கவிதைகள் அத்தனையும் சிறப்பு. ஏதோ ஒரு வகையில் ஆழமான நோக்கைக் கொண்டுள்ளன. கட்டுரைகள் அனைத்தும் கனதியானவை. இன்றைய இலக்கியப் போக்குகளின் தடங்களைக் கூறுகின்றன.

**– அன்புமணி (மட்டக்களப்பு)**

2) 'ஜீவநதி' உளவியற் சிறப்பிதழ் கண்டேன். சிக்கலான உலகை விளங்கிக் கொள்ள உளவியல் ஆற்றும் பங்கினை உணர்த்தும் விதமான கட்டுரைகள், சிறுகதைகள் எனப்பாயும் 'ஜீவநதி'யாக அது பரிணமித்திருந்தது. திரு.கே.எஸ்.சிவகுமாரனின் 'உறைவிடம் மேலிடம்' உள்ளத்தைத் தொட்டது.1965ல் fees வாங்காத டொக்டர் இருந்திருக்கலாம்.இப்பொழுது இது சாத்தியமா?'சனல்' பண்ணக் காசு என, சகலதுக்கும் காசு பறிக்கும் கனவான்கள் டொக்டராய் காணுகின்ற காலமிது –2011. திரு.ச.முருகானந்தனின் 'விலகிடும் திரைகள்' வில்லங்கமான சில குடும்ப உறவுகளை நாசூக்காக, கட்டவிழ்க்கிறது. குற்றநடத்தைப் பாரம்பரியம் பற்றியதான பரணீதரனின் எண்ணக்கரு இயல்பான தன்மையதாய் இலகுவான விளக்கங்களுடன் அமைந்திருந்தது. இப்படியாக, அருட்தந்தை மற்றும், இராஜேஸ்கண்ணன், பேராசிரியர் சபா.ஜெயராசா ஆகியோருடன் அனைவரது ஆக்கங்களும் அதிபயன் தரக்கூடியதாக அமைந்திருந்தன.

**– ஷெல்லிதாசன் (திருகோணமலை)**


3) ஜீவநதி நான்காம் ஆண்டு மலர் கிடைக்கப் பெற்றேன். நன்றி. ஆக்கங்கள் யாவும் நன்றாக இருக்கின்றன. ஆயினும் ஒரு சில எழுத்துப் பிழைகளும் இல்லாமலில்லை. ஆசிரியத் தலையங்கம் வாசித்தேன். "ஜீவநதி சின்னப் பொடியன் நடத்தும் பத்திரிகை" என்று அவதூறு சொல்கின்றார்களாம். அது மட்டுமல்ல. ஆசிரியரின் தகப்பனாரே பதிப்பாசிரியராக இருப்பதால் இது ஒரு குடும்பப் பத்திரிகை என்றும் குறை கூறுகின்றார்களாம். இது ஆசிரியரின் ஆதங்கமாக இருக்கின்றது. அரசியல்வாதியின் மகன் இளவரசனாகவும், நடிகனின் மகன் நடிகனாகவும், டாக்டரின் மகன் டாக்டர் ஆகவும், எஞ்சினியர் மகன் எஞ்சினியர் ஆகவும் வலம் வர முடியுமென்றால் இலக்கியவாதியின் மகன் மட்டும் இலக்கியவாதியாக வரக் கூடாதா? அல்லது இலக்கியப் பத்திரிகை நடத்தக் கூடாதா? அடுத்து "ஜீவநதி சின்னப் பொடியனின் பத்திரிகை" என்ற குற்றச்சாட்டுக்கு வருவோம். பழசுகள் தான் இலக்கியப் பத்திரிகை நடத்த வேண்டும்; இளசுகள் நடத்தக் கூடாது என்று இந்த நாட்டில் சட்டமேதும் இருக்கிறதா என்ன? இலக்கியவாதி இளையவரா, அல்லது பழையவரா என்பது முக்கியமல்ல. அவர் இலக்கியத்தினூடாக வாசகர்களுக்குக் கூறும் செய்தி என்ன என்பதே முக்கிய மானதாகும். மேலும் ஜீவநதி நடத்துவதன் மூலம் பணரீதியான இலாபமொன்றும் கிடையாது என்பதை உறுதிப்படுத்து மாப் போல ஆசிரியர் ஜீவநதியின் வரவு செலவுக் கணக்கையும் விலாவாரியாக வெளியிட்டுள்ளார். ஜீவநதி மட்டு மல்ல. ஏனைய ஈழத்து இலக்கியச் சஞ்சிகைகள் கூட "இலாபத்துடன் இயங்கவில்லை" என்பது இலக்கிய வாதிகளும் இலக்கிய வாசகர்களும் நன்கறிந்த ஒரு விடயம் ஆகும். ஈழத்துத் தமிழ் இலக்கியம் தமிழ் நாட்டு வாசகர் களின் கரங்களைச் சென்றடையாமையே இதற்கு முக்கிய காரணமாக இருக்கின்றது. "போற்றுவார் போற்றட்டும் புழுதி வாரித் தூற்றுவார் தூற்றட்டும்; தூய உங்கள் பணியோ தொய்வின்றித் தொடரட்டும்" என்று வாழ்த்தி விடை பெறுகின்றேன். நன்றி.

**– கா.தவபாலன் (பேராதனை)**

# ஜெயா மோட்டர்ஸ்

மோட்டார் சைக்கிள்,
வாகன உதிரிப்பாகங்கள்
விற்பனையாளரும், முகவரும்

ஹெல்மெற், MRF Tyre, Plug
நீங்கள் நன்கறிந்த
Lotus ரயர்
உயர்தரத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.






கொடிகாமம் றோட்,
நெல்லியடி
தொ.பே. இல. 077 6511272


இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.